# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2315/33 – 2023 ජනවාරි මස 18 වැනි බදාදා – 2023.01.18

*2315/33 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்*

255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் அதிகாரத்திற்கிணங்க சீதாவகபுர நகர சபையினால் தயாரிக்கப்பட்டு இங்கு பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்படும் துணை விதிகளுக்கு மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க அங்கீகரிக்கப்பட்டது என்பதனை இங்கு அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் கார் வீஎஸ்வி யூஎஸ்பி,
பீஎச்டி (சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ,
விமானப்படையின் மார்ஷல் ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் காரியாலயத்தில்,
பத்தரமுல்லை.
*2023, சனவரி 03.*




*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## லோன்டரி மற்றும் துணிச் சலவை நிலையத்தை நடத்திச் செல்வது தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதியானது சீதாவக்கபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நடத்திச் செல்லப்படும் லோன்டரி மற்றும் துணிச்சலவை நிலையங்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய மற்றும் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட துணைவிதியாகும்.

குறுகிய பெயர்

2. இத்துணைவிதியானது சீதாவக்கபுர நகர சபையின் லோன்டரி மற்றும் துணிச்சலவை நிலையங்களை நடத்திச் செல்லல் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது.

3. இத்துணை விதியை இயற்றுவதற்கு நகர சபையானது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 157(9) ஆவது உப வாசகம் என்பவற்றின் கீழ் பிரதேச சபை அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

4. சீதாவக்கபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடம் இருந்து அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறாமல் லோன்டரி ஒன்றையோ அல்லது துணிச்சலவை செய்யும் நிலையம் ஒன்றையோ (இதன் பின்னர் வளாகம் என அழைக்கப்படும்) நடத்திச் செல்லக் கூடாது.

அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்தல்

5. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் எந்த ஒரு நபரும் இத்துணைவிதியுடன் இணைக்கப்பட்டுள்ள உப ஆவணமான விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்க வேண்டும்.

6. மேலுள்ள வாசகத்தின் கீழ் விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்கும் நபர்கள் அவ்விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை பூர்த்தி செய்து அதனை தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல், நேரில் கொண்டு சென்று சமர்ப்பித்தல் அல்லது அனுமதிக்கப்பட்ட அளவுக்கு ஏற்ப மின்னஞ்சலில் அனுப்புதல் என்பவற்றின் ஊடாக சமர்ப்பிக்கப்பட முடியும்.

அனுமதிப் பத்திரம் தொடர்பாக

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பம் செய்யும் எந்த ஒரு நபரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால் அந்நபருக்கு தவிசாளர் அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்கக் கூடாது.

(1) வளாகத்துடன் தொடர்புடையதாக நிரந்தரக் கட்டுமானங்கள் காணப்படுமாயின் அவை 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் என்பவற்றின் விதிமுறைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) சுத்தம் செய்யப்படுவதற்காக வளாகத்தினுள் கொண்டுவரப்படும் துணிகள் சுத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் தற்காலிகமாக சேமிக்கப்படுவதற்காக அறை வசதி காணப்பட வேண்டும்.

(3) வளாகத்தினுள் சலவைக்காக துணிகளைப் பொறுப்பேற்றல் மற்றும் சலவை செய்த துணிகளை விநியோகித்தல் ஆகிய இரு செயற்பாடுகளையும் ஒரு நபர் ஒரே நேரத்தில் மேற்கொள்ளக் கூடாது.

(4) துணிகளைச் சலவை செய்தல், உலர வைத்தல் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் என்பன ஒரே வளாகத்திலேயே இடம்பெறுமாயின்,

(அ) வளாகத்துடன் தொடர்புடைய காண்கள் நீர் இலகுவாக வடிந்தோடக்கூடிய வகையில் காணப்பட வேண்டியதுடன் கழிவு நீர் கழிவுநீர்க் குழி அல்லது உறிஞ்சும் குழி அல்லது மத்திய சுத்திகரிப்பு நிலையம் ஒன்றுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(ஆ) துணிச்சலவை மற்றும் உலர்த்தல் என்பவற்றுக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் சிறந்த இயங்கு நிலையில் காணப்பட வேண்டியதோடு தரையுடன் நன்கு பொருத்தப்பட்டு இருக்க வேண்டியதோடு அவ்வியந்திரங்களில் இருந்து வெளிவரும் சத்தம் வெளியில் பரவாத வகையில் பேணப்பட வேண்டும்.

(இ) வளாகத்தின் மின் சுற்றுக்கள் நிரந்தரமாக பொருத்தப்பட்டு காணப்பட வேண்டியதோடு தேவையான மின் அளவை வழங்கும் வகையில் சரியான செருகிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) துணிச் சலவையின் போது வெளிவரும் கழிவு நீர் வெளிக்கசிவுகள் எதுவுமின்றி இறுதியாக அகற்றப்பட வேண்டும்.

(உ) வளாகத்தினுள் காற்று மற்றும் ஒளி என்பன இலகுவாக உள்வரும் வகையில் ஜன்னல்கள் மற்றும் திறந்த பகுதிகள் காணப்பட வேண்டும் அல்லது செயற்கையாக ஒளி வழங்கள் மற்றும் குளிரூட்டப்படல் வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஊ) துணிகளை அழுத்துவதற்கான மேசைகள் மற்றும் ஏனைய கருவிகள் ஒழுங்காகப் பயன்படுத்தப்படும் வகையில் போதிய இடைவெளிகள் கொண்டதாக பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(எ) வளாகத்தினுள் பணிபுரியும் ஊழியர்களுக்கான போதிய அளவான சுத்தப்படுத்தும் வசதிகள் வழங்கப்பட வேண்டியதோடு ஆண்கள் பெண்கள் ஆகிய இருபாலாருக்கும் போதியளவான கழிப்பறை வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஏ) சுத்தம் செய்த துணிகளை தற்காலிகமாக சேமிப்பதற்காக சுத்தமான கொள்கலன்கள் காணப்படுவதோடு அத்துணிகள் எந்த வகையிலும் அழுக்கான துணிகளுடன் தொடுகையடையக் கூடாது.

(ஐ) அழுத்தப்பட்ட உடைகள் திரும்ப விநியோகிக்கப்படும் வரை அவற்றை வைப்பதற்காக மூடப்படக்கூடிய அறைகள் அல்லது அறைப் பிரிப்புகள் காணப்பட வேண்டும்.

(ஒ) வளாகத்தின் உள்ளக வடிவமைப்பு தேவையான பொழுது பொருத்தமான இடைவெளியைப் பேணும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(5) துணி சலவை செய்தல் வளாகத்துக்கு வெளிப்புறத்தில் இடம்பெறுமாயின் அந்நோக்கத்துக்கான பொது நீர் மூலம் ஒன்று பயன்படுத்தப்படக் கூடாததோடு விண்ணப்பதாரி பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்த வேண்டும்.

(அ) துணிகள் சலவை செய்யப்படுதல் அந்நோக்கத்துக்காக குறிப்பிடப்பட்ட இடத்தில் இடம பெற வேண்டியதுடன் உரிய இடம் காலத்துக்கு காலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஆ) துணிகளைச் சலவை செய்வதற்காக பயன்படுத்தப்படும் எந்தவொரு இரசாயனப் பதார்த்தமும் பயன்பாட்டின் பின்னர் அப்பொது நீர் மூலத்தில் அகற்றப்பட மாட்டாது என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(6) துணிகளைச் சலவை செய்தல் வளாகத்துக்கு வெளியே இடம்பெறும் வேளை வளாகத்தில் இருந்து கொண்டு வரப்படும் அழுக்கான துணிகள் கழுவித் துப்பரவு செய்யப்பட்ட துணிகளுடன் தொடுகை அடையாமல் இருப்பதை அல்லது கலக்காமல் இருப்பதை அத்துடன் கழுவிய பின் வளாகத்தினுள் கொண்டு செல்லப்படும் துணிகள் மீண்டும் அழுக்கான துணிகளுடன் தொடுகை அடையாமல் இருப்பதை அல்லது கலக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்கு அவசியமான வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) வாடிக்கையாளர்கள் தமது வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதிய இட வசதி காணப்பட வேண்டும்.

(8) திடீர் மின்வெட்டு அல்லது நீர் வழங்கல் துண்டிப்பு நிலைகளின் போது பயன்படுத்தத் தக்க வகையில் போதிய அளவில் தன்னியக்க மின் பிறப்பாக்கி மற்றும் நீர் களஞ்சியப்படுத்தும் வசதிகள் என்பன காணப்பட வேண்டும்.

(9) வளாகத்தின் உள்ளக வடிகாலமைப்பு மற்றும் கழிவு நீர் வடிகாலமைப்பு என்பன கழிவு நீர்க்குழி அல்லது உறிஞ்சும் குழிக்கு அனுப்பப்பட வேண்டியதோடு உறிஞ்சும் குழி அல்லது கழிவு நீர்க்குழி என்பன நீர் மூலத்தில் இருந்து குறைந்த பட்சம் 15.25 மீற்றர் தூரத்தில் காணப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரம் வழங்குதல்.

8. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைக் கோரி விண்ணப்பப் படிவம் ஒன்று கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள் தவிசாளரால்

(1) வாசகம் 7 இல் குறிப்பிடப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வளாகம் காணப்படின் குறித்த விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க வேண்டும்.

(2) வாசகம் 7 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத நிலையில் வளாகம் காணப்படின் குறித்த விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்பட வேண்டும்.

அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்.

9. (1) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்கு உரிய கட்டணம் அடிப்படைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் சபையினால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படுகின்ற கட்டணமாக அமைந்திருத்தல் வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக வளாகம் ஒன்றை சோதனை செய்வதற்காக சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அறவிடப்படும் கட்டணம் சட்டபூர்வமானதாகும்.

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு ஏற்ப இரத்துச் செய்யப்படாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் ஆண்டின் டிசம்பர் மாதம் முப்பத்தியோராம் திகதி வரை செல்லுபடியாகும்.

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் எந்த ஒரு நபரும் இதன் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(1) சலவைக்காக பெறப்படும் துணிகளை அவை சலவை செய்யப்படும் வரை குறித்தொதுக்கப்பட்ட கொள்கலன்களில் தற்காலிகமாக சேமிப்பதற்கான அறை வசதிகள் வளாகத்தினுள் காணப்பட வேண்டும்.

(2) துணிகளை சலவை செய்வதற்காகப் பயன்படுத்திய எந்தவொரு இரசாயனப் பதார்த்தமும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிந்துரைக்கு ஏற்ப அகற்றப்பட வேண்டும்.

(3) கழிவு நீரை அகற்றும் வடிகாண்கள் அல்லது குழாய்கள் கழிவு நீர்க்குழி அல்லது உறிஞ்சும் குழிக்கு இணைக்கப்பட வேண்டியதோடு அவை தரை மட்டத்தில் திறந்த நிலையில் அமைந்திருக்கக் கூடாது.

(4) பணியாளர்களுக்கான கழிப்பறைகள் தூய்மையானவையாகவும் தொற்று நீக்கப்பட்ட நிலையிலும் பேணப்பட வேண்டும்.

(5) துணிகளை அழுத்துவதற்கான எரிபொருளாக நிலக்கரி பயன்படுத்தப்படுமாயின் அவை முழுமையாக எரிக்கப்பட வேண்டியதோடு அதன் சாம்பல் தனியான கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டு அக்கழிவுகள் முறையாக அகற்றப்பட வேண்டும்.

(6) வளாகத்தினுள் பணியாளர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்படுமாயின்

(அ) போதியளவான சுத்த வசதிகளுடன் வேறான தங்குமிட வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) வளாகத்தினுள் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட செயற்பாடுகள் இடம் பெறும் பகுதிகளிலிருந்து தங்குமிட வசதிகள் மற்றும் உணவருந்தும் இட வசதிகள் வேறாக்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) எந்த ஒரு வகையிலும் தொற்று ஒன்றினால் அவதியுறும் அல்லது தொற்று ஒன்றின் பாதிப்புக்கு உட்பட்டவர் என சந்தேகிக்கப்படும் அல்லது அவ்வாறான தொற்று ஒன்றின் காவியாகச் செயற்படும் எந்த ஒரு நபரும் வளாகத்தினுள் பணிக்கு அமர்த்தப்படக் கூடாததோடு அவ்வாற நபர்கள் பணிக்கமர்த்தப்படவில்லை என அனுமதிப்பத்திரம் பெற்ற நபர் நபர் திருப்தியடைந்திருக்க வேண்டும்.

(8) இலங்கை முழுவதும் அல்லது அதன் பிரதேசமொன்றுக்கு அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தொற்று நோய் நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலையொன்று காணப்படுகின்றது என சந்தேகிக்க உறுதியான காரணிகள் காணப்படும் நிலையில் அத்தொற்று நோய் நிலையைக் கட்டுப்படுத்த சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளுக்கு அமைய காலத்துக்கு காலம் தவிசாளர் ஏற்படுத்தும் நிலையில் அவ்வனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப வளாகம் பராமரிக்கப்பட வேண்டும்.

(9) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் ஏதாவது தொற்று நோய் தொடர்பாக நியமங்கள் ஏற்படுத்தப்படும் நிலையில், வளாகத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் பரந்துரைகளுக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிடப்படும் அனைத்து அல்லது சில நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு தவிசாளர் பணிப்புரை வழங்குவது சட்டபூர்வமானதாகும்.

(அ) வளாகத்தில் அனுமதிப்பத்திரத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்கு தற்காலிகமாக இடை நிறுத்துதல்.

(ஆ) வளாகத்தினுள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேளை குறிப்பிட்ட சமூக இடைவெளியைப் பேணுதல்.

(இ) அழுக்குத்துணிகளைக் கையளித்தல் மற்றும் சலவை செய்த துணிகளை மீளப்பெறுவதற்காக தனித்துவம் மிக்க வழிமுறையொன்றைக் கையாளுதல்.

(ஈ) வளாகத்தினுள் இடம்பெறும் நடவடிக்கைகளுக்கு பிரயோகிக்கக் கூடிய சுகாதார வழிமுறைகளை பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு தெரியும் வகையில் தெளிவாகக் காட்சிப்படுத்துதல்.

(உ) காலத்துக்கு காலம் வழங்கப்படும் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வளாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டு தவிசாளருடன் ஒப்பந்தம் ஒன்றுக்குள் நுழைவது.

(ஊ) வளாகத்தினுள் பணிகளில் ஈடுபடும் வேலையாட்கள் குறித்த நோக்கங்களுக்காக முகக் கவசங்கள் மற்றும் கையுறைகளை அணிந்து பணிகளில் ஈடுபட வேண்டும்.

(எ) வளாகம் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும் என்பது.

12. வளாகத்தினுள் சேரும் கழிவுகள் அக்கழிவுகளை அகற்றுவதற்கென குறித்தொதுக்கப்பட்ட மூடிய கொள்கலன்களில் அகற்றப்பட வேண்டியதோடு வளாகத்தினுள் பாவனையின் பின்னர் அகற்றப்படும் முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் என்பன வளாகத்தில் அந்நோக்கத்துக்காகவே பேணப்படும் கால்களால் இயக்கப்படும் குப்பைத்தொட்டிகளில் மாத்திரமே அகற்றப்பட வேண்டும்.

13. வளாகத்தினுள் சேரும் கழிவுகள் நகர சபை முன்னெடுக்கும் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரமே அகற்றப்பட வேண்டும்.

14. ஒவ்வொரு வளாகத்திலும் இத்துணைவிதி மற்றும் இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பதத்திரத்தின் பிரதி என்பவற்றை காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தப் பட வேண்டும் என்பது.

15. இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் இயங்குகின்றதா என்பதைச் சோதனை செய்வதற்கு தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது ஏனைய எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் எந்தவொரு நியாயமான நேரத்திலும் வளாகத்தினுள் நுழைவதும் தேவையான மாதிரிகளைச் சேகரிப்பதும் சட்டபூர்வமானதாகும்.

வளாகத்துக்குள் நுழைவதற்கான அதிகாரம்.

16. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொண்ட வளாகமொன்று இத்துணைவிதியை மீறும் வகையில் அல்லது இத்துணைவிதிக்கு முரணான வகையில் செயற்படும் நிலையில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட நபருக்கு 30 நாட்களுக்கு மேற்படாத காலத்தைக் குறிப்பிட்டு இத்துணைவிதிக்கு இணங்க செயற்படுமாறு தவிசாளர் அறிவித்தல் ஒன்றை வழங்க வேண்டும்.

(2) இவ்வாசகத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் பெற்றவருக்கு குறித்த அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு நியாயமான காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கு ஏற்ப மேலதிகக் காலத்தினை தவிசாளரால் அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்க முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் முதலாவது அறிவித்தலில் குறிப்பிடப்பட காலத்துக்கு மேலதிகமாக பதினான்கு நாட்களுக்கு மேற்படலாகாது.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்.

17. மேலே வாசகம் 16 இன் கீழ் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்கி நடக்கத் தவறும் பட்சத்தில் தவிசாளர் தொடர்புடைய அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

தண்டனை.

18. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் வளாகம் ஒன்றை நடத்திச் செல்லல் அல்லது இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களை மீறுதல் குற்றமாவதோடு அக்குற்றம் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் வாசகம் 153 மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 153(2) என்பவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். அவ்வாறான குற்றம் இழைக்கப்பட்ட பின்னர் அத்துடன் தவிசாளரால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னரும் குற்றம் தொடருமாயின் மேலுள்ள சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகத் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பொருள் கோடல்.

19. இத்துணைவிதி தொடர்பாக பொருள் கோடல் அவசியப்படுத்தப்பட்டால், இத்துணைவிதியில்,
"சபை" என்பது சீதாவகபுர நகர சபையினைக் குறிக்கின்றது.
"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையில் தற்காலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபரை அல்லது அப்பதவி நிலையின் கடமைகளை நிறைவேற்றும் நபரைக் குறிக்கின்றது.
"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடையதாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.
"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் நகர சபையுடன் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு பொதுச் சுகாதாரப் பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.
"அடிப்படைச் சட்டம்" என்பது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தைக் குறிக்கின்றது.

மொழிகள் இடையான ஒவ்வாமை.

21. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் ஏற்படின், இதன் சிங்கள வடிவம் முதன்மையாகக் கருதப்படும்.

**முதலாவது உப ஆவணம்**

**......................... ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம்**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. தனிப்பட்ட முகவரி :
03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
04. தொலைபேசி இலக்கம் :
05. ஆரம்பித்த ஆண்டு :
06. லோன்டரி அல்லது சலவை நிலையம் நடத்தப்படும் இடத்தின் முகவரி :
07. கிராம அலுவலர் பிரிவு :
08. ஆதனவரி இலக்கம் :
09. அனுமதி பெறப்பட்ட கட்டடத்தின் திட்ட இலக்கம் மற்றும் தினம் :

மேற்தரப்பட்ட தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்தரப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். ............................. ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைக் கோருகின்றேன்.

திகதி :-

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்

வருமான ஆய்வாளர்,

பிற்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திர விண்ணப்பதாரி தொடர்பான உங்களின் அவதானம் மற்றும் பரிந்துரைகளை விரைவாக அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி : ................................

செயலாளர்

செயலாளர்,
அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை.

திகதி : .............................................
வருமான ஆய்வாளர்

தவிசாளர்,

மறுபுறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன்.

திகதி : ................................
செயலாளர்

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க அனுமதி வழங்குகின்றேன்.

திகதி : ................................
தவிசாளர்

EOG 01 - 195/ 1

---

## பொது இடங்களைத் தொற்று நீக்கம் செய்யும் ஏற்பாடுகள் தொடர்பான துணை விதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொது இடங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் என்பவற்றை தொற்று நீக்கம் செய்தல் உள்ளடங்கலான விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர பிரதேச சபையின் பொது இடங்களைத் தொற்று நீக்கும் ஏற்பாடுகள் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது. குறுகிய பெயர்.

3. இத்துணை விதியை இயற்றுவதற்கு நகர சபையானது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 இனது வாசகம் 153 மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ் அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) மக்கள் ஒன்று கூடும் இடங்களை அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அல்லது வழிபாட்டுத் தலங்கள் உள்ளடங்கலாக குறிப்பிட்ட நோக்கம் ஒன்றுக்காக ஒன்று கூடும் இடங்களை தலைவர் தொற்று நீக்கம் செய்ய அல்லது அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். தொற்று நீக்கம் செய்வதற்கான சூழ்நிலைகள்.

   (1) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் மக்கள் ஒன்று கூடுகின்ற அல்லது ஒன்று கூடிய இடங்கள் அல்லது வழிபாட்டுத் தலங்கள் தொற்று நீக்கம் செய்யப்பட தேவைப்படுத்தப்படும் சந்தர்ப்பம்.

(2) இலங்கை முழுவதும் அல்லது அதன் பகுதியொன்றில் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் பிரகடனப்படுத்துப்பட்டுள்ள நிலையில் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கமைய அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலைக்கான காரணிகள் காணப்படுகின்றன என சந்தேகிக்க உறுதியான சான்றுகள் உள்ளன என தலைவர் தீர்மானிக்கும் சந்தர்ப்பம்.

(3) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் கண்டறியப்படாத நோயொன்றினால் நபர் ஒருவர் மரணித்ததுடன் மரணித்த நபர் பயணம் செய்த இடங்கள் அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பம்.

(4) வழிபாட்டுத் தலம் பெரிய மக்கள் கூட்டம் ஒன்று கூட்டப்படுகின்ற அல்லது கூடுகின்ற அல்லது மத அனுடானம் நிறைவுற்ற பின்னர் அவ்விடத்தை தொற்று நீக்கம் செய்வது அவசியம் என சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தீர்மானிக்கும் சந்தர்ப்பம்.

(5) குறிப்பிட்ட காலம் ஒன்றுக்கு எந்த வித நடவடிக்கையும் இடம் பெறாத வளாகம் ஒன்றில் மீண்டும் மக்களை ஒன்றுகூட்டவுள்ள சந்தர்ப்பம்.

(6) நோய்த்தொற்று ஏற்பட்டுள்ள நபர் ஒருவர் அல்லது நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் அல்லது அவ்வாறான நோய்த்தொற்று நிலையில் உள்ளவர் ஒருவருடன் தொடர்பில் இருந்த நபர் ஒருவர் மக்கள் ஒன்று கூடும் இடமொன்றுக்கு சென்று வந்த அல்லது அங்கு செயற்பட்ட சந்தர்ப்பம்.

(7) தமது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அல்லது இலங்கையின் எப்பாகத்திலாவது தொற்று நோயொன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கேற்ப பொதுவான பொது இடங்கள் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(8) எந்த ஒரு வழிபாட்டுத்தலம் அல்லது பொது இடமொன்றில் மக்கள் ஒன்று கூடும் நிலைகள் காணப்படும் வேளை குறித்த இடங்கள் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி அறிவுரை வழங்கும் சந்தர்ப்பம்.

(9) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுச் சுகாதாரத்தை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கில் எந்த ஒரு பொது இடத்தையும் தொற்று நீக்கம் செய்வதற்கான திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படும் சந்தர்ப்பம்.

(10) மிகவும் துல்லியமான சுகாதாரப் பராமரிப்பு வழங்கப்படும் நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கு ஏற்ப எந்த ஒரு பொது இடத்தையும் தொற்று நீக்கம் செய்வதற்கு தலைவர் தீர்மானம் மேற்கொள்ளும் சந்தர்ப்பம்.

தொற்றுநீக்கம் செய்யுமாறு தரப்பு ஒன்றினைப் பணித்தல்.

5. பிரதேசத்தில் தொற்று நோய் பரவும் சாத்தியம் காணப்படும் நிலையில் அல்லது அவ்வாறு நிகழலாம் என சந்தேகம் நிலவும் போது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் மக்கள் ஒன்று கூடுவதற்காக எந்தவொரு வளாகமும் பயன்படுத்தப்படுமாயின் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கு ஏற்ப நிகழ்வு ஒழுங்கமைப்பாளருக்கு அல்லது குறித்த நபருக்கு பின்வரும் பணிப்புரைகளை தலைவர் விடுப்பது சட்டபூர்வமானதாகும்.

(1) மக்கள் வளாகத்தில் ஒன்று கூடுவதற்கு முன்னர் குறித்த வளாகம் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(2) குறித்த வளாகத்தில் ஒன்றுகூடிய மக்கள் கலைந்து சென்ற பின்னர் வளாகம் மீண்டும் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

(3) வளாகம் பயன்பாட்டுக்கு முன்னரும் பின்னரும் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டும்.

6. மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரிவின் கீழ தலைவரால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டியது பணிப்புரையைப் பெறும் நபரின் பொறுப்பும் கடமையுமாகும்.

7. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட அட்டவணைப் பிரகாரம் பொது மற்றும் வணக்கத்தலங்களை தொற்று நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை தலைவரால் மேற்கொள்ள முடியும்.

தண்டனை

8. மேலே பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்ட தலைவரால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு ஏற்ப குறித்த நபர் செயற்படாமல் இருப்பது குற்றமாவதோடு அக்குற்றம் மாஜிஸ்திரேட் நீதி மன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் அத்தியாயம் 255 இனது உப பிரிவு 153 நகர சபைகள் சட்டத்தின் (2) இன் கீழ் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

9. மேலே பிரிவு 5 இன் கீழ் தவிசாளரால் வழங்கப்படும் பணிப்புரைகள் பின்பற்றப்படாத பட்சத்தில் தலைவர் உரிய வளாகத்தை தொற்று நீக்கம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கான செலவுகளை பணிப்புரைகளைப் பின்பற்றாத நபரிடமிருந்து அறவிடுவது சட்டபூர்வமானதாகும்.

10. இத்துணைவிதியில் பொருள் கோடல் அவசியமாயின், இத்துணைவிதியில், பொருள் கோடல்.

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையாகும்.

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையில் தற்காலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் அல்லது அப்பதவி நிலையின் கடமைகளை நிறைவேற்றும் நபராகும்,

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது தொடர்புடைய பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் சுகாதாரப் பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி பதவியை வகிக்கும் நபராகும்,

"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது பிரதேச சபையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவி நிலை வகிக்கும் அல்லது தொடர்புடைய பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றும் நபராகும்.

"நபர்" என்பது நிறுவனம் ஒன்றின் தனி நபர் அல்லது முகாமைத்துவப் பணிப்பாளர் அல்லது முகாமையாளர் அல்லது அந்நிறுவனம் குறிப்பிடப்படும் போது அந்நிறுவனத்தின் அந்நிறுவனம் சார்பாக செயற்படும் எந்த ஒரு தனி நபரையும் குறிப்பதாகும்.

11. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வடிவங்கள் இடையே ஒவ்வாமை ஒன்று ஏற்படும் போது சிங்கள மொழி வடிவம் மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழிகள் இடையான ஒவ்வாமை.

EOG 01 - 0195/ 2

## நகர சபையின் விழா மண்டபங்களுக்கான துணை விதி

1. இத்துணை விதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் விழா மண்டபங்களின் பராமரிப்பின் போது பொதுமக்களின் சுகாதாரத்தை பேணுவதற்காக அவ்வாறான இடங்கள் ஒழுங்குபடுத்தப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு இயற்றப்பட்ட துணை விதியாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் விழா மண்டபங்கள் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது. குறுகிய பெயர்.

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் பிரிவு 153 மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப பிரிவு 157(9) என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது. சட்டம் இயற்றும் அதிகாரம்.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடமிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி (இங்கு சில இடங்களில் வளாகம் என அழைக்கப்படுகின்ற) விழா மண்டபம் ஒன்றையும் நடத்தலாகாது.

5. இத்துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் எவரும் இத்துணைவிதிக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்தி அதற்காக விண்ணப்பிக்கலாம்.

6. மேலுள்ள வசனத்தின் படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் வேளை, அதற்குரிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு தவிசாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் மூலம் அல்லது நேரடியாகக் கையளிப்பதன் மூலம் அல்லது சபை அனுமதித்துள்ள அளவுக்கு ஏற்ப அமைந்துள்ள மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படலாம். அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தல்.

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் அனைவரும் இங்கு கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதவிடத்து குறித்த விண்ணப்பதாரிக்கு தவிசாளரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது.

(1) வளாகத்தில் காணப்படும் அனைத்து கட்டடங்களும் கட்டப்படும் வேளை 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ்க் காட்டப்பட்டு இருக்க வேண்டியதோடு அங்கு,

(அ) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் வலயத்திற்கு உட்பட்டிருந்தால், கட்டுமானப் பணிகள் அதற்கிணங்க அமைய வேண்டும்.

(ஆ) கட்டுமானப் பணிகள் பயன்பாட்டிற்கு முன்னதான அதற்குரிய ஒப்புதல் சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

(2) வளாகத்தினுள் காணப்படும் கட்டடங்கள் நிரந்தரக் கட்டுமானப் பொருட்களால் நன்கு கட்டப்பட்டு இருக்க வேண்டும்.

(3) விழா மண்டபங்களில் குறுக்கு மாசடைதலைத் தடுக்கும் வகையில் தேவையான இட ஒக்கீடுகள், பிரிக்கவும், நிலைநிறுத்தவும் முடியுமான வகையில் உள்ளக அமைப்பு தயார் செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் போதுமான இடைவெளியைப் பேணி அவை வடிவமைக்கப்பட வேண்டும்.

(4) மண்டபங்களுக்குள் தடங்கல் இல்லாமல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதுமான இடவசதிகள் பேணப்பட வேண்டும்.

(5) பூச்சிகள் மற்றும் மாசுபடுத்தும் பொருட்கள் உள்நுழையாதவாறும் தங்கிநிற்காதவாறும் கட்டிடங்கள் உள்ளிட்ட வளாகங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(6) எளிதாகவும் முறையாகவும் சுத்தம் செய்வதற்கு எவ்வாறும் உணவு சுகாதாரத்தை சரியான முறையில் கண்காணிப்பதற்கும் வசதியாக வளாகம் வடிவமைக்கப்பட வேண்டும்.

(7) வளாகத்தில் அரங்கங்கள் சரியான தரத்துடன் இருக்க வேண்டும் என்பதுடன் உள்வரும் ஒலியை உறிஞ்சும் வகையில் மண்டபங்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(8) மண்டபத்தின் உட்புறம் குளிரூட்டப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது போதுமான அளவில் காற்றோட்டம் கிடைக்கும் வகையில் மண்டபத்தின் மண்டபத்தின் பரப்பளவில் பதினைந்தில் ஒரு பங்கிற்குக் குறையாமல் திறக்கக்கூடிய ஜன்னல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(9) மண்டபத்தினுள் போதுமான வெளிச்சம் இயற்கையாகவோ செயற்கை முறையிலோ ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(10) கதவுகள் மென்மையான மற்றும் உறிஞ்சும் தன்மையற்ற மேற்பரப்பைக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் பொருத்தமான போது தானாக மூடப்படும் வகையில் பொருத்தப்பட வேண்டும்.

(11) வளாகம் முழுவதும் தீயணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(12) வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எந்தவொரு சாதனங்கள் அல்லது கட்டமைப்புகளிலிருந்தும் பூஞ்சன வளர்ச்சி அல்லது கசிவு இருக்கக்கூடாது.

(13) வளாகத்தில் ஜன்னல் திறப்பான்கள் இலகுவாக சுத்தம் செய்யக் கூடியவையாக இருக்க வேண்டும் என்பதுடன் பூச்சிகள் உள்ளே நுழைவதைத் தடுக்க வலைகள் பொருத்தப்பட வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் தனித்தனியான கழிப்பறை வசதிகள் இருக்க வேண்டும் என்பதுடன் மேலும் இவை ஆண் பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக பராமரிக்கப்பட வேண்டும்.

(15) வளாகத்தின் கட்டிடங்கள் விசேட தேவையுடையோருக்கான அணுகல் வசதிகளுக்கு தயாராக அமைக்கப்பட வேண்டும்.

(16) கழிவு நீர் மற்றும் கழிவுநீர்த் திரட்டுக்கள் நீர் தேங்குவதைத் தடுப்பதற்கான உரிய சரிவுடன், கூடிய மூடிய வடிகாண்களாக நிறுவப்பட்டிருக்க வேண்டியதுடன் அனைத்து வடிகாண்களும் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பிற்கு ஏற்ப கட்டப்பட்ட கழிவுநீர்க் குழிகள், உறிஞ்சும் குழிகள் அல்லது மத்திய அகற்றல் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டியதுடன் அவற்றினால் ஏற்படும் மாசுக்களை இறுதி அகற்றலுக்கும் வளாகத்திற்குமிடையில் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட நீர்ப்பொறி அல்லது திட்டமொன்றினூடாக பின்பற்றப்பட வேண்டும்.

(17) வளாகத்தில் சேரும் கழிவுகளை பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் கழிவு முகாமைத்துவ திட்டத்தின்படி கையளித்தல் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதார பரிசோதகர் பரிந்துரைக்கும் கழிவகற்றல் முறைமையொன்றின் மூலம் கழிவகற்றலை மேற்கொள்ள வேண்டும்.

(18) வளாகத்தில் பயன்படுத்தப் போதுமான அளவு குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் கீழ் கொள்கலன்களில் சேமிக்கப்பட வேண்டும்.

(19) வளாகத்தினுள் துருப்பிடிக்காத அலுமினியம் அல்லது பிற பொருத்தமான பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கை கழுவுவதற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(20) வளாகத்தில் உணவு தயாரிக்கப்படும் இடத்தில்:

(அ) தரை மற்றும் சுவர்கள் கழுவக்கூடிய, வழுக்காத மற்றும் நீரை உறிஞ்சாத பொருட்களினால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு மேற்பரப்பும் எளிதில் கழுவக்கூடிய தொற்றுநீக்கிகள் மற்றும் சலவைப் பொருட்களுக்கு எதிர்த்தாக்கம் விளைவிக்காதவனாகக் காணப்பட வேண்டும்.

(இ) கூரையானது நீராவி ஒடுங்கலை மிகவும் குறைந்த அளவில் பேணும் வகையிலும் பூஞ்சணம் மற்றும் பங்கசு தோன்றுவதை தடுக்கும் வகையில் கட்டப்பட்டதாக அமைந்திருக்க வேண்டும்

(ஈ) ஜன்னல்கள் மற்றும் ஏனைய திறந்த பகுதிகள் காணப்படின் அவை பூச்சிகள் உள்நுழையாத வகையில் மூடி ஒன்றினால் மூடப்பட்டு பேணப்பட வேண்டும்

(உ) வெளியில் இருந்து காற்று உள்வருவதற்கு மற்றும் வெளியேறுவதற்கு ஏற்ற வகையில் காற்று உறிஞ்சும் விசிறிகள் பொருத்தப்பட வேண்டும்.

(21) வளாகத்தில் வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறும் இடத்துடன் தொடர்புடையதாக

(அ) உணவைப் பரிமாறுவதற்கான இடைவெளிகள் போதுமான தூரத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அதிகமான இடைவெளியுடன் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும்.

(ஆ) உணவு உண்பதற்குரிய இடம் சுற்றுச் சூழலில் ஒரு திறந்த வெளியாக அமைந்திருக்கும் வேளை அது நன்கு காற்றோட்டம் மிக்கதாகவும் பறவைகள் மற்றும் வேறு விலங்குகள் உள்நுழையாத வகையிலும் தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(22) வருகை தருவோரின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான நிறுத்தல் வசதிகள் காணப்பட வேண்டும்.

(23) வளாகத்தினுள் பணிபுரியும் ஊழியர்கள் தொடர்பாக

(அ) தங்கியிருந்து வேலை செய்பவர்களாகவிருந்தால் தங்குவதற்கு உரிய சுகாதார வசதிகளுடன் போதுமான அறைகள் காணப்பட வேண்டியதோடு அவ்வறைகள் உணவு தாயரித்தல், மூலப்பொருட்கள் களஞ்சியப்படுத்தும் இடங்களில் இருந்து வேறுபடுத்தப்பட்ட இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

(ஆ) தங்கியிருக்கும் ஊழியர்கள் காணப்படும் நிலையில் நபர் ஒருவருக்கு குறைந்த பட்சம் நான்கு சதுர மீற்றர் பரப்பளவு உறங்குவதற்காக ஒதுக்கப்பட்ட இடம் காணப்படல் வேண்டும்.

(இ) போதுமான கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(24) அவசரகால மின் தடையின்போது பயன்படுத்துவதற்கு போதுமான கொள்ளளவு கொண்ட தன்னியக்கமான இயங்கும் தன்மை கொண்ட மின் பிறப்பாக்கி வசதிகள் காணப்பட வேண்டும்.

8. இந்த துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கப்படும் உரிய விண்ணப்பப்படிவம் பெறப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் தவிசாளர் — அனுமதிப்பத்திரம் வழங்குதல்.

(1) வாசகம் 7 இன் கீழ் உள்ள தகவல்களுக்கு இணங்கும் பொழுது விண்ணப்பதாரிக்கு வளாகத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்

(2) வாசகம் 7 இன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்கவில்லையாயின் காரணங்கள் குறிப்பிடப்பட்டு உரிய விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட வேண்டும்.

9. (1) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்காக அறவிடப்படும் கட்டணம் அடிப்படைச் சட்டத்தினால் குறிப்பிடப்படும் விதிகளுக்கு அமைவாக சபையினால் நிர்ணயிக்கப் பட்டு அறவிடப்படும் கட்டணமாக அமைந்திருக்க வேண்டும். — அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்.

(2) அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக உரிய இடத்தினை பரிசோதனை செய்வதற்காக சபையினால் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு அறவிடப்படுவது சட்டப்பூர்வமானதாக அமைய வேண்டும்.

10. இத் துணை விதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதி முறைகளுக்கு ஏற்ப முன்னரே இரத்துச் செய்யப்படாதவிடத்து அனுமதிப்பத்திரம் உரிய ஆண்டின் திசெம்பர் முப்பத்தியோராம் திகதி வரை செல்லுபடியாகும். — பரிசோதனை கட்டணம்.

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். — செல்லுபடியாகும் காலம்.

(1) இலங்கை முழுவதும் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்பாக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தொற்று நோய் நிலை அறிவிக்கப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது அதிகாரத்திற்குட்ட பிரதேசத்தில் ஏதேனும் தொற்று நோய் நிலை ஏற்படுவதற்கான விடயங்கள் உள்ளது என திருப்தியடையும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்து வதற்காக சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் விதிகள் எவையுமிருப்பின் அவ் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் பராமரிக்கப்படல் வேண்டும். — அனுமதிப் பத்திரம் தொடர்பான நிபந் தனைகள்.

(2) வளாகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்துதல் மற்றும் நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் அதற்கேற்ப தொற்று நோய் நிலை அறிவிக்கப்பட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கேற்ப சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளர் ஏற்படுத்தும் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(3) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்றுநோய் நிலை ஏற்படும் ஆபத்துள்ளது என சந்தேகத்தை ஏற்படுத்தும் விடயங்கள் காணப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேவைகளை எதிர்பார்த்து வளாகத்துக்குள் வருகை தரும் அனைத்து நபர்களுக்கும் ஏற்றவாறு வழங்கப்பட்ட சுகாதார அறிவுரைகளுக்கு ஏற்றவாறு வளாகத்துடன் வருகை தராவிட்டால், அந்த வளாகத்தில் சேவைகள் எதுவும் வழங்கப்பட்டக் கூடாது.

(4) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் நிலைக்கான ஏதேனும் விடயங்கள் காணப்படும் நிலையில் அல்லது அவ்வாறான ஆபத்து நிலவும் நிலையில் அதிலிருந்து பாதுகாப்புப் பெற பின்பற்ற வேண்டியவை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வளாகத்தினுல் முறையாக செயற்படுத்தப்பட வேண்டியதோடு அவ்வாறு செயற்படுத்தப்படுத்தப்படுகின்றன என அனுமதிப்பத்திரம் பெற்றவர் திருப்தி அடைய வேண்டும்.

(5) வளாகத்தில் உள்ள வடிகால்களும் எளிதில் வடிந்தோடக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டியதுடன் ஏதாவது கழிவு நீர், கழி நீர்த் திரட்டுகள் போன்றன அங்கீகரிக்கப்பட்ட முறைகளின் படி கழிவுநீர்க் குழிகள், உறிஞ்சும் குழிகள் அல்லது மத்திய கழிவகற்றல் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டியதுடன் அவற்றினால் ஏற்படும் மாசுக்களைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) வளாகத்தினுள் உள்ள அனைத்து கழிப்பறைகள் மற்றும் கை கழுவும் இடம் என்பன எப்போதும் தொற்றுநீக்கிகள் பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டியதோடு அவை சுத்தமாக இருப்பது தொடர்பில் திருப்தி அடைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(7) வளாகத்தின் உள்ள தரை எளிதில் வழுக்காதவாறு தயார் செய்யப்பட்டிருக்க வேண்டியதோடு இலகுவான ஒரு முறையினால் சுத்தம் செய்தல் மேற்கொள்ளப்படுமாயின், அதனை வாடிக்கையாளர்கள் காணும் வகையில் அவ்விடத்தில் அதனைப்பற்றிக் குறிப்பிடும் அறிவித்தல் பலகையொன்று வைக்கப்பட வேண்டும்.

(8) வளாகத்தில் அமைந்துள்ள வடிகாண்கள் தண்ணீரைத் தேக்கி வைக்காத வகையில் அமைக்கப்பட வேண்டியதோடு அவை தினமும் இரு தடவைகள் தொற்றுநீக்கி கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(9) வளாகத்தில் உள்ள எந்தவொரு வடிகால் அல்லது கழிவுநீர் குழாய்களும் எந்த ஒரு வகையிலும் பொது வீதி வடிகாணுக்கோ அல்லது வெளிப்புறப் பகுதிக்கோ அனுப்பக் கூடாது.

(10) வளாகத்தினுள் கழிவு நீரோட்டம் அல்லது கழிவு நீர் அகற்றல் போன்ற விடயங்களால் வெளிப்புறத்தில் எந்தவொரு துர்நாற்றமும் எழாதபடி பராமரிக்கப்பட வேண்டும்.

(11) உணவு சமைக்கும் போதும், குளிரூட்டும் போதும் அவற்றுக்கு தேவையான வெப்பநிலைகளை சீராக்குவதற்கான போதிய வசதிகள் காணப்பட வேண்டியதோடு அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பதற்குரிய பதிவுகள் காணப்பட வேண்டும்.

(12) உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன கருவிகள் என்பன பின்வரும் தேவைகளுக்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டும்.

(அ) உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன எந்தவொரு நச்சுக்கள், சுவைகள் அல்லது நாற்றங்களை பரப்பாத அல்லது உறிஞ்சாத பொருட்களினால் மற்றும் துருப்பிடிக்காத பொருட்களினால் தயாரிக்கப்பட்டனவாக அமைந்திருக்க வேண்டும்.

(ஆ) அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன இலகுவில் சுத்தம் செய்யக்கூடியன வாக அமைந்திருக்க வேண்டும்.

(இ) கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தும் பாத்திரங்கள் உலோகத்தினால் அல்லது கசிவு ஏற்படாத பொருட்களினால் செய்யப்பட்டனவாக அமைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) பராமரிக்கப்படும் அனைத்து உபகரணங்களும் கருவிகளும் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் நல்ல நிலையில் காணப்பட வேண்டும்.

(13) உணவு விநியோகிப்பதற்கு பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் உணவின் சுவைக்கு தீங்கு விளைவிக்காத வகையில் பரிமாரக்கூடிய வகையில் காணப்பட வேண்டும்.

(14) வளாகத்தினுல் உணவு சமைக்க தேவையான பொருட்களை, சமைத்த உணவு அல்லது அத்தகைய பொருட்களைத் தனித்தனியாக வைப்பதற்கு குளிர்சாதன வசதிகள் காணப்பட வேண்டும்.

(15) உணவு தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் பழங்கள் மற்றும் காய்கறிகளை நன்றாக கழுவி சுத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும்.

(16) வளாகத்தின் பயன்பாட்டுக்காக எடுக்கப்படும் தண்ணீர் பாதிப்பற்ற பாத்திரங்களில் மாசுபடாத வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(17) வளாகத்தில் பயன்படுத்தப்படும் பனிக் கட்டிகள் குடிநீரில் இருந்து தயாரிக்கப்பட்டனவாக அமைதல் வேண்டும்.

(18) வளாகத்தினுள் தண்ணீரைக் கொண்டு செல்லும் குழாய்கள் வேறுபட்ட குழாய்களாக அல்லது ஏனைய குழாய்களில் இருந்து வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(19) வளாகத்தினுல் அனைத்து சமைத்த உணவுகளும் ஆபத்தின்றி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுவதற்கான உள்ளக செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதோடு அதனை ஒழுங்குபடுத்தும் குறிப்பிட்ட பணிக்காக பணியாளர்களும் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(20) உணவிற்காகக் கொண்டுவரப்படும் இறைச்சி அல்லது மீன் வளாகத்தில் ஒரு தனி குளிர்சாதன பெட்டியில் சேமிக்கப்பட வேண்டும் மற்றும் பயன்படுத்தப்படும் வரை எப்போதும் இரண்டு பாகை செல்சியஸ் வெப்பநிலையில் வைக்கப்பட வேண்டும்.

(21) வளாகத்தினுள் உணவு பரிமாறுதல், அளித்தல் அல்லது ஒன்றிணைத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைவரும்

(அ) தமது கைகள் அல்லது விரல்களைத் திறந்துள்ள நிலையில் உணவைப் பிடித்தல் கூடாது.

(ஆ) உணவைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கையுறைகள் சிறந்த முறையில் உணவைக் கையாள்வதற்கு ஏதுவானவைகயாக அமைந்திருக்க வேண்டும்.

(இ) இரு கைகளையும் துடைப்பதற்கு சுத்தமான துவாயைப் பயன்படுத்த வேண்டும்.

(ஈ) உணவு பரிமாறுவதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து பீங்கான், கோப்பைகளின் அடியில் எவ்வித உணவுப் பொருட்களும் தொடுகையடையாத நிலையில் எப்போதும் பராமரிக்கப்பட வேண்டும்.

(உ) உணவு பரிமாறுவதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களும் சுத்தமாக பேணப்பட வேண்டியதோடு அவை தனித்தனி பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஊ) எந்த வகையிலும் தமது செயற்பாடுகளால், பயன்பாடுகளால் நுண்ணுயிர்களின் பரவல் ஏற்படாமல் மற்றும் மாசுபடாமல் உணவு உட்கொள்ளல், சேகரித்தல் பரிமாறப்படல் என்பன உறுதிப்படுத்தப்படும் வகையில் பணியாளர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

(22) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் உரிய தொற்றுநோய் நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கமைய அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் நிலவுவதாக தவிசாளர் அறிவித்தல் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தில் வளாகத்தில் உணவு தயாரித்தல், பயன்படுத்துதல், பரிமாறுதல் அல்லது சேகரிக்கும் பணிகளில் ஈடுபடும் அனைவரும் இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு ஒழுங்கு முறைக்கும் மேலதிகமாக, சூழ்நிலைக்கேற்ப சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுரைக்கேற்ப தவிசாளர் அறிவுறுத்தியுள்ள விதகளுக்கு உட்பட்டு வளாகம் பராமரிக்கப்பட வேண்டும்

(23) வளாகத்தினுள் உணவு பரிமாறுவதற்கும் பயன்பாட்டிற்கும் உள்ள மேசைகள் மிகவும் சுத்தமான நிலையில் பேணப்பட வேண்டியதோடு அனைத்து பயன்பாடு மற்றும் பரிமாறல்களுக்கும் பின்னர் அவை தொற்று நீக்கி பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டியதுடன் அவற்றினை துடைக்கப் பயன்படுத்தப்படும் துவாய்கள் சுத்தமான நிலையில் காணப்பட வேண்டும்.

(24) வாடிக்கையாளர்களின் கைகள் படுகின்ற வளாகத்தினுள் உள்ள மேற்பரப்புகள் தொற்று நீக்கி பயன்படுத்தி தவறாமல் எப்போதும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(25) வளாகத்தின் செயற்பாடுகள் இடம்பெறும் பகுதிகளிலும் உணவு உண்ணும் பகுதிகளிலும் போதுமான அளவில் தொற்று நீக்கிகளுடன் கை கழுவுதல் மற்றும் கை உலர்த்துவதற்காக போதுமான வசதிகள் காணப்படுவதோடு வளாகத்தினுள் போதிய அளவில் மின் விளக்குகள் பராமரிக்கப்பட வேண்டும்.

(26) வளாகத்தினுள் குவியும் கழிவுகள் அகற்றப்பட முன்னர் தேக்கி வைத்திருக்கும் பொழுது அவை வளாகத்தினுள் பயன்படுத்தப்படும் ஏனைய பொருட்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மற்றும் அவற்றின் மூலம் உணவு மாசடைவதற்கான காரணிகள் உருவாகாத வகையிலும் பராமரிக்கப்பட வேண்டும்.

(27) வளாகத்தில் எந்தவொரு வகையிலும் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகள் வளர்க்கப்படலாகாது.

(28) வளாகத்தில் பணிபுரிபவர்கள் உணவுகளுக்கு ஏற்ற உணவுகளுக்கு ஏற்ற சுகாததார நடவடிக்கைகள் பற்றிய பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டியதோடு சுகாதார வைத்திய அதிகாரி பரிந்துரைக்கும் காலப்பகுதிக்குள் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் தகுந்த ஆரோக்கிய நிலையில் உள்ளனரா என பரிசோதிக்கப்பட வேண்டும். அவ்வாறான மருத்துவ அறிக்கைகள் எந்நேரமும் பரிசோதிக்கப்பட முடியுமான வகையில் வளாகத்தில் பேணப்பட வேண்டும். அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மருத்துவரீதியான மற்றும் தொற்றுநோயில் ரீதியான இரு வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

(29) வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தொடர்பில் சுகாதார கண்காணிப்பு முறைமை ஒன்று அமைக்கப்பட்டு அவர்களுக்கு அவசியமான சுகாதார அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(30) வளாகத்தினுல் சேரும் கழிவுகளை சபை செயற்படுத்தும் கழிவு முகாமைத்துவ முறைமையின் படி அத்துடன் அதற்குப் பொருத்தமான எழுதப்பட்ட சட்டங்களின் படி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(31) வளாகத்தில் சேரும் கழிவுகளை அனுமதிப்பத்திரம் பெற்றவரே முகாமைத்துவம் செய்தால் அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தகவல் வழங்க வேண்டியதோடு அவர் வழங்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அது தொடர்பில் செயற்பட வேண்டும்.

(32) வளாகத்தினுள் போதிய அளவு முதலுதவி வசதிகள் காணப்பட வேண்டும்.

(33) எந்தவொரு தொற்றுநோய் நிலையின் நிலையின் பொழுதும் சமூகத்தில் கையுறைகள் மற்றும் முகக்கவசங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படும் நிலையில், வளாகத்திற்குள் வருகை தரும் எந்த நபரும் அகற்றும் முகக் கவசம் மற்றும் கையுறைகளை வளாகத்தில் குறித்தொதுக்கப் பட்டுள்ள மூடப்பட்ட வாளிகளில் அகற்றப்பட வேண்டியதோடு அவ்வாறு அகற்றப்படும் கழிவுகள் வேறு கழிவுகளுடன் கலக்காத வண்ணம் சபை அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தும் கழிவு முகாமைத்துவத் திட்டத்திற்கு ஏற்றவாறு அவ்வாறான கழிவுகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(34) வளாகத்தினுல் உணவுப் பயன்பாட்டில் ஈடுபடுகின்ற அனைவரும் உணவுப் பயன்பாட்டின் பொழுது அதிக பட்ச சுத்தத்துடன் காணப்பட வேண்டியதோடு தலைக்கவசம், கையுறைகள், முகக்கவசம் மற்றும் காலணிகள் அணிந்திருக்க வேண்டியதுடன் பொருத்தமான சுகாதார ஆடைகளையும் அணிந்திருக்க வேண்டும்.

(35) எந்த ஒரு தொற்று நோயினாலும் அவதிப்படும் அல்லது அவ்வாறான நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் நிலைகளில் உள்ளவர்களை அல்லது அத்தகைய நோயின் காவிகளைக் கொண்டுள்ள நிலையில் உள்ளவர்களை அல்லது பாதிக்கப்பட்ட காயங்கள், தோல் நோய்த் தொற்றுக்கள் அல்லது பரவுகின்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ள எவரையும் வளாகத்தில் சேவைகளுக்கு பயன்படுத்தக்கூடாது.

(36) விழா மண்டப வளாகத்தினுல் உணவுக் கையாள்கையில் ஈடுபடும் எவரும் உணவு மாசுபடுவதற்கு காரணமாக அமையும் புகைபிடித்தல், எச்சில் துப்புதல், இருமுதல், தும்முதல் அல்லது மூக்கைத் தொடுதல் போன்ற விடயங்களில் ஈடுபடக் கூடாது.

(37) பரவுகின்ற நோய்நிலை அல்லது தொற்று நோய் எனக் கருதக்கூடிய வகையில் காரணிகள் கொண்ட எவரையும் வளாகத்தினுள் விழா நிகழ்வுகளுக்காக அனுமதிக்கக் கூடாது.

(38) வளாகத்தினுள் உணவு உண்பதற்காக வருகை தரும் ஒருவருக்கு அல்லது வளாகத்தினுள் உள்ள ஊழியர் ஒருவருக்கு பரவுகின்ற அல்லது தொடுகையால் பரவுகின்ற அல்லது தோல் நோய் நிலை காணப்பட்டால் அது பற்றி அனுமதிப்பத்திரம் பெற்றவர் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியதோடு அத்தகைய அறிவிப்பின் பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்படும் தனிமைப்படுத்தல் அறிவுரைகளுக்கு ஏற்ப வளாகத்தில் உள்ள அனைவரும் செயற்பட வேண்டும்.

(39) விழா மண்டபம் அமைந்துள்ள வளாகம் தனிமைப்படுத்தல் செயன்முறைக்கு உட்படுத்தப்படும் நிலையில் அத்தகைய தனிமைப்படுத்தப்படும் காலம் முடிவுறுமாயின் அதற்குரிய சான்றிதழ் ஒன்று சுகாதார வைத்திய அதிகாரியிடம் இருந்து பெறப்பட்ட பின்னர் வளாகம் முழுமையாக தொற்று நீக்கம் செய்யப்படும் வரை எந்தவொரு நபரும் வளாகத்தினுள் விழா நிகழ்வுகளுக்காக அனுமதிக்கப்படக் கூடாது.

(40) விழா மண்டபத்தினுள் உணவுப் பயன்பாட்டில் உள்ளவர்கள் மற்றும் உணவு உண்ணுபவர்கள் அனைவரும் வளாகத்தில் செயற்படுத்தப்படும் சுகாதார நடவடிக்கைகள் பற்றிய அறிந்து கொள்ள வேண்டியதுடன் உரிய அறிவுரைகள் வளாகத்தில் வெளிப்படையாகக் காணும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட வேண்டியதோடு அவ்வறிவுரைகள் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும்.

(41) வளாகத்தில் பணிபுரியும் அனைத்து நபரகள் பற்றிய தகவல்களும் அனுமதிப்பத்திரம் பெற்றவரால் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்று நோய் பரவ வழி வகுக்கும் காரணங்களை கவனத்திற் கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வளாகத்தைப் பராமரிப்பது தொடர்பில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் ஒப்பந்தம் ஒன்றுக்குள் நுழைய வேண்டும் என தவிசாளர் பரிந்துரைக்கும் நிலையில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் தவிசாளருடன் அவ்வாறான உடன்படிக்கை ஒன்றுக்குள் நுழைய வேண்டியதுடன் தவிசாளர் அவ்வாறான உடன்படிக்கையின் பிரதி ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்க வேண்டும்.

13. அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் தொடர்பாக தொற்றுநோய் நிலை காரணமாக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் கட்டளை பிறப்பிக்கப்படுமாயின் அக்கட்டளையில் குறிப்பிடப்படும் அனைத்து விதிகளுக்கும் ஏற்றவாறு வளாகம் பராமரிக்கப்பட வேண்டும்.

14. இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் நடாத்திச் செல்லப்படுகின்றதா எனச் சோதனை செய்வதற்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது எந்த ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியும் நியாயமான நேரமொன்றில் வளாகத்தினுள் நுழைவது மற்றும் தேவையான மாதிரிகளைச் சேகரிப்பது என்பன சட்டபூர்வமான விடயங்களாகும்.

15. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகமொன்று இத்துணைவிதியின் நிபந்தனைகளை மீறுகின்ற அல்லது அந்நிபந்தனைகளுக்கு முரணாகச் செயற்படும் சந்தர்ப்பங்களில் இத்துணைவிதிக்கு இணங்க செயற்படுவதற்காக முப்பது நாட்களுக்கு மேற்படாத காலத்தைக் குறிப்பிட்டு தவிசாளர் குறித்த வளாகத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நபருக்கு அறிவுறுத்தல்ஒன்றைக் கையளிக்க வேண்டும் — வளாகத்திற்குள் நுழைவதற்கான அதிகாரம்.

(2) இவ்வாசகத்தின் கீழ் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னர் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் நியாயமான காரணங்களின் அடிப்படையில் மேலதிகக் காலத்தைக் கோரும் பட்சத்தில் தவிசாளரால் மேலதிகக் காலம் வழங்கப்பட முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக பதினான்கு நாட்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

16. மேலே வாசகம் 15 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது மேலதிகக் காலப்பகுதிக்குள் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படத் தவறும் பட்சத்தில் தவிசாளர் குறித்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும். — அனுமதிப் பத்திரத்தினை இரத்துச் செய்தல்.

17. இத்துணை விதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் அல்லது இத்துணை விதியில் குறிப்பிடப்படும் விதிகளை மீறி வளாகமொன்றைப் பராமரிப்பது குற்றமாவதோடு அந்தக் குற்றம் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153(2) ஆவது உப பிரிவின் பிரகாரம் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், அத்தகைய குற்றத்தில் குற்றவாளி என நிரூபிபிக்கப்பட்ட பின்னரும் மேலும் அந்த மீறுதலை, மீறுதல் தொடர்ந்து இடம்பெறும் வேளை தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அறிவித்தல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீறல் தொடரும் ஒவ்வொரு நாளும் மேலே குறிப்பிடப்பட்ட நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153(2) ஆவது உப பிரிவின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

18. இத் துணை விதி தொடர்பாக பொருள் கோடல் தேவைப்பட்டால், இத்துணைவிதியில்,

“சபை” என்பது சீதாவகபுர நகர சபையைக் குறிக்கின்றது,

“தவிசாளர்” என்பது சீதாவகபுர நகர சபையில் தற்காலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபரை அல்லது அப்பதவி நிலையின் கடமைகளை நிறைவேற்றும் நபரைக் குறிக்கின்றது.

“சுகாதார வைத்திய அதிகாரி” என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

“பொது சுகாதார பரிசோதகர்’ என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவி நிலையை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

“அனுமதிப்பத்திரம் பெற்றவர்” என்பது இத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒரு நிறுவனம் அல்லது ஒரு நபராகும்,

“அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்” என்பது தற்காலத்தில் சீதாவகபுர நகர சபையின் தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகும்.

“மாசடைதல்” என்பது உணவுப் பொருட்களில் ஏதாவது மாசாக்கும் பதார்த்தம் உள்நுழைவது அல்லது ஏற்படுவதாகும்

“கிருமினாசினி” என்பது உணவின் பாதுகாப்பு அல்லது பொருத்தப்பாட்டை குறைக்காமல் சூழலில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை பௌதீக அல்லது இரசாயன முறைகளின் மூலம் குறைப்பது.

“உணவுச் சுத்தம்” என்பது உணவுத் தயாரிப்பு செயன்முறையில் அதன் பாதுகாப்பு மற்றும் நுகர்வுக்கான தரம் என்பவற்றை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நிலைகள், படிமுறைகள் மற்றும் நடைமுறைகள் என்பதாகும்.

“ஆபத்து” என்பது தீங்குகளை ஏற்படுத்தும் உயிரியல், இரசாயனவியல் விஞ்ஞான ரீதியான காரணங்கள் அல்லது நிலைகள்

“உணவுப் பாதுகாப்பு” என்பது, உணவு ஹ தயாரித்தல், பதனிடல், விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து அல்லது உண்ணும் வேளை நுகர்வோருக்கு எந்த வித தீங்கும் ஏற்படாமைக்கான பொறுப்பு

“நியாயமான நேரம்” என்பது அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட வேலை இடம் பெறும் எந்த நேரமும்.

“அடிப்படைச் சட்டம்” என்பது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தைக் குறிக்கின்றது.

மொழிகள் இடையான ஒவ்வாமை.

19. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள உரை மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை**

**.........................ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம்.**

*01.* விண்ணப்பதாரரின் பெயர்: -
*02.* தனிப்பட்ட முகவரி: -
*03.* தேசிய அடையாள அட்டை இல. : -
*04.* தொலைபேசி இல. : -
*05.* விற்பனை நிலையம் நடத்தப்படும் இடம் :-
*06.* ஆரம்பித்த ஆண்டு: -
*07.* வியாபார தலத்தின் முகவரி : -
*08.* கிராம அலுவலர் பிரிவு: -
*09.* ஆதன வரி இல. : -
*10.* வியாபாரத்தின் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் இலக்கம் :-
*11.* விற்பனை நிலையத்தின் முகாமையாளரின் அல்லது பிரதிநிதியின்,
I. பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி
II. தேசிய அடையாள அட்டை இலக்கம்
III. கையடக்க தொலைபேசி இலக்கம் :- நிலையான தொலைபேசி இலக்கம் :-
*12.* வியாபாரம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட திட்டத்தின் இலக்கம் மற்றும் அதன் திகதி (திட்டத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்.)

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி நடத்தப்படும் தொழில், வர்த்தகத்துக்கு ........... ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப் பத்திரம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பான தற்போதைய சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

திகதி:-

...............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

அலுவலகப் பயன்பாட்டுக்கு

வருமான ஆய்வாளர்,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி:-

................................
செயலாளர்

---

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன்./பரிந்துரை செய்யவில்லை.

திகதி :-

..................................................
வருமான பரிசோதனையாளர்

சுகாதார வைத்திய அதிகாரி,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பான அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவுபடுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி :- ................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணை விதி மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கையிடுகின்றேன்.

திகதி :- ................................
பொது சுகாதாரப் பரிசோதகர்

---

செயலாளர்,

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணபத்தின் பிரகாரம் உரிய இடத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை
(பரிந்துரைக்கவில்லை எனின் அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக).

திகதி :- ................................
சுகாதார வைத்திய அதிகாரி

EOG 01 - 0195/ 3

---

## அழகு நிலையங்கள் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அழகு நிலையங்களை கட்டுப்படுத்துவதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் இயற்றப்பட்டதாகும்.

குறுகிய பெயர்.
2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அழகு நிலையங்கள் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படும்.

சட்டம் இயற்றும் அதிகாரம்.
3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபையானது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ் அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடம் இருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் அழகு நிலையம் ஒன்றை (இதன் பின்னர் வளாகம் என அழைக்கப்படும்) நடாத்திச் செல்லலாகாது.

அனுமதிப் பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பித்தல்.
5. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் இத்துணைவிதியின் உப ஆவணத்தில் காணப்படும் விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ப அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

6. மேலுள்ள வாசகத்தின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் பொழுது அதற்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து குறித்த விண்ணப்பத்தை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் அல்லது சபையினால் அனுமதிக்கப்பட்ட அளவில் மின்னஞ்சல் மூலமாக அனுப்புவதன் மூலம் தவிசாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களும் இதன் பின்னர் குறிப்படப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து அவ்வாறான நபர்களுக்கு தவிசாளர் அனுமதிப்பத்திரம் வழங்கலாகாது.

அனுமதிப் பத்திரம் தொடர்பான நிபந்தனைகள்.

(1) வளாகத்துடன் தொடர்புடைய அனைத்து நிரந்தரக் கட்டடங்களும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க மாநகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்ட திட்டத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) வளாகமானது தனது சொந்த வியாபார நாமத்துடன் நடத்திச் செல்லப்பட வேண்டும்.

(3) வளாகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்பட்ட ஒரு பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்படும் அழகு தொடர்பான கற்கைநெறியில் சான்றிதழ் அல்லது அதற்கு நிகரான தொழில் தகைமை பெற்றுள்ளமைக்கான சான்றுகள் அனுமதிப் பத்திரம் பெற்றவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) வளாகத்தினுள் உள்ள கட்டுமானங்கள் நன்றாக நிரந்தரக் கட்டுமானப் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அவை சிறந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலைகளில் காணப்பட வேண்டும்.

(5) ஒரு வாடிக்கையாளருக்கு சேவை வழங்குவதற்கு குறைந்த பட்சம் 2.25 சதுர மீற்றர்கள் இடம் காணப்பட வேண்டியதோடு ஒரே நேரத்தில் சேவை வழங்கப்படும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக்கு விகித சமமான அளவில் இட வசதிகள் காணப்படவேண்டும்.

(6) சேவையை எதிர்பார்த்து வளாகத்துக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் வசதியாக அமர்ந்திருப்பதற்கு போதிய இட வசதிகள் வழங்கப்பட வேண்டியதோடு ஏற்கனவே சேவையைப் பெற்றுக் கொண்டிருக்கும் வாடிக்கையாளருக்கும் அமர்ந்திருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே குறைந்தது 1.5 மீற்றர் இடைவெளி காணப்பட வேண்டும்.

(7) வளாகத்தினுள் உள்ள அனைத்து சுவர்களினதும் உயரம் 2.7 மீற்றர்களுக்கு குறைவில்லாததாக அமைந்திருப்பதோடு அவற்றுக்கு நிறப்பூச்சு செய்திருக்கப்பட வேண்டும்.

(8) வளாகத்தின் ஒவ்வொரு பகுதியும் கூரை கொண்டதாக அல்லது கொங்கிரீட் கூரை கொண்டதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டியதோடு தரையிலிருந்து கூரையானது குறைந்த பட்சம் 2.7 மீற்றர் உயரமானதாகக் காணப்பட வேண்டும்.

(9) வளாகம் குளிரூட்டப்பட்டதாகக் காணப்பட வேண்டும். அல்லது வெளியிலிருந்து போதிய காற்றோட்டத்தை அனுமதிக்கும் வகையில் திறக்கப்படக் கூடிய வகையில் ஜன்னல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(10) வளாகமானது போதிய ஒளியைப் பெறும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(11) வளாகத்தினுள் குடிநீர் வசதிகள் போதியளவு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டியதோடு நீரைச் சேமித்து வைத்திருக்கும் வசதிகளும் காணப்பட வேண்டும்.

(12) சேவை மேற்கொள்ளப்பட்ட பின் சேவை நாடிகள் குளிப்பது அவசியப்படுத்தப்பட்டால் அதற்குரிய வசதிகள் காணப்பட வேண்டும்.

(13) சேவை நாடிகளுக்கு சேவை வழங்குவதற்காக பயன்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் கொள்கலன்களைக் கழுவுவதற்கு வளாகத்தில் வேறுபடுத்தப்பட்ட பகுதியொன்று பேணப்பட வேண்டும்.

(14) வளாகத்தில் பணிபுரிவோர் மற்றும் சேவை நாடிகளின் பயன்பாட்டுக்கு போதிய அளவில் கழிப்பறை வசதிகள் காணப்பட வேண்டியதோடு நன்றாக கட்டப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அவை சுத்தமாகப் பேணப்பட வேண்டும்.

(15) சேவை நாடிகளின் கைகள், தலை அல்லது முகத்தைக் கழுவுவதற்காக குறித்த உபகரணம் சரிசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அவை ஒருவருக்கு உபயோகித்து மற்றவருக்கு உபயோகிபிப்பதற்கு முன்பாக கிருமிநீக்கம் செய்யப்பட்டு சுத்தமாக பேணப்பட வேண்டியதோடு அவை துருப்பிடிக்காத உலோகப் பொருட்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

(16) வளாகத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் பொது வடிகாண்களிலோ அல்லது திறந்தவெளிகளிலோ வடிந்தோடவில்லை என்பதை உறுதிப்படுத்த போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவை கழிவுநீர்த் தொட்டி அல்லது உறிஞ்சும் குழிக்கு முறையாக செலுத்தப்பட வேண்டும்.

(17) வளாகத்திற்கு சொந்தமான ஒரு கழிவுநீர்த் தொட்டி அல்லது உறிஞ்சும் குழி வெளியில் திறந்த நிலையில் இருக்க கூடாது என்பதுடன் நீர் மூலமொன்று காணப்படின் அதிலிருந்து குறைந்தபட்சம் 15.25 மீற்றர் தூரத்தில் கட்டப்பட வேண்டும்.

(18) வளாகத்திலிருந்து இரசாயனக் கழிவுநீர் அகற்றப்படுமாயின், அவ் அகற்றல் முறையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் பரிந்துரைக்கும் முறைமையின் பிரகாரம் அமைதல் வேண்டும்.

(19) சேவைகளுக்காக காத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு போதுமான வசதிகளுடன் வளாகத்தில் ஒரு தனி இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

(20) வளாகத்தில் உள்ள மின்சுற்று ஒரு தொழில்சார் நிபுணரால் சரிபார்க்கப்பட்டு மின்கசிவிலிருந்து பாதுகாப்பாக இருப்பது சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

அனுமதிப் பத்திரமொன்றை வழங்குதல்.

8. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள் தவிசாளரால் :

(1) வாசகம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்த வளாகத்துடன் தொடர்புடைய விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட வேண்டும்.

(2) வாசகம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரியின் விண்ணப்பம் உரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட வேண்டும்.

அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்.

9. (1) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்கு அறவிடப்படும் கட்டணம் அடிப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சபையினால் தீர்மானிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்படும் கட்டணமாக அமைந்திருக்க வேண்டும்.

(2) அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக வளாகம் ஒன்றை சோதனை செய்வதற்காக சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அறவிடப்படும் கட்டணம் சட்டபூர்வமானதாகும்.

அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம்.

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு ஏற்ப இரத்துச் செய்யப்படாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் ஆண்டின் திசெம்பர் மாதம் முப்பத்தியோராம் திகதி வரை செல்லுபடியாகும்.

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் எந்த ஒரு நபரும் இதன் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(1) இலங்கை முழுவதும் அல்லது அதன் பிரதேசமொன்றுக்கு அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தொற்று நோய் நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலையொன்று காணப்படுகின்றது என சந்தேகிக்க உறுதியான காரணிகள் காணப்படும் நிலையில் அத்தொற்று நோய் நிலையைக் கட்டுப்படுத்த சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளுக்கு அமைய காலத்துக்கு காலம் தவிசாளர் ஏற்படுத்தும் நிலையில் அவ்வனைத்து ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்ப வளாகம் பராமரிக்கப்பட வேண்டும். அனுமதிப் பத்திரம் தொடர்பான நிபந்தனைகள்.

(2) வளாகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் ஏதாவது தொற்று நோய்நிலை அறிவிக்கப்பட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளுக்கு ஏற்ப தவிசாளர் ஏற்படுத்தும் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(3) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்றுநோய் தொடர்பான சந்தேகம் ஏற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும், சேவை நாடிகள் அனைவரும் வழங்கப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களின்படி வளாகத்திற்கு சமுகம்தராவிட்டால், வளாகத்தில் சேவைகள் வழங்கப்படக் கூடாது.

(4) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் நிலைக்கான ஏதேனும் விடயங்கள் காணப்படும் நிலையில் அல்லது அவ்வாறான ஆபத்து நிலவும் நிலையில் அதிலிருந்து பாதுகாப்புப் பெற பின்பற்றவேண்டியவை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வளாகத்தினுள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டியதோடு அவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன என அனுமதிப்பத்திரம் பெற்றவர் திருப்தி அடைய வேண்டும்.

(5) சேவையை நாடும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்குமுரிய தகவல்கள் தொடர்பான ஆவணமொன்று பேணப்பட வேண்டும்.

(6) வாடிக்கையாளர்களின் முடி வெட்டுதல், முடி சாயமிடுதல், தாடி மற்றும் உரோமங்கள் அகற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின்போதும், அவ்வாறு செய்யும் அனைவரும் முகக் கவசங்கள் மற்றும் கையுறைகளை முடிந்தவரை அணிய வேண்டும்.

(7) வளாகத்தில் உபகரணங்கள் மற்றும் கருவிகளைப் பராமரிக்கவும் நிருவகிக்கவும் அனுமதிப் பத்திரம் பெற்றவர் உறுதிப்படுத்த வேண்டியவை,

(அ) பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகளை தொற்று நீக்கம் செய்ய போதுமான வசதிகள்

(ஆ) ஒரு நிலையான தொற்றுநீக்கும் முறைமை மற்றும் தொற்று நீக்கப் பயன்படுத்தப்படும் போதுமான உபகரணங்கள்,

(இ) சேவை வழங்குநர்களுக்கு இடையில் சேவைகளை வழங்கும்போது கை கழுவுவதற்கான வசதிகளுடன் சவர்க்காரம் அல்லது சவர்க்கார திரவம்.

(ஈ) வாடிக்கையாளர்களின் நலனுக்காக போதுமான அளவு வெள்ளை அல்லது வெளிர் நிற துவாய்கள் மற்றும் மேலுடல் கவசங்கள், தலையுறைக் கவசங்கள்.

(உ) மின்சாரம் மூலம் இயங்கும் சாதனங்களைப் பயன்படுத்தும் போது, ஒரு வாடிக்கை யாளரது மேசையில் பாதுகாப்பானதும் நிலையானதுமான மின் செருகல்கள்,

(ஊ) உபகரணங்களின் ஒவ்வொரு பயன்பாட்டிற்குப் பிறகும் தொற்று நீக்கல் முறைகள்.

(8) வளாகத்தில் பணிபுரியும் ஒவ்வொரு ஊழியருக்கும் பாதுகாப்பு உபகரணங்களை கையாளுதல், சேவை வழங்கல் மற்றும் வளாகத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் குறித்த பயிற்சி இருக்க வேண்டும்.

(9) வளாகத்தில் உள்ள சேவைகளுக்குத் தேவையான சூடான மற்றும் குளிரான நீரை வழங்குவதற்கான வசதிகள் இருக்க வேண்டும்.

(10) அழகுபடுத்தல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்தும் அங்கீகரிக்கப் பட்டதாகவும் தரப்படுத்தப்பட்டதாகவும் பதிவு செய்யப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.

(11) வளாகத்தினுள் முதலுதவி வசதிகள் பேணப்பட வேண்டியதோடு, அதற்காக ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

(12) வளாகத்தின் நல்ல காற்றோட்டத்திற்காக ஜன்னல்களைத் திறந்து வைக்க வேண்டும் என்பதுடன் குளிரூட்டப்பட்டிருப்பின், அனைத்து குளிரூட்டிகளும் நிர்ணயிக்கப்பட்ட வெப்பநிலையில் தொடர்ச்சியாக பராமரிக்கப்பட வேண்டும்.

(13) வளாகத்தில் உள்ள குளிரூட்டிகளின் வடிகட்டிகளை தவறாமல் சுத்தம் செய்து பராமரிக்கப்பட வேண்டும்

(14) வாடிக்கையாளருக்கு சேவையை வழங்குவதற்கு முன்னதாக கைகள் சவர்க்காரம் அல்லது கிருமிநாசினியால் சுத்தம் செய்யப்பட்டு அதன் பின்னர் மாத்திரமே சேவைகள் வழங்கப்பட வேண்டும்.

(15) வளாகத்தினுள் பணிபுரியும் அனைவரும் தமது பணிகளை ஆரம்பிக்க முன்பு, கழிப்பறைகளைப் பயன்படுத்திய பின்னர், மற்றும் கழிவுகளை கையாண்ட பின்னர் போதுமான சுத்தம் இல்லாமல் பணிகளில் ஈடுபடக் கூடாது.

(16) வளாகத்தில் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் பொழுது, ஒவ்வொரு சேவை வழங்குநரும் ஒரு அங்கியை அணிய வேண்டும் என்பதுடன் அது மிகவும் சுத்தமான நிலையில் இருக்க வேண்டும்.

(17) வளாகங்களில் ஒவ்வொரு சேவைக்குப் பிறகும் தூசி மற்றும் வெட்டப்பட்ட முடி மற்றும் உரோமங்களை சுத்தமாக துடைத்தகற்ற வேண்டியதுடன் அனைத்தையும் குறித்தொதுக்கப்பட்ட கழிவுத் தொட்டியில் தற்காலிகமாக அப்புறப்படுத்த வேண்டும்.

(18) வளாகத்தில் உள்ள தரைகள், கதிரைகள் மற்றும் மேசைகள் ஒவ்வொரு நாளும் வேலையைத் தொடங்குவதற்கு முன் தொற்றுநீக்கம் செய்வதுடன் சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(19) வளாகத்தின் சேவையாற்றும் பகுதியை யாரும் உணவுக்காகவோ அல்லது வேறு எந்த தேவைக்காகவோ பயன்படுத்தக்கூடாது

(20) வளாகத்தில் சேரும் கழிவுகளை சேகரிப்பதற்காக தனியான காலால் இயக்கக்கூடிய குப்பைத் தொட்டிகளை வைக்க வேண்டும் என்பதுடன் கழிவுகள் அதனுள் மாத்திரமே சேகரிக்கப்பட வேண்டும்.

(21) வளாகத்துக்குச் சொந்தமான பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகளை நிர்வகிப்பதில் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(அ) அகற்றப்பட்ட தலை முடி அல்லது உரோமங்கள் ஒவ்வொரு சேவையின் முடிவிலும் சேகரிக்கப்பட்டு ஒரு தனியான கழிவுத் தொட்டியில் இடப்பட வேண்டும்.

(ஆ) வளாகத்தினுள் இன்னபிற செயல்பாட்டின் மூலம் உருவாகும் வேறு கழிவுகள், அகற்றப்படுகின்ற முடியுடன் கலக்காமல் தனியாக சேகரிக்கப்பட வேண்டும்.

(இ) பிரதேச சபையால் அமுல்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவ திட்டத்தின்படி அல்லது பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரையின் பிரகாரம் அனுமதிப் பத்திரதாரர் செயல்படுத்தும் கழிவுகளை நீக்கும் முறைக்கு ஏற்ப வளாகத்துக்குச் சொந்தமான கழிவுகளை அகற்ற வேண்டும்.

(22) வளாகத்தில் உள்ள கழிவறைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது சுத்தம் செய்து கிருமி நீக்கம் செய்து துர்நாற்றம் ஏற்படா வண்ணம் பேணுவதுடன், அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் நோய்த்தொற்றொன்று உறுதிப்படுத்தப் படும் சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறான சந்தேகம் ஏற்படும் நிலையில், சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய தவிசாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி வளாகத்தில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும்.

(23) யாரேனும் ஊழியர் ஒருவருக்கு தொற்று பரவுகின்ற, தொடுகையால் பரவுகின்ற அல்லது தோல் நோய் நிலை காணப்பட்டால் அல்லது சமீபத்தில் இதுபோன்றதொரு நோயால் பாதிக்கப்பட்டிருந்தவரை அண்மையில் பராமரித்திருந்தால், அந் நோய்க்குரிய காலாவதி தேதி கடந்துவிட்டாலேயொழிய, அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகத்தில் எவரும் பணியாளராகவோ அல்லது உதவியாளராகவோ வேலை செய்யக்கூடாது

(24) ஏதேனும் தொற்று, தொடுகையால் பரவுகின்ற அல்லது தோல் நோய் நிலையால் பாதிப்புற்றிருப்பதாக அடையாளம் காணப்பட்ட எவரையும் பொதுவாக பணிக்காக வளாகத்தினுள் அனுமதித்தல் கூடாது.

(25) அனுமதிப் பத்திரம் பெற்றவர் தீர்மானிக்கும்பொழுது அல்லது அது தேவையாகும் என சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் தவிசாளரினால், வேறு தகுதியுடைய அதிகாரம் பெற்றவர்களால் பணிக்கப்படும் சந்தர்ப்பத்தில், வளாகத்துக்கு வரும் அனைவரினதும் உடல் வெப்பநிலைகளும் பரிசோதிக்கப்பட்டு வெப்ப நிலை சாதாரண நிலையிலுள்ளது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே வளாகத்தினுள் அனுமதிக்கப் படுவதோடு, அதற்காக தொடுகையின்றி அளவிடக் கூடிய உடல் வெப்பமானி பயன்படுத்தப்பட வேண்டியதுடன் வெப்பமானி பராமரிக்கப்பட வேண்டும்.

(26) ஒவ்வொரு வாடிக்கையாளரும் பின்பற்ற வேண்டிய சுகாதார அறிவுறுத்தல்கள் வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அவ் அறிவுறுத்தல்களுக்கமைவாக வளாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை அனுமதிப் பத்திரம் பெற்றவர் உறுதி செய்ய வேண்டும்.

(27) வளாகத்தில் சேவைகளை வழங்குகின்ற அனைவரும் -

(அ) பணியின்போது அணியும் ஆடைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருப்பதை உறுதிப்படுத்துதல்,

(ஆ) தங்களின் நகங்களாலும் அணிந்துள்ள ஆபரணங்களாலும் சேவை நாடிகளுக்கு ஆபத்து இல்லாமல் பராமரிக்கப்படுதல்,

(இ) சேவை வழங்குவதற்கு முன்னர் கைகளை தொற்றுநீக்கம் செய்து சுத்தப் படுத்துதல், என்பவற்றை அனுமதிப்பத்திரம் பெற்றவர் உறுதிப்படுத்த வேண்டும்.

(28) வளாகத்தில் பணியாற்றும் ஊழியர்களை வருடத்திற்கு ஒரு முறையாவது மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அனுமதிப் பத்திரதாரரின் கடமையாகும்.

(29) இத்துணைவிதிகள் மற்றும் அனுமதிப்பத்திரம் என்பவற்றின் பிரதியொன்றை அனைத்து வளாகங்களிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

12. அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்றுநோய் பரவ வழி வகுக்கும் காரணங்களைக் கவனத்திற்கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வளாகத்தைப் பராமரிப்பது தொடர்பில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் ஒப்பந்தம் ஒன்றுக்குள் நுழைய வேண்டும் என தவிசாளர் பரிந்துரைக்கும் நிலையில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் தவிசாளருடன் அவ்வாறான உடன்படிக்கை ஒன்றுக்குள் நுழைய வேண்டியதுடன் தவிசாளர் அவ்வாறான உடன்படிக்கையின் பிரதி ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்க வேண்டும்.

13. அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தல் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள தொற்றுநோய் நிலைக்குரிய காரணிகள் பொருந்தும் சந்தர்ப்பத்தில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளுக்கு பொருந்-தக்கூடிய வகையில் வளாகங்கள் பராமரிக்கப்படும்.

வளாகத்தினுள் நுழைவதற்கான அதிகாரம்

14. இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் நடாத்திச் செல்லப்படுகின்றதா எனச் சோதனை செய்வதற்காக தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது எந்த ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியும் நியாயமான நேரமொன்றில் வளாகத்தினுள் நுழைவது மற்றும் தேவையான மாதிரிகளைச் சேகரிப்பது என்பன சட்டபூர்வமான விடயங்களாகும்.

15. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகமொன்று இத்துணைவிதியின் நிபந்தனைகளை மீறுகின்ற அல்லது அந்நிபந்தனைகளுக்கு முரணாகச் செயற்படும் சந்தர்ப்பங்களில் இத்துணைவிதிக்கு இணங்க செயற்படுவதற்காக முப்பது நாட்களுக்கு மேற்படாத காலத்தைக் குறிப்பிட்டு தவிசாளர் குறித்த வளாகத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நபருக்கு அறிவுறுத்தல் ஒன்றைக் கையளிக்க வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

(2) இவ்வாசகத்தின் கீழ் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னர் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் நியாயமான காரணங்களின் அடிப்படையில் மேலதிகக் காலத்தைக் கோரும் பட்சத்தில் தவிசாளரால் மேலதிகக் காலம் வழங்கப்பட முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக பதினான்கு நாட்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

16. மேலே வாசகம் 15 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது மேலதிகக் காலப்பகுதிக்குள் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படத் தவறும் பட்சத்தில் தவிசாளர் குறித்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

தண்டணை

17. இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் அல்லது இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிகளை மீறி வளாகமொன்றைப் பராமரிப்பது குற்றமாவதோடு அந்தக் குற்றம் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், அத்தகைய குற்றத்தில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னரும் மேலும் அந்த மீறுதலை, மீறுதல் தொடர்ந்து இடம்பெறும் வேளை தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அறிவித்தல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீறல் தொடரும் ஒவ்வொரு நாளும் மேலே குறிப்பிடப்பட்ட பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின்` 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

18. இத்துணை விதி தொடர்பாக பொருள் கோடல் தேவைப்படுத்தப்பட்டால், இத்துணைவிதியில், பொருள் கோடல்

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையைக் குறிக்கின்றது.

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையில் தற்காலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபரை அல்லது அப்பதவி நிலையின் கடமைகளை நிறைவேற்றும் நபரைக் குறிக்கின்றது.

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

"பொது சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவிநிலையை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

"கிருமி நாசினி" என்பது பாதுகாப்பு அல்லது பொருத்தப்பாட்டை குறைக்காமல் சூழலில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை பௌதீக அல்லது இரசாயன முறைகளின் மூலம் குறைப்பது.

"நியாயமான நேரம்" என்பது அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட வேலை இடம் பெறும் எந்த நேரமும்.

19. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள வடிவம் முதன்மையாகக் கருதப்படும். மொழிகள் இடையான ஒவ்வாமை

## முதலாவது அட்டவணை

................... **ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்**.

01. விண்ணப்பதாரியின் பெயர் : -
02. தனிப்பட்ட விலாசம் : -
03. தேசிய அடையாள அட்டை இல : -
04. தொலைபேசி இல : -
05. ஆரம்பித்த ஆண்டு : -
06. அழகு நிலையம் நடாத்தப்படும் இடத்தின் முகவரி : -
07. கிராம அலுவலர் பிரிவு : -
08. ஆதன வரி இலக்கம்: -
09. வியாபாரத்தின் பெயர் பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் இலக்கம் :-
10. விற்பனை நிலையத்தின் முகாமையாளர் அல்லது பிரதிநிதியின்,
    I. பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி
    II. தேசிய அடையாள அட்டை இலக்கம்
    III. கையடக்க தொலைபேசி இலக்கம் :- நிலையான தொலைபேசி இலக்கம் :-
11. வியாபாரம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட திட்டத்தின் இலக்கம் மற்றும் அதன் திகதி (திட்டத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்)

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- ..................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு

வருமான ஆய்வாளர்,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:- ................................
செயலாளர்

---

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை

திகதி:- ........................................
வருமான ஆய்வாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:- ................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணைவிதி மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கையிடுகின்றேன்.

திகதி:- ................................
பொது சுகாதாரப் பரிசோதகர்

---

செயலாளர்,

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் உரிய இடத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை

(பரிந்துரைக்கவில்லை எனின் அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக).

திகதி:- ................................
சுகாதார வைத்திய அதிகாரி

EOG 01 - 0195/ 4

**தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் தனியார் கல்வி நிறுவனங்களில் பொது மக்கள் சுகாதாரம் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்துதல், அது தொடர்பில் மேற்பார்வை செய்தல் மற்றும் சோதனை செய்தல் என்பவற்றுக்காக இயற்றப்பட்டதாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது. குறுகிய பெயர்

3. இத்துணை விதியை இயற்றுவதற்கு நகர சபையானது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ் நகர சபையானது அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் தவிசாளரிடம் இருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எந்த ஒரு கட்டடத்திலும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்திச் செல்லக் கூடாது.

5. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் அனைவரும் இத்துணைவிதியின் கீழ்க் காணப்படும் உப ஆவணத்துக்கு ஏற்ப அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பித்தல்

6. மேலுள்ள வாசகத்தின் கீழ் அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் பொழுது அதற்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து குறித்த விண்ணப்பத்தை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் அல்லது சபையினால் அனுமதிக்கப்பட்ட அளவில் மின்னஞ்சல் மூலமாக அனுப்புவதன் மூலம் தவிசாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிக்கும் போது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்னர் அது தொடர்பில் களச் சோதனை செய்வதற்கு கட்டணம் ஒன்றைத் தீர்மானித்து அறவிடுவது சட்டபூர்வமானதாகும். சோதனைக் கான கட்டணம்

8. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பிக்கும் அனைவரும் தனியார் கல்வி நிலையம் (இதன் பின்னர் வளாகம் எனக் குறிப்பிடப்படும்) ஒன்றுக்கு பிரயோகிக்கப்படக்கூடிய பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும். அனுமதிப்பத்திரம் தொடர்பான நிபந்தனைகள்

(1) வளாகத்துடன் தொடர்புடைய அனைத்து நிரந்தரக் கட்டடங்களும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்ட திட்டத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கட்டுமானங்களும் கல்வி வழங்கும் நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) தொடர்புடைய அனைத்துக் கட்டுமானங்களும் சரியாக பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்பட வேண்டியதோடு மிகவும் உகந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அவை வளாகத்தில் முன்னெடுக்கப்படும் கல்வி நடவடிக்கைகளுக்கு தீங்கான வகையில் பாதிப்பு ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கக் கூடாது.

(4) வளாகத்தின் உள்ளகக் கட்டமைப்பு மற்றும் வடிவமைப்பு என்பன போதிய இடவசதி கொண்டதாகக் காணப்பட வேண்டும்.

(5) வளாகத்தின் அனைத்து பகுதிகளும் ஒழுங்கான சுத்தத்தைப் பேணும் வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) வளாகத்தின் அனைத்து பகுதிகளும் நன்கு காற்றோட்டம் கொண்டதாகவும் வெளிச்சம் மிக்கதாகவும் காணப்பட வேண்டும் அல்லது இத்தேவைப்பாடுகள் செயற்கை வழிவகைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(7) வளாகத்தின் அனைத்து வெளியீடுகளும் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(8) வளாகத்துக்கு வேறு வேறான உள்நுழையும் மற்றும் வெளியேறும் வழிகள் காணப்பட வேண்டியதோடு அவசர நிலையொன்றின் போது வெளியேறுவதற்கான அவசர வெளியேறல் வழிகளும் காணப்பட வேண்டும்.

(9) வளாகத்தினுள் விரிவுரை மண்டபங்கள் மேடைகள் கொண்டதாகக் காணப்பட வேண்டியதோடு அவை நன்கு காற்றோட்டம் மிக்கனவாக அல்லது குளிரூட்டப்பட்டனவாக அமைந்திருக்க வேண்டும்.

(10) ஒவ்வொரு விரிவுரை மண்டபமும் வேறு வேறான உள்நுழைதல் மற்றும் வெளியேறல் வழிகளைக் கொண்டிருக்க வேண்டியதோடு நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்காக அமைக்கப்பட்ட விரிவுரை மண்டபங்களில் மேலதிக அவசர வெளியேறல் வழி ஒன்றும் காணப்பட வேண்டும்.

(11) ஐம்பதிற்கும் அதிகமான மாணவர்களுக்கு கற்பிக்கும் விரிவுரை மண்டபங்களில் ஒலி பெருக்கி வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(12) விரிவுரை மண்டபமொன்றின் உள்ளக வடிவமைப்பில் ஒவ்வொரு மாணவர் இடையேயும் இடைவெளி பேணி அமர்ந்திருக்கும் வகையில் இருக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதோடு ஒவ்வொரு இருக்கைக்கும் குறைந்தது 0.75 மீற்றர்கள் நீள அகலம் கொண்ட மேசை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(13) விரிவுரை மண்டபம் ஒன்றில் மாணவர்கள் ஒன்றாக அமர்ந்திருக்கும் வகையில் மேசைகள் மற்றும் கதிரைகள் அமைக்கப்பட்டிருந்தால், குழு ஒன்று அமரும் போது மேலே வாசகம் 12 இல் குறிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் தூரங்கள் பேணப்படும் வகையில் அவை அமைக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அவ்வாறான கதிரைகள் மற்றும் மேசைகளில் அமரக்கூடிய மாணவர் குழு ஒன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறிற்கு மேற்படலாகாது.

(14) மேசைகள் மற்றும் கதிரைகள் இடையே ஒவ்வொரு மேசை மற்றும் கதிரைத் தொகுதி இடையே போதிய இடைவெளி காணப்பட வேண்டியதோடு அவ்விடைவெளி அவர்கள் இலகுவாக நகர்வதற்கு போதுமானதாக அமைந்திருக்க வேண்டும்.

(15) மேசைகள் மற்றும் கதிரைகள் என்பன தரையுடன் உறுதியாகப் பொருத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் அவை நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் அத்துடன் அவை பயன்படுத்த இலகுவானவையாக அமைந்திருக்க வேண்டும்.

(16) வளாகத்தின் உள்ளகச் சுவர்கள் எந்தவொரு உயிரனமும் தங்காத வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அவை ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்டுக் காணப்பட வேண்டும்.

(17) வளாகத்தில் தீப்பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று காணப்பட வேண்டியதோடு பொருத்தமான தீப்பாதுகாப்புச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(18) வளாகத்தினுள் கட்டப்பட்டுள்ள மண்டபங்கள் மற்றும் ஏனைய கட்டடங்கள் மற்றும் கட்டடங்கள் காணப்படாத வளாகத்தின் பகுதி என்பன பாதுகாப்பற்ற தடைகள் அற்றதாகவும் அபாய நிலை அற்ற வகையிலும் பேணப்பட வேண்டும்.

(19) வளாகத்தில் உள்ள வடிகாண்கள் கழிவு நீரைத் தேக்கி வைக்காத வகையிலும் இலகுவாக வடிந்தோடக் கூடிய வகையிலும் கழிவுநீர்க் குழி அல்லது உறிஞ்சும் குழி அல்லது மத்திய சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(20) வளாகத்தினுள் உருவாக்கப்பட்டுள்ள கழிவுநீர்க் குழிகள் மற்றும் உறிஞ்சும் குழிகள் என்பன அனுமதி பெறப்பட்ட திட்டத்துக்கு ஏற்ப உருவாக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அங்கு நீர் மூலம் ஒன்று காணப்படுமாயின் குறித்த குழிகள் நீர் மூலத்தில் இருந்து குறைந்த பட்சம் 15.25 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் அத்துடன் அவை காற்றுக்கு திறக்கப்பட்ட நிலையில் காணப்படக் கூடாது.

(21) வளாகத்தினுள் போதிய அளவான கழிப்பறை வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டியதோடு, அனைத்து கழிப்பறைகளும்

(அ) ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேறு வேறாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) ஒழுங்காக நீர் வசதிகளை கழிப்பறைகளுக்கு வழங்கும் வகையில் அவை நீர் சேமிப்பு வசதிகளைக் கொண்டனவாகக் காணப்பட வேண்டும்.

(இ) அனைத்து கழிப்பறைகளிலும் குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் கறையில்லாத உருக்கினால் உருவாக்கப்பட்ட தண்ணீர் பேசன்கள் சிறந்த நீர் வழங்கல் வசதியுடன் கைகளைக் கழுவுவதற்காக உறுதியாகப் பொருத்தப்பட்டுக் காணப்பட வேண்டும்.

அனுமதிப் பத்திரம் வழங்குதல்

9. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட வேண்டிய அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பம் ஒன்று கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள் தவிசாளரால்

(1) வாசகம் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்த வளாகத்துடன் தொடர்புடைய விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட வேண்டும்.

(2) வாசகம் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரியின் விண்ணப்பம் உரிய காரணங்கள் குறிப்பிடப்பட்டு நிராகரிக்கப்பட வேண்டும்.

அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்கு அறவிடப்படும் கட்டணம் அடிப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சபையினால் தீர்மானிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்படும் கட்டணமாக அமைந்திருக்க வேண்டும்.

அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம்

11. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு ஏற்ப இரத்துச் செய்யப்படாவிட்டால் வழங்கப்படும் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

அனுமதிப் பத்திரம் தொடர்பான தகவல்கள்

12. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெறும் அனைத்து நபர்களும் பின்வரும் நிபந்தனைகளைப் பின்பற்றியொழுக வேண்டும்.

(1) இலங்கை முழுவதும் அல்லது அதன் பகுதியொன்று அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் தொடர்புடையதாக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொற்று நோய் நிலையொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலையொன்று காணப்படுகின்றது என சந்தேகிக்க போதிய காரணங்கள் காணப்படும் நிலையில் அத்தொற்று நோயினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளுக்கு ஏற்ப தவிசாளரால் ஏற்படுத்தப்படும் நியமங்கள் எவையாவது காணப்படின் அந்நியமங்கள் அனைத்துக்கும் ஏற்ப வளாகம் நடத்திச் செல்லப்பட வேண்டும்.

(2) வளாகத்தினுள் சிறந்த காற்றோட்டம் காணப்பட வேண்டும், அவ்வாறில்லையெனில், அனைத்து விரிவுரை மண்டபங்களும் குளிரூட்டப்பட்டுக் காணப்பட வேண்டியதோடு தொடர்புடைய குளிரூட்டும் இயந்திரங்கள் பொருத்தமான வெப்பநிலையைப் பேணும் வகையில் சிறந்த இயங்குநிலை கொண்டனவாகக் காணப்பட வேண்டும்.

(3) விரிவுரை மண்டபங்களில் பேணப்படும் ஒலிபெருக்கிகளில் இருந்து வெளிவரும் சத்தம் விரிவுரை மண்டபங்களின் அளவிற்கு ஏற்ப காணப்பட வேண்டியதோடு அச்சத்தம் தேசிய சூழல் நியமங்களுக்கு ஏற்ப கட்டுப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும்.

(4) ஒவ்வொரு வளாகத்திலும் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் வருகை தரும் வேளை அவரைத் தனிமைப்படுத்தி வைப்பதற்கான குறித்தொதுக்கப்பட்ட இடமொன்று காணப்பட வேண்டும்.

(5) வளாகத்தில் கல்வி கற்கும் அனைவரினதும் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட அடையாளத் தகவல்கள் அனைத்தும் பேணப்பட வேண்டியதோடு வளாகத்துக்கு வருகை தரும் ஏனையோர் பற்றிய தகவல்கள் அவர்களை அடையாளம் காணும் வகையில் பேணப்பட வேண்டும்.

(6) வளாகத்தில் உள்ள அனைத்து கழிப்பறைகளும் ஒழுங்காக தொற்று நீக்கம் செய்யப்பட்டு பேணப்பட வேண்டும்.

(7) வளாகத்தில் உள்ள அனைத்து வடிகாண்களும் பொருத்தமாக சுத்தம் செய்யப்பட்டு பேணப்பட வேண்டியதுடன் அவை நீர் மற்றும் தூசு என்பவற்றை தேக்கி வைக்கா வண்ணம் தரை மட்டத்தில் பேணப்பட வேண்டும்.

(8) வளாகத்தினுள் நுழையும் வேளை கை கழுவுதல் தேவைப்படுத்தப்படுமாயின் அதற்குரிய நீர் பேசன்கள் போதிய அளவு நீர் வழங்கலுடன் பேணப்பட வேண்டியதோடு சுத்தம் செய்யும் பொருட்கள் மற்றும் தொற்று நீக்கிகள் என்பனவும் வழங்கப்பட வேண்டும்.

(9) விரிவுரையாளருக்கு மாணவர்கள் இலகுவாகத் தெரியும் வகையிலும் மாணவர்களுக்கு விரிவுரையாளர் இலகுவாகத் தென்படும் வகையிலும் இருக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(10) வளாகத்தில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் தினங்களில் ஒவ்வொரு தினமும் வளாகத்துக்கு வருகை தந்தவர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கான முறைமை ஒன்றும் வளாகத்தில் பணிகளில் ஈடுபடுவோர் தொடர்பான அடையாளத் தகவல்களைப் பதிவு செய்வதற்கான வழிவகை ஒன்றும் காணப்பட வேண்டும்.

(11) வளாகத்தில் பணிபுரியும் நபர்கள் தொடர்பாக,

(அ) பணியாளர்களுக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்படுமாயின் அவர்களுக்கு போதியளவான சுத்தம் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) பணியாளர்களுக்கு போதியளவான கழிப்பறை வசதிகள் காணப்பட வேண்டியதோடு அவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

(12) அவசர நிலைகளில் பயன்படுத்தத் தக்க வகையில் முதலுதவி வசதிகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(13) வளாகத்தினுள் விரிவுரைகளின் பொழுது ஏற்படும் சத்தம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(14) வளாகத்தினுள் காணப்படும் மின் இணைப்புகள் மற்றும் மின் சுற்றுக்கள் அனைத்தும் ஒழுங்காகப் பேணப்பட வேண்டும். இது தொடர்பில் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவையாவது மின்னியல் பொறியியலாளர் அல்லது தகுதி வாய்ந்த நிபுணரிடம் இருந்து அறிக்கை ஒன்று பெறப்பட வேண்டும்.

(15) தொற்று நோயொன்றினால் அவதியுறும் நபர் ஒருவர் அல்லது அவ்வாறான நோயுள்ளவர் என சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் அல்லது அவ்வாறான நோய்க்காவியாக அல்லது தொற்று உள்ள நபர் போனறவர்கள் வளாகத்தில் வேலைக்கு அமர்த்தப்படக் கூடாததுடன் அவ்வாறான நபர்கள் வளாகத்தில் பணிபுரியவில்லை என்பது தொடர்பில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் திருப்தியடைய வேண்டும்.

(16) வளாகத்தினுள் சேரும் கழிவுகள் அதற்கென குறித்தொதுக்கப்பட்ட மூடப்பட்ட கொள்கலன்களில் சேகரிக்கப்பட வேண்டியதோடு வளாகத்தினுள் கையுறைகள் மற்றும் முகக் கவசங்கள் போன்றவைகள் அகற்றப்படும் போது அவை கால்களினால் இயக்கப்படும் குப்பைத் தொட்டிகளில் அகற்றப்பட வேண்டும். அவ்வாறான குப்பைத் தொட்டிகள் அந்நோக்கத்துக்காக மட்டுமே பேணப்பட வேண்டும்.

(17) வளாகத்தினுள் சேரும் கழிவுகள் நகர சபை அமுல்படுத்தும் கழிவு முகாமைத்துவத் திட்டத்திற்கு ஏற்ப அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்ப அகற்றப்பட வேண்டும்.

(18) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் தொற்று நோய் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டு அதற்குரிய நியமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலை ஒன்று நிலவும் நிலையில் அல்லது அவ்வாறான தொற்று நோய் நிலை காணப்படுவதாக சந்தேகிக்க உறுதியான காரணிகள் காணப்படும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளரால் ஏற்படுத்தப்படும் அல்லது பொது மக்களின் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கேற்ப தவிசாளர் ஏற்படுத்தும் பின்வரும் நியமங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் சிலவற்றை பின்பற்றுமாறு தவிசாளர் பணிப்பது சட்டபூர்வமானதாகும்.

(அ) அனுமதிப்பத்திரத்தின் கீழ் வளாகத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் குறிப்பிட்ட காலமொன்றுக்கு தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டுமென்பதும்,

(ஆ) வளாகத்தினுள் அவசர நிலையொன்றின் பொழுது பயன்படுத்தத் தக்க திட்டம் ஒன்று காணப்பட வேண்டுமென்பதும்,

(இ) வளாகத்தினுள் ஒன்று கூடல்கள் நிறுத்தப்பட வேண்டுமென்பதும்,

(ஈ) விரிவுரை ஆவணங்கள் கைகளால் விநியோகிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்மென்பதும்,

(உ) வளாகத்தினுள் குறிப்பிட்ட சமூக இடைவெளி பேணப்பட வேண்டுமென்பதும்,

(ஊ) உடல் வெப்பநிலை சாதாரண அளவுக்கு கீழ் உள்ளவர்கள் வளாகத்தினுள் நுழையக் கூடாது என்பதும்,

(எ) குளிரூட்டல் உபகரணங்களின் வடிகட்டிகள் வாரத்துக்கு ஒரு முறை சுத்தப்படுத்தப்பட வேண்டுமென்பதும்,

(ஏ) வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வளாகம் நடத்திச் செல்லப்படும் என்பதைக் குறிப்பிடும் ஒப்பந்தம் ஒன்றை தவிசாளருடன் மேற்கொள்ள வேண்டுமென்பதும்,

(ஐ) வளாகத்தினுள் உணவு விற்பனை செய்தல் அல்லது விநியோகம் செய்தல் மேள்கொள்ளப்படக் கூடாது என்பதும்,

(ஒ) தும்மல் மற்றும் இருமல் ஏற்படும் வேளைகளில் சுவாச ஒழுக்கங்கள் பின்பற்றப்பட வேண்டுமென்பதும்,

(ஓ) உணவு உட்கொள்வதற்கு குறித்தொதுக்கப்பட்ட இடம் காணப்பட வேண்டுமென்பதும் அவ்விடத்தில் உணவு தனித்தனியாக உட்கொள்ளப்பட வேண்டுமென்பதும்,

(ஔ) வளாகத்தினுள் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார வழிமுறைகள் இலகுவில் அடையாளம் காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென்பதும்,

(ஃ) வளாகத்தினுள் உள்நுழைதல் மற்றும் வளாகத்தில் இருந்து வெளியேறுதல் என்பன குழுக்களாக மேற்கொள்ளப்படக் கூடாது என்தும்,

(க) வளாகத்தினுள் சேவையில் ஈடுபடுவோர் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கேற்ப ஒழுங்கான இடைவெளிகளில் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்பதும்,

13. தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களின் விற்பனை வளாகத்தினுள் இடம்பெறுமாயின், அது தொடர்பில் எழுத்தில் உள்ள சட்டங்களுக்கு ஏற்ப அந்நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டியதோடு இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்படும் அனுமதிப் பத்திரங்கள் குறித்த சட்டங்களைப் பின்பற்றும் தேவைப்பாட்டை அகற்றுகின்றன எனக் கருத்திற்கொள்ளப்படக் கூடாது.

அனுமதிப் பத்திரம் காட்சிப்படுத் தப்படல்.

14. அனைத்து வளாகங்களிலும் இத்துணை விதி மற்றும் இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது அவற்றின் பிரதிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

வளாகத்தினுள் நுழைவதற்கான அதிகாரம்.

15. இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் நடாத்திச் செல்லப்படுகின்றதா எனச் சோதனை செய்வதற்காக தவிசாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது எந்த ஒரு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியும் நியாயமான நேரமொன்றில் வளாகத்தினுள் நுழைவது மற்றும் தேவயையான மாதிரிகளைச் சேகரிப்பது என்பன சட்டபூர்வமான விடயங்களாகும்.

16. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகமொன்று இத்துணைவிதியின் நிபந்தனைகளை மீறுகின்ற அல்லது அந்நிபந்தனைகளுக்கு முரணாகச் செயற்படும் சந்தர்ப்பங்களில் இத்துணைவிதிக்கு இணங்க செயற்படுவதற்காக முப்பது நாட்களுக்கு மேற்படாத காலத்தைக் குறிப்பிட்டு தவிசாளர் குறித்த வளாகத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நபருக்கு அறிவுறுத்தல் ஒன்றைக் கையளிக்க வேண்டும்.

(2) இவ்வாசகத்தின் கீழ் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னர் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றவர் நியாயமான காரணங்களின் அடிப்படையில் மேலதிகக் காலத்தைக் கோரும் பட்சத்தில் தவிசாளரால் மேலதிகக் காலம் வழங்கப்பட முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக பதினான்கு நாட்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்.

17. மேலே வாசகம் 16 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தலில் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் அல்லது மேலதிகக் காலப்பகுதிக்குள் அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படத் தவறும் பட்சத்தில் தவிசாளர் குறித்த அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய வேண்டும்.

தண்டனை.

18. இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி வளாகம் ஒன்றை நடத்திச் செல்வது அல்லது இத்துணைவிதியின் ஏற்பாடுகளை மீறிச் செயற்படுவது குற்றமாவதோடு அக்குற்றம் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் உப வாசகம் 153(2) இன் கீழ் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும், அவ்வாறான குற்றமொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் தவிசாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரும் குற்றம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமாயின் மேற்குறிப்பிடப்பட்ட உப வாசகத்தின் கீழ் மேலதிக அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பொருள் கோடல்

19. இத்துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களுக்கான பொருள் தேவைப்படின், இத்துணைவிதியில்,

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையைக் குறிக்கின்றது.

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையில் தற்காலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபரை அல்லது அப்பதவி நிலையின் கடமைகளை நிறைவேற்றும் நபரைக் குறிக்கின்றது.

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

"பொது சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அப்பதவிநிலையை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

"அடிப்படைச் சட்டம்" என்பது பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தைக் குறிக்கின்றது.

மொழிகள் இடையான ஒவ்வாமை

20. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் காணப்படின் சிங்கள மொழி வடிவம் முதன்மையாகக் கருதப்படும்.

**அட்டவணை**

**......................... ஆண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம்**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. தனிப்பட்ட முகவரி :
03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
04. தொலைபேசி இலக்கம் :
05. ஆரம்பித்த ஆண்டு :
06. தனியார் கல்வி நிலையம் நடத்திச் செல்லப்படும் இடத்தின் முகவரி : -
07. கிராம சேவையாளர் பிரிவு :
08. ஆதன வரி இலக்கம் :
09. தனியார் கல்வி நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளதாயின் அதன் தொடர்பு இலக்கம் :
10. தனியார் கல்வி நிறுவனத்தின் முகாமையாளர் அல்லது பிரதிநிதியின்,
    - I. பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி :
    - II. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
    - III. தொலைபேசி இலக்கம் கையடக்க : நிலையான :
11. அனுமதிக்கப்பட்ட கட்டடத்தின் திட்டத்தின் இலக்கம் மற்றும் திகதி :
12. தகவிணக்க சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி :

மேற்தரப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேலுள்ள தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். ............. ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை எனக்கு வழங்குமாறு கோருகின்றேன்.

திகதி : ...............................

...........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

அலுவலகப் பயன்பாட்டுக்காக மாத்திரம்

வருமான ஆய்வாளர்,

மறுபுறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் தொடர்பாக அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு உங்களின் மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை விரைவாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி : ...............................

................................
செயலாளர்

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை

திகதி : ................................

...........................................
வருமான ஆய்வாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

மறுபுறத்தில் அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பம் தொடர்பாக உங்களின் அவதானங்கள் மற்றும் பரிந்துரைகளை விரைவாக அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி : ................................

................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணைவிதியின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப விண்ணப்பதாரி தகுதி வாய்ந்தவராகக் காணப்படுகின்றார். அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கையிடுகிறேன்.

திகதி : ................................

................................
பொது சுகாதாரப் பரிசோதகர்

---

செயலாளர்,

மேலுள்ள விண்ணப்பதாரியின் விண்ணப்பத்துக்கு ஏற்ப தொடர்புடைய இடத்துக்கு அனுமதிப் பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை.

(பரிந்துரை செய்யவில்லையாயின் உரிய காரணத்தைக் குறிப்பிடவும்)

திகதி : ................................

................................
சுகாதார வைத்திய அதிகாரி

EOG 01 - 195/ 5

## சந்தைகளுக்காக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர் மற்றும் ஏனைய பணியாளர்கள் உரிய செயற்பாடுகளை சரியாக நிறைவேற்றுவதற்கான உரிய விதிமுறைகள் பற்றிய துணைவிதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபைக்கு சொந்தமான சந்தைக்காக நியமிக்கப்படும் பொறுப்பாளர் மற்றும் ஏனைய பணியாளர்கள் உரிய செயற்பாடுகளை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு உரிய விதிகளை வழங்குவதற்காக இயற்றப்பட்டதாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் சந்தைச் பொறுப்பாளர்கள் தொடர்புடைய பணிகளை விபரித்தல் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது. குறுகிய பெயர்

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 157(9) ஆவது வாசகம் என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது. நியமனம்

4. சீதாவகபுர நகர சபைக்குரிய அனைத்து சந்தைகளுக்காகவும் சந்தைக் பொறுப்பாளர் என்ற பெயரில் பதவி ஒன்று இருக்க வேண்டியதோடு, பதவிக்கு தகுந்த ஒருவரின் நியமனத்தை அதிகாரத் தரப்பு மேற்கொள்ள வேண்டும்.

5. சீதாவக சந்தைப் பொறுப்பாளர் பதவி தொடர்புடைய நியமனம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 ஆவது வாசகத்தில் காணப்படும் விதிமுறைகள் போன்றே சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் 36 ஆவது வாசகத்துக்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

6. சந்தைக் காப்பாளரின் செயற்பாடுகளை சரியான மற்றும் பொருத்தமான வகையில் நிறைவேற்றுவதற்கு அவசியமான துணைப் பதவியை சபை தீர்மானம் எடுத்து அதற்குரிய நடைமுறைகளுக்கு ஏற்றவாறு செய்யப்பட வேண்டும். உதவிப் பதவி நிலை உருவாக்கம்

7. சந்தைப் பொறுப்பாளர் பின்வரும் விடயங்களை தானாக அல்லது உதவியாளர்கள் மூலம் பொதுச் சந்தை வளாகத்தினுள் (இதன் பின்னர் வளாகம் என அழைக்கப்படும்) செயற்படுத்த வேண்டும். சந்தைப் பொறுப் பாளரின் பணிகள்

(1) வளாகத்தினுள் வியாபாரம் செய்யும் அனைவரையும் பதிவு செய்து ஆவணமாக்கி அவற்றைப் பராமரித்தல்.

(2) வளாகத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ள வலயமாக்கலை கருத்திற் கொண்டு விற்பனைக்காக வியாபாரிகளை நிலை நிறுத்துதல்.

(3) நிரந்தரக் கடைகள் பராமரிக்கப்படும் பட்சத்தில், அது தொடர்பான ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க ஒவ்வொரு வளாகத்தின் கீழும் வியாபாரம் எவ்வாறு நடாத்தப்படுகின்றது என நிரந்தரமான அவதானத்துடன் செயற்படல்.

(4) வளாகத்தினுள் காணப்படும் கழிப்பறைகளின் தூய்மை அத்துடன் பொதுக் கழிப்பறைகளுக்கு உரிய துணைவிதிக்கு தொடர்புடைய கழிப்பறைகள் பராமரிக்கப்படுகின்றனவா என்பன குறித்த நிரந்தரமான மேற்பார்வை செயற்படுத்தப்பட வேண்டியதோடு, அது தொடர்பில் ஊழியர்களை இயக்குவதற்காக செயற்படல்.

(5) வளாகத்தினுள் சேகரிக்கப்படும் கழிவுகள் பிரதேச சபை முன்னெடுக்கும் கழிவு முகாமைத்துவத் திட்டத்துக்கு இணங்கும் வகையில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(6) வளாகத்தின் தரை தூசி பரவாமல் தடுக்கப்படும் வகையில் சுத்தம் செய்து பராமரித்தல் மற்றும் நீர் எளிதாக வடிந்தோடக்கூடிய வகையில் அதன் வடிகாண் அமைப்பைப் பராமரித்தல்.

(7) வளாகத்தில் இருந்து ஓடும் கழிவு நீர் அதற்குரிய வடிகாணில் இருந்து வெளியேறா வண்ணம் உரிய கழிவுநீர்க் குழி அல்லது உறிஞ்சும் குழிக்கு அனுப்பப் படுவதற்கு திட்டமிடல்.

(8) வளாகத்தினுள் நடாத்தப்படும் வியாபாரங்கள் தொடர்பில் பிரதேச சபையின் பொது மற்றும் தனியார் சந்தைகளுக்கான துணைவிதியின் விதிமுறைகளுக்கு ஏற்ப பராமரிக்கப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

(9) பொதுச் சந்தை வளாகத்தில் கிருமிநாசினிப் பயன்பாட்டை சரியான நேர அட்டவணைக்கு ஏற்ப மேற்கொள்ளல்.

(10) வளாகத்தினுள் மதுபானம், போதைப் பொருட் பாவனை அல்லது வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளும் நடக்காத வகையில் கவனித்துக் கொள்ளல்.

(11) வளாகம் பொதுச் மக்களின் சுகாதாரத்துக்கு உகந்த வகையில் பராமரிக்கப்படுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

(12) வளாகத்தின் வாகனம் நிறுத்துமிடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்படுவதை தடுப்பதுடன் வளாகத்தினுள் நுழையும் மற்றும் வெளியேறும் வாயில்களை முறையாகப் பயன்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.

(13) வளாகத்தின் நிரந்தர தூய்மையைப் பேணுவதற்காக மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி அறிவுரை மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதோடு அது தொடர்பில் உரிய மேற்பார்வை செய்தல்.

(14) வளாகத்தினுள் பிச்சை எடுத்தல், தற்காலிகமாகத் தங்குதல் மற்றும் அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் பயன்பாடு என்பவற்றைத் தடுத்தல்.

(15) வளாகத்தில் நாய்கள், பூனைகள் போன்ற விலங்குகள் பரவாமல் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(16) வளாகத்தில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் மற்றும் வாடகை போன்றன முறையாகச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. பொதுச் சந்தையின் பொறுப்பாளர் இத்துணைவிதியின் 7 ஆவது வாசகத்தில் கீழ் தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை சரியாக நிறைவேற்றுவதற்கு உதவிச் சேவையாளர்களுக்கு பணிகளை குறித்தளிக்க முடியுமானதோடு அவ்வாறு குறித்தளிக்கப்பட்ட பணிகள் சரியான மற்றும் பொருத்தமான முறையில் நிறைவேற்றப்படுவதை அவர் உறுதி செய்ய வேண்டும்.

தொற்றுநோய் நிலையொன்றில் அறிவுறுத்தல் களை சரியாக செயற் படுத்துதல்

9. இலங்கையின் எந்த ஒரு பகுதியிலோ அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்திலோ ஏதேனும் தொற்றுநோய்ப் பரவலுக்கான காரணிகள் காணப்படும் நிலையில் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் நிலையொன்று ஏற்படலாம் என சந்தேகிக்க போதுமான காரணிகள் காணப்படும் நிலையில் அது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளர் வளாகத்தில் பின்பற்றப்பட வேண்டிய பின்வரும் அறிவுறுத்தல்களை அல்லது இது தொடர்பான வேறெந்த அறிவுறுத்தல்களை வளாகத்தில் செயற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதும் அவை அவ்வாறே பின்பற்றப்படுகின்றன என உறுதி செய்வதும் சந்தைப் பொறுப்பாளரின் கடமையாகும்.

(1) வளாகத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு வளாகத்தில் உள்ள பல்வேறு இடங்களில் கை கழுவுவதற்கான நீர் வழங்கல் பாதுகாப்பாக உள்ளன என்பதும் அவை நிரந்தரமான பயன்பாட்டில் உள்ளன என்பதும்.

(2) வளாகத்தில் உள்ள பொதுக் கழிப்பறைகளைப் பயன்படுத்தும் போது அது தொடர்பிலான நிபந்தனைகள் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றன மற்றும் அது தொடர்பிலான அறிவுறுத்தல்கள் சரியான முறையில் நடைபெறுகின்றன என்பதும்.

(3) வளாகத்தினுள் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலின் படி மேற்கொள்ளப்பட வேண்டிய கிருமி நாசினிச் செயன்முறை குறிப்பிட்ட நேர அட்டவணைக்கு ஏற்ப நடைபெறுகின்றது என்பதும்.

(4) வளாகத்தைப் பயன்படுத்துபவர்கள் சமூக இடைவெளியைப் பேண வேண்டும் என அறிவுறுத்தப்படும் பொழுது அதற்கேற்ப வளாகத்தில் அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன என்பதும்.

(5) வளாகத்தினுள் வாகனங்கள் நுழைவது தடுக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டால் அதற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும்.

(6) வளாகத்தினுள் பின்பற்றப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் தொடர்பில் வளாகத்திற்குள் அறிவித்தல் மற்றும் ஏனைய விளம்பர முறைகளின் மூலம் விளம்பரப்படுத்துவதும்.

(7) வளாகத்தில் கழிவுகளை அகற்றும் போது, பயன்படுத்தப்படும் முகக்கவசம், கையுறைகள் போன்றன மருத்துவக் கழிவுகளாகக் கருதப்பட்டு வேறு கழிவுகளுடன் கலக்காமல் அகற்றப்பட வேண்டும் என்பதும்.

(8) பொதுச் சுகாதாரப் பாதுகாப்புக்காக தவிசாளர் வளாகத்தினுள் வியாபார நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு வியாபாரச் செயற்பாடும் அல்லது பொதுமக்கள் நடமாட்டமும் வளாகத்தில் இடம்பெறக் கூடாது என்பதும்.

(9) வளாகத்தினுள் அனைத்து வர்த்தக அறைகள் தொடர்புடைய பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தனித்தனி நபர்கள் நியமிக்கப்பட்டிருப்பதும்.

(10) பொதுச் சுகாதார நலனுக்காக சுகாதார வைத்திய அதிகாரியால் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கமைய தவிசாளரால் வழங்கப்படும் எந்தவொரு அறிவுறுத்தலும் வளாகத்தினுள் சரியான முறையில் செயற்படுத்தப்படுவதும்.

10. இத்துணைவிதியில் தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் சேவைப் பணியாளர்களிடம் இருந்து நிறைவேற்றிக் கொள்வது சந்தைப் பொறுப்பாளரின் பணியாகும்.

11. சந்தைப் பொறுப்பாளர் வளாகத்தில் உள்ள சேவைப் பணியாளர்களின் அன்றாட நடவடிக்கைப் பதிவுகளைப் வைத்திருக்க வேண்டியதோடு, பின்னரான மேற்பார்வைக்காக வருகை தருவோரின் குறிப்புகளுக்காக இரண்டு தின குறிப்புப் புத்தகத்தினை பராமரிக்க வேண்டும். அறிக்கைகளை வைத்திருப்பது

12. தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அதிகாரியால் பொதுச் சந்தைகளை நடாத்துவது தொடர்பாக எழுதப்பட்ட சட்டங்களுக்கு இணங்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றனவா என தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட வேண்டியதோடு அவ்வாறான மேற்பார்வையின் பின்னர் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை சரியாக செயற்படுத்துவது பொறுப்பாளரின் பொறுப்பாக மற்றும் பணியாக அமையும். மேற்பார்வை செய்தல்

13. சந்தையின் பொறுப்பாளர் எப்போதும் சபையின் தவிசாளர் மற்றும் செயலாளரின் பொது நிர்வாகத்தின் கீழ் செயற்பட வேண்டும். தவிசாளர் மற்றும் செயலாளரின் பொது நிருவாகத்தின் கீழ் செயற்பட வேண்டும் என்பது

14. இத்துணைவிதியின் சொற்கள் தொடர்பில் விளக்கம் அவசியமாயின்; இத்துணைவிதியில், பொருள் கோடல்

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையாகும்,

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையின் சமகாலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் அல்லது அப்பதவி நிலையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு நபரைக் குறிக்கின்றது,

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அவ்வாறான பதவியை வகிக்கும் நபராகும்,
"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உரிய சேவையில் ஈடுபடுகின்ற பிரதேச சபை அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பதவிநிலையினைக் கொண்டிருப்பவர்களாகும்.

15. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஒவ்வாமையெதுவுமிருப்பின் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழிகள் இடையான ஒவ்வாமை

## சந்தை தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற பொது அல்லது தனியார் சந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் கண்காணிப் பதற்குமாக இயற்றப்பட்டுள்ளது.

குறுகிய பெயர்

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் சந்தை தொடர்பான துணைவிதி என அழைக்கப்படுகின்றது.

சட்ட அதிகாரம்

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் வாசகம் 153 மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(II) என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

4. இத்துணைவிதியின் செயற்பாட்டுக்காக சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) அமைந்துள்ள பேலியகொட நகர சபையினால் அல்லது வேறு எந்தவொரு தரப்பினராலும் பொருள் ஒன்றை அல்லது பண்டத்தை விற்பனை செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் காணப்படும் பொது அல்லது தனியார் சந்தை குறிப்பிடப்படுகின்றது.

சந்தை பொறுப்பாளர் ஒருவரின் முகாமையின் கீழ் நடாத்தப்பட வேண்டும் என்பது.

5. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தினுள் அனைத்து பொதுச்சந்தைகள் மற்றும் தனியார் சந்தைகள் ஒவ்வொன்றும் (இங்கு சில இடங்களில் வளாகம் எனவும் குறிப்பிடப்படும்) என்பன பொறுப்பாளர் ஒருவருடைய முகாமைத்துத்தின் கீழ் நடத்திச் செல்லப்பட வேண்டும்.

பொது மற்றும் தனியார் சந்தைகள் தொடர்பான தேவைகள்

6. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற அனைத்து பொது மற்றும் தனியார் சந்தைகள் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(1) வளாகத்துடன் தொடர்புடைய அனைத்து நிரந்தரக் கட்டடங்களும் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் கீழ் மற்றும் வீட்டு வசதிகள் மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள விதிகளுக்கு இசைவாக கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(2) வளாகத்தினுள் காணப்படும் கட்டடங்கள் நிரந்தரக் கட்டுமானப் பொருட்களால் நன்கு கட்டப்பட்டு இருக்க வேண்டியதோடு அவை நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(3) வளாகத்தினுள் ஒவ்வொரு கட்டடத்துக்கும் ஏற்ற வகையில் பொருட்கள் மற்றும் பண்டங்களை விற்பனை செய்வதற்கான மேடைகள் இருக்க வேண்டியதோடு முன்புறம் கொள்வனவில் ஈடுபடுபவர்கள் நகரும் அளவுக்கு இடவசதிகள் காணப்பட வேண்டும்.

(4) வளாகத்தினுள் காணப்படும் நிரந்தரக் கட்டடங்களில் காணப்படும் அனைத்துக் கடைகளும் குறைந்தது இரண்டு சதுர மீட்டர் அகலம் கொண்டனவாகக் காணப்பட வேண்டும்.

(5) வளாகத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் விசேட தேவை உடையோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவசியமான அணுகல் வசதிகளுடன் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(6) வளாகத்தில் உள்ள அனைத்துக் கட்டடங்களும் பாதுகாப்புடன் கட்டப்பட்டிருக்க வேண்டியதோடு வளாகத்தில் உள்ள கட்டடங்களின் கட்டுமானப் பொருட்களில் எந்த வித உயிரினங்களும் தங்கியிருக்கக் கூடாதென்பதோடு உணவு அல்லது வர்தத்தகப் பொருட்களுக்கான கட்டடங்கள் நச்சுத்தன்மையை வெளியேற்றாத பொருட்களால் அமைக்கப்பட வேண்டும்.

(7) வளாகத்தினுள் குறுக்கு மாசடைதலைத் தடுக்கும் வகையில் பிரிக்கவும், பகிரவும், நிலைநிறுத்தவும் முடியுமான வகையில் வளாகத்தில் உள்ள கட்டடங்களின் உள்ளக அமைப்பு தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(8) வளாகத்துக்கு கொண்டுவரப்படும் வர்த்தகப் பண்டங்கள் கொண்டுவரப்படுவதில் இருந்து விற்பனை செய்வது வரையான நடவடிக்கைகளை சுத்தமான வகையில் செயற்படுத்தும் வகையில் வளாகத்தின் உள் அமைப்பு தயார் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(9) வளாகத்தினுள் வர்த்தகப் பண்டங்களை கொண்டு வருகின்ற மோட்டார் வாகனங்கள் உரிய முறையில் வளாகத்தினுள் நுழைவதற்கு வசதிகள் காணப்படவேண்டியதோடு வளாகத்துக்குள் நுழையும் மோட்டார் வாகனங்கள் வெளியேற்றும் புகையினால் வளாகத்தினுள் இருக்கும் உணவு விற்பனைப் பொருட்கள் எந்த வகையிலும் மாசுபடுத்தப்படக்கூடாது.

(10) வளாகத்தினுள் பொருட்களைக் கொண்டுவருகின்ற வாகனங்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதிய வசதிகள் காணப்பட வேண்டும்.

(11) வளாகத்தினுள் தண்ணீர் தேங்கி நிற்காத வகையில் தரை தயார் செய்யப்பட்டிருக்க வேண்டியதோடு வளாகத்தில் உள்ள அனைத்து கழிவு நீர் மற்றும் மழைநீர் என்பன எளிதாக வடிந்தோடும் வகையில் வடிகால்கள் தயார்செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(12) கழிவு நீரை திசை திருப்புவதற்குரிய கழிவுநீர்க்குழிகள் மற்றும் உறிஞ்சும் குழிகள் என்பன அனுமதி பெறப்பட்ட திட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் அவ்வாறான குழிகள் நீர் ஆதாரத்தில் குறைந்தபட்சம் 15.25 மீட்டர் தொலைவில் அமைக்கப்பட வேண்டியதோடு அவை வெளியில் காணப்படக்கூடாது.

(13) வளாகத்தினுள் போதிய அளவில் கழிப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதிகள் வழங்கப்பட வேண்டியதோடு அவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாகப் பேணப்பட வேண்டும்மென்பதோடு கழிப்பறை தொடர்பான துணைவிதியில் தேவையான சிறிய மாற்றங்கள் பொருத்தமான வகையில் மேற்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட வேண்டும்.

(14) வளாகத்தில் போதிய இடைவெளியைப் பேணிய வண்ணம் பண்டங்களை விற்கவும் கொள்வனவு செய்யவும் முடியுமான வகையில் இடம் காணப்படவேண்டியதோடு வளாகத்தினுள் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது வாடிக்கையாளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாத வண்ணம் பொருட்களை இடம் மாற்றும் வகையில் உள்ளகக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(15) பொருட்களை வைத்து விற்பனை செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு மேடையும் நுட்பமற்ற துளைகளைக் கொண்டிருக்க வேண்டியதோடு மேற்பரப்பு நீர்ப்புகாத வகையில் காணப்பட வேண்டிதுடன் அவை தொற்றுநீக்கிகள் கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(16) வளாகத்தினுள் விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் பொருட்கள் அவற்றுக்குரிய வலயங்களில் விற்பனை செய்யும் வகையில் வலயங்கள் பிரிக்கப்படவேண்டியதோடு குறித்த வலயமொன்றில் அதற்குரிய பொருட்களைத் தவிர வேறெவற்றையும் பிரதான விற்பனைப் பொருட்களாக அவ்வலயத்தில் வைக்கக்கூடாது.

(17) விற்பனைக்கான பொருட்கள் அல்லது பண்டங்கள் எவையும் தரையுடன் நேரடியாகத் தொடர்புறா வண்ணம் பேணப்பட வேண்டியதோடு விற்பனைக்காக வைக்கப்படும் பொருட்கள் எப்போதும் ஒரு ஆதாரத்தின் மேல் வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும்.

(18) வளாகத்தில் வாடிக்கையாளர்கள் அங்குமிங்கும் நகர்ந்து பொருட்களை வாங்கும் அளவுக்கு போதுமான இடம் வழங்கப்பட்ட பின்னர் எஞ்சும் இடங்களை விற்பனைக்காக ஒதுக்குவது பொறுப்பாளரின் செயற்பாடாக அமைய வேண்டும்.

(19) வளாகத்தில் பொருட்களை நிறுக்க மற்றும் அளவிட பயன்படுத்தப்படும் உபகரணங்கள உரிய தரத்துடன் காணப்பட வேண்டும்.

(20) வளாகத்தினுள் நாய்கள் மற்றும் பூனைகள் போன்ற பிராணிகள் ஒன்றுகூடவோ தங்கவோ இடமளிக்கப்படக்கூடாது.

வளாகத்தினுள் மீன் விற்பனை செய்தல்

7. வளாகத்தினுள் மீன் விற்பனைக்காக ஒதுதுக்கப்பட்ட பகுதியில் அதற்கான குறிப்பிட்ட வர்த்தக அறைகள் கட்டப்பட்டு இருக்க வேண்டியதோடு அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் பூரணப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

(1) மீன் விற்பனைக்காக நிரந்தரமான பொருட்களால் தயாரிக்கப்பட்ட மேடைகள் காணப்படவேண்டியதோடு அங்கு நீர் எளிதில் வடிந்தோடும் வகையில் வடிகான்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) மீன்களைக் களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனைக்கு பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களிலும் எந்த வித உயிரினங்களும் உயிர்வாழாத வகையில் காணப்பட வேண்டியதோடு அவற்றில் மீன்களுக்கு பொருத்தமற்ற பொருட்களை அல்லது நச்சு வாயுக்கள் எவையும் வெளியேறுதல் கூடாது.

(3) விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் மீன்களுக்கு மேலே தொங்க விடப்படும் ஒளி விளக்குகள் மற்றும் பிற சாதனங்கள் என்பன பாதுகாப்பான நிலையில் காணப்படவேண்டியதோடு அவை மூடப்பட்டு பேணப்பட வேண்டும்.

(4) மீன் விற்பனை செய்யப்படும் பகுதி தொற்றுநீக்கம் செய்யப்பட்டு சுத்தமான நிலையில் பேணப்படவேண்டியதோடு ஒவ்வொரு செயற்பாடும் தொடங்குவதற்கும் முன்னர் கிருமிநாசினி பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(5) மீன்கள் விற்பனைக்காக வைக்கப்படும் இடங்கள் மற்றும் அவற்றுக்கு மேலே உள்ள பாகங்கள், மற்றும் மீன்களுடன் தொடுகை நிலையில் காணப்படும் பாகங்கள் எவையும் திரவ அல்லது வாயுக்களின் கசிவற்ற நிலையில் பேணப்பட வேண்டியதோடு அங்கு வைக்கப்பட்டுள்ள மீன்களில் இருந்து எவ்வகையிலும் துர்நாற்றம் எழக்கூடாது.

(6) மீன் விற்பனை அறைகளை சுத்தம் செய்வதிலிருந்தும் பயன்பாட்டிலிருந்தும் வெளியேறும் நீரை அதற்கென ஒதுக்கப்பட்ட வடிகால் அமைப்பின் கீழ் உள்ள கழிவுநீர்க்குழி அல்லது உறிஞ்சும் குழிக்கு அனுப்ப வேண்டியதுடன் குறித்த வடிகால் வளாகத்தில் காணப்படும் ஏனைய வடிகால்களுடன் தொடர்புகொள்ளாத வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) மீன் விற்பனையின் பொழுது சேரும் கழிவுகளை ஏனைய கழிவுகளுடன் கலக்காத வகையில் மூடப்பட்டட குப்பைத் தொட்டிகளில் தற்காலிகமாக சேகரித்து பின்னர் நகர சபையினால் செயற்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்துக்கு ஏற்ப அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களின்படி அகற்றப்பட வேண்டும்.

(8) விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மீன்களை விட மேலதிகமான மீன்களை வைப்பதற்குரிய குளிர்சாதன வசதிகள் காணப்பட வேண்டும்.

(9) மீன்கள் அதே இடத்திலேயே களஞ்சியப்படுத்தப்படுமானால் அதற்காக போதிய அளவு குளிர்சாதனப் பெட்டிகள் காணப்படவேண்டியதோடு குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்ச்சியான மினசாரம் வழங்கலுடன் பராமரிக்கப்பட வேண்டும்.

(10) குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட மீன்கள் சுற்றுப்புற வெப்பநிலையில் வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் அவற்றை குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கக் கூடாது.

(11) மீன் விற்பனையின் போது மீன்களைப் பொதியிடுகின்ற காகிதம் அச்சிடப்பட்ட காகிதமாக இருத்தலோ அல்லது பொதியிடும் பொருட்கள் மீன்களுடன் நேரடியாக தொடுகையுறும் வகையில் பொதியிடப்படவோ கூடாது.

(12) மீன் விற்பனை செய்யும் இடத்தில் அவ்விற்பனைக்கு உதவும் பொருட்கள் தவிர்ந்த அவ்விடத்துக்கு பொருந்தாத வேறு எந்தப் பொருட்களும் வைக்கப்படக்கூடாது.

(13) மீன் விற்பனைச் செயற்பாட்டில் ஈடுபடும் அனைவரும் கழுவி சுத்தம் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்திருக்க வேண்டும்.

(14) மீன் விற்பனை தொடர்பில் ஒரு வளாகத்தை பராமரிப்பது தொடர்பில் இதுவரை ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் பெறக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்று காணப்படின் அவ்வனுமதிப்பத்திரத்தின் விதிகள் அனைத்தும் வளாகத்தில் மீன் விற்பனையில் ஈடுபடுபவர்களால் பின்பற்றப்பட வேண்டிதோடு அவ்விதிமுறைகள் எவையும் இவ்விதிகளால் மறைக்கப்பட்டுள்ளன எனக் கருதலாகாது.

8. வளாகத்தினுள் இறைச்சி விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட வலயமொன்றை நடாத்திச் செல்வததாக இருந்தால் அதற்கேற்ப குறிப்பிட்ட வர்த்தக அறைகள் கட்டப்பட்டிருக்க வேண்டியதோடு பின்வரும் விடயங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

வளாகத்தினுள் இறைச்சி விற்பனை செய்தல்

(1) தொடர்புடைய வர்த்தக அறைகள் அதற்காகவே உரிய வளாகமாகக் கருதப்படும் வகையில் கட்டப்பட்டிருக்க வேண்டியதோடு அனைத்து வர்த்தக அறைகளும் இறைச்சி விற்பனைக்கு ஏற்ற இடத்தை பராமரிப்பது தொடர்பாக எழுதப்பட்ட சட்டத்துக்கு அமைய வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் பராமரிக்கப்படுகின்றனவாக இருக்க வேண்டும்.

(2) இறைச்சி களஞ்சியப்படுத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனை செய்யும் இடங்களில் உள்ள அனைத்து உபகரணங்களும் உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்ததாக இருக்கக் கூடாததுடன் அவ்வுபகரணங்கள் இறைச்சிக்கு பொருத்தமற்ற பொருட்களை அல்லது நச்சு வாயுக்களை வெளியேற்றக் கூடாது.

(3) விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள இறைச்சிகளின் மேல் தொங்கவிடப்பட்டுள்ள ஒளி விளக்குகள் மற்றும் பொருத்தப்பட்டுள்ள ஏனைய சாதனங்கள் பாதுகாப்பான நிலையில் காணப்படவேண்டியதோடு அவை மூடப்பட்டனவாக இருக்க வேண்டும்.

(4) இறைச்சி விற்பனை செய்யப்படும் பகுதி தொற்றுநீக்கம் செய்யப்பட்டு சுத்தமான நிலையில் பேணப்படவேண்டியதோடு ஒவ்வொரு செயற்பாடும் தொடங்குவதற்கும் முன்னர் கிருமிநாசினி பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட வேண்டும்.

(5) இறைச்சி விற்பனைக்காக வைக்கப்படும் இடங்கள் மற்றும் அவற்றுக்கு மேலே உள்ள பாகங்கள், மற்றும் மீன்களுடன் தொடுகை நிலையில் காணப்படும் பாகங்கள் எவையும் திரவ அல்லது வாயுக்களின் கசிவற்ற நிலையில் பேணப்பட வேண்டியதோடு அங்கு வைக்கப்பட்டுள்ள இறைச்சிகளில் இருந்து எவ்வகையிலும் துர்நாற்றம் எழக்கூடாது.

(6) இறைச்சி விற்பனை அறைகளை சுத்தம் செய்வதிலிருந்தும் பயன்பாட்டிலிருந்தும் வெளியேறும் நீரை அதற்கென ஒதுக்கப்பட்ட வடிகால் அமைப்பின் கீழ் உள்ள கழிவுநீர்க்குழி அல்லது உறிஞ்சும் குழிக்கு அனுப்ப வேண்டியதுடன் குறித்த வடிகால் வளாகத்தில் காணப்படும் ஏனைய வடிகால்களுடன் தொடர்புகொள்ளாத வகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) இறைச்சி விற்பனையின் பொழுது சேரும் கழிவுகளை ஏனைய கழிவுகளுடன் கலக்காத வகையில் மூடப்பட்டட குப்பைத் தொட்டிகளில் தற்காலிகமாக சேகரித்து பின்னர் நகர சபையினால் செயற்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்துக்கு ஏற்ப அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களின்படி அகற்றப்பட வேண்டும்.

(8) விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள இறைச்சியை விட மேலதிகமான இறைச்சியை வைப்பதற்குரி குளிர்சாதன வசதிகள் காணப்பட வேண்டும்.

(9) இறைச்சி அதே இடத்திலேயே களஞ்சியப்படுத்தப்படுமானால் அதற்காக போதிய அளவு குளிர்சாதனப் பெட்டிகள் காணப்படவேண்டியதோடு குளிர்சாதனப் பெட்டிகள் தொடர்ச்சியான மினசாரம் வழங்கலுடன் பராமரிக்கப்பட வேண்டும்.

(10) குளிர்சாதனப் பெட்டிகளில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட இறைச்சி சுற்றுப்புற வெப்பநிலையில் வைக்கப்பட்ட பின்னர் மீண்டும் அவற்றை குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கக் கூடாது.

(11) இறைச்சி விற்பனையின் போது இறைச்சியைப் பொதியிடுகின்ற காகிதம் அச்சிடப்பட்ட காகிதமாக இருத்தலோ அல்லது பொதியிடும் பொருட்கள் இறைச்சியுடன் நேரடியாக தொடுகையுறும் வகையில் பொதியிடப்படவோ கூடாது.

(12) இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் அவ்விற்பனைக்கு உதவும் பொருட்கள் தவிர்ந்த அவ்விடத்துக்கு பொருந்தாத வேறு எந்தப் பொருட்களும் வைக்கப்படக்கூடாது.

(13) இறைச்சி விற்பனைச் செயற்பாட்டில் ஈடுபடும் அனைவரும் கழுவி சுத்தம் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்திருக்க வேண்டும்.

(14) இறைச்சி விற்பனை தொடர்பில் ஒரு வளாகத்தை பராமரிப்பது தொடர்பில் இதுவரை ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் மூலம் பெறக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்று காணப்படின் அவ்வனுமதிப்பத்திரத்தின் விதிகள் அனைத்தும் வளாகத்தில் இறைச்சி விற்பனையில் ஈடுபடுபவர்களால் பின்பற்றப்பட வேண்டிதோடு அவ்விதிமுறைகள் எவையும் இவ்விதிகளால் மறைக்கப்பட்டுள்ளன எனக் கருதலாகாது.

பொதுவான நிபந்தனைகள்

9. வளாகத்தினுள் மரக்கறி மற்றும் பழங்களை விற்பனை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மேடைகள் தரை மட்டத்தில் இருந்து குறைந்த பட்சம் 45 சென்டி மீட்டர் உயரத்தில் இருக்க வேண்டியதோடு அத்-தகைய மேடைகள் இல்லாத சந்தர்ப்பங்களில் அவை போதுமான உயரம் கொண்ட தாங்கியில் வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும்.

10. வளாகத்தில் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவரும் நியமப்படுத்தப்பட்ட எடை மற்றும் அளவிடும் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

11. விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள காய்கறிகள் மற்றும் பழங்களுடன் பழுதடைந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் கலக்கப்படக் கூடாததோடு பழுதடைந்த காய்கறிகள் மற்றும் பழங்களை அகற்றுவதற்கு வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் எப்போதும் இட்டு அகற்ற வேண்டும்.

12. பழுதடைந்த பழங்கள் மற்றும் காய்கறிகளை எச்சந்தர்ப்பத்திலும் நுகர்வுக்காக அவற்றை வேறு விதங்களில் தயாரித்துப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படக் கூடாது என்பதில் வியாபாரத்தில் ஈடுபடும் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும்.

13. வளாகத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கழுவுவதற்கு குடிப்பதற்காக பயன்படுத்தப்படும் நீர் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதோடு அதற்கென குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் மாத்திரமே அவ்வாறான கழுவுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

14. வியாபாரம் காரணமாக சேர்கின்ற கழிவுகளை வியாபாரம் முடிவடைந்த பின்னர் வளாகத்தில் கழிவுகளை அகற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் அல்லது அதற்கென குறித்தொதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் அகற்றுவதனை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

15. எவ்வகையிலும் வளாகத்தினுள் சமைத்தல், தீ மூட்டுதல் அல்லது பிற உணவு தயாரிப்பு நடவடிக்கைகளில் எவரும் ஈடுபடக் கூடாது.

16. தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்படும் உணவினை வளாகத்தினுள் விற்பனை செய்யும் பொழுது :

(1) உணவு மாசடையும் ஆபத்து உள்ள இடங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படக் கூடாது.

(2) எப்போதும் சீல் வைக்கப்பட்டுள்ள அல்லது காற்றுக் கசிவு ஏற்படாத வகையில் மூடப்பட்ட கொள்கலன்களில் வைக்கப்பட்டே உணவு விற்பனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) எந்தவொரு வகையிலும் திறந்த வெளியில் வைத்து உணவு விற்பனையில் ஈடுபடக்கூடாது.

(4) தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்படும் உணவுகளை வளாகத்தினுள் அங்குமிங்கும் கொண்டு சென்று விற்பனையில் ஈடுபடக் கூடாது.

(5) உணவை விற்பனை செய்யும் அனைவரும் கையுறைகள் அணிந்திருக்க வேண்டியதோடு உணவினை கைகளால் தொடாமல் உரிய கைப்பிடியைப் பயன்படுத்தியே உணவை எடுத்து விற்பனை செய்தல் வேண்டும்.

17. வளாகத்தினுள் எந்த ஒரு நபரும் எந்த வகையிலும் மது அருந்தவோ அல்லது அவ்வாறு மது அருந்தி செயற்படுவதோ அல்லது புகைப்பிடிப்பதோ கூடாது.

18. வளாகத்தினுள் எந்த ஒரு நபரும் ஆபாசமான வார்த்தைகளை உச்சரிக்கவோ அல்லது ஆபாசமாக நடந்துகொள்ளவோ கூடாது.

19. எந்தவொரு தொற்றுநோயினாலும் பாதிக்கப்பட்ட அல்லது அவ்வாறான நோய்த்தொற்று ஏற்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்ற அல்லது அவ்வாறான நோயொன்றைக் காவுகின்ற அல்லது தொற்றுக் காயங்கள், தோல் தொற்று நோய்கள், புண்கள், வயிற்றோட்டம் போன்றவற்றால் அவதிப்படுகின்ற அல்லது அத்தகைய நபர்களுக்கு பராமரிப்பு வழங்குகின்ற எவரும் வளாகத்தினுள் விற்பனையில் ஈடுபடக்கூடாது.

20. வளாகத்தினுள் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தி விளம்பரம் செய்வது அல்லது இசைநிகழ்ச்சிகளை நடாத்துவது கூடாது.

21. வளாகத்தினுள் எந்த ஒரு நபரும் யாசகம் செய்யவோ அல்லது காட்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதோ கூடாது.

தொற்றுநோய் நிலையின் பொழுது பொதுச் சந்தையை நடத்திச் செல்லல்

22. இத்துணைவிதியின் மேலுள்ள வாசகங்களில் எவை கூறப்பட்டிருப்பினும் இலங்கையில் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்றுநோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது ஏதேனும் தொற்றுநோய்கள் பரவுகின்ற நிலைகள் காணப்படுகின்ற போது அல்லது அவ்வாறு இடம்பெறலாம் என சந்தேகிப்பதற்கு போதிய காரணங்கள் இருக்கும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கமைய தவிசாளர் பின்வரும் நடவடிக்கைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் சில நடவடிக்கைகளை வளாகத்தின் பயனர்கள் பின்பற்ற வேண்டும் என பரிந்துரைப்பது சட்டபூர்வமானதாக அமைய வேண்டும்.

(1) வளாகத்தில் பல்வேறு இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடும் நபர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தமது கைகளைக் கழுவுவதற்கான நீர் வழங்கல் வசதிகள் வழங்கப்படவேண்டும் என்பதும்,

(2) வளாகத்தில் பொதுக் கழிப்பறைகள் சாதாரணமாக சுத்தம் செய்யப்படுவதற்கு மேலதிகமாக கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி எப்போதும் சுத்தம் செய்யும் செயற்றிட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதும்,

(3) வளாகத்தில் உள்ள பொதுக்கழிப்பறைகள் தற்காலிகமாக மூடப்பட வேண்டும் என்பதும்,

(4) வளாகத்தினுள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் பல வழிகள் காணப்பட வேண்டுமென்பதும்,

(5) ஒவ்வொருவருக்குமிடையே பேணப்பட வேண்டிய குறைந்த பட்ச இடைவெளி பரிந்துரைக்கப் பட்டு வியாபாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் இடையே பொருத்தமான தூரம் பேணப்பட வேண்டுமென்பதும்,

(6) வளாகத்தினுள் காற்றோட்டம் நன்கு பெறக்கூடிய வகையில் காற்றோட்டம் நன்றாக தங்கு தடையின்றி வீசும் வகையில் பேணப்பட வேண்டுமென்பதும்,

(7) வளாகத்தினுள் நுழையும் வேளை ஒரு தடவையில் குழுவாக நுழைபவர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டு நுழைவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டுமென்பதும்,

(8) வளாகத்தினுள் சுவாச ஒழுக்கங்கள் பேணப்பட வேண்டும் என்பதும் காய்ச்சல் அல்லது சுவாச நோய் உள்ள அல்லது அத்தகைய நிலை காணப்படுவதாக சந்தேகிக்கப்படும் எவரும் வளாகத்தினுள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட வேண்டும் என்பதும்,

(9) வளாகத்தினுள் உள்ள வியாபாரிகள் மற்றும் பயனர்கள் முகக் கசவங்களை அணிந்திருக்கு வேண்டுமென்பதும் வியாபாரிகள் முகக் கவசம் மற்றும் கையுறைகளை அணிந்திருக்க வேண்டுமென்பதும்,

(10) வளாகத்தினுள் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் உள்ளடங்கிய விளம்பரங்கள் மற்றும் தேவையான பிற விளம்பரங்கள் என்பன வளாகத்தில் தொடர்ச்சியாகப் பேணப்பட வேண்டுமென்பதும்,

(11) வளாகத்தினுள் பணப்பரிவர்த்தணைகளில் ஈடுபடும் வேளை அந்த விடயத்தை நிறைவேற்ற ஒவ்வொரு வர்த்தக அறையிலும் ஒவ்வொருவர் காணப்பட வேண்டுமென்பதும் அத்தகைய வர்கள் தொடர்ச்சியாக தமது கைகளை தொற்றுநீக்கி கொண்டு சுத்தம் செய்ய வேண்டுமென்பதும்,

(12) எத்தகைய நபராக இருப்பினும் எக்காரணங்கொண்டும் எவ்வகையிலும் வளாகத்தினுள் உணவு உட்கொள்ளக் கூடாதென்பதும்,

(13) வளாகம் வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு வரையறுக்கப்பட்ட வியாபாரத்திற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதும்,

(14) ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் வளாகம் வியாபார நடவடிக்கைகளுக்காக பராமரிக்கப்படக் கூடாது என்பதும்,

*நியமங்களுக்கு இணங்க வேண்டும் என்பது*

23. மேலுள்ள வாசகத்தின் பிரகாரம் தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் நியமங்களை அவற்றுக்கேற்ப வளாகத்தைப் பயன்படுத்தும் அனைவரும் செயற்படுத்த வேண்டும்.

24. நகர சபைக்கு சொந்தமான ஒவ்வொரு பொதுச் சந்தையும் ஒவ்வொரு தனியார் சந்தையும் அவை தொடர்பான நிலத்தின் அளவுக்கு ஏற்ப எல்லைகள் அட்டவணைப்படுத்தப்பட வேண்டும்.

25. நகர சபைக்கு சொந்தமான பொதுச் சந்தையாக இருக்கும் பொழுது,

(1) இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு இணங்க அதனைப் பராமரிப்பதற்குரிய அனைத்துப் படிமுறைகளும் முறையாச செயற்படுத்தப்படுவதை தவிசாளர் உறுதி செய்ய வேண்டும்.

(2) நகர சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப சபை சார்பாக நடாத்துவதற்கு முறையான கேள்விப்பத்திர முறைமையின் கீழ் அடையாளம் காணப்பட்ட இரண்டாம் தரப்பொன்றுக்கு ஒப்படைக்க முடியும்.

(3) நகர சபை சார்பாக ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் சந்தையை நடாத்தும்பொழுது இத்துணைவிதியின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அதை நடத்துவது பற்றி உறுதி செய்வதற்கு அதற்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் அதனை மேற்பார்வை செய்ய வேண்டும்.

*கட்டணத்தை தீர்மானித்தல்*

26. (1) நகர சபையினால் பொதுச்சந்தை நடாத்தப்படும் வேளை வளாகத்தில் மேற்கொள்ளப்படும் வியாபாரம் தொடர்பாக அறவிடப்படும் கட்டணங்கள் பிரதேச சபையின் தீர்மானத்துக்கேற்ப அமைந்திருக்க வேண்டும்.

(2) மேலே வாசகம் (1) இல் குறிப்பிடப்பட்ட கட்டணம் மற்றும் பொதுச் சந்தையில் விற்பனையாளர்களுக்கு இடம் ஒதுக்கல் போன்ற விடயங்கள் அவற்றுக்கேற்ப நகர சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு குழு வழங்கும் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு சபை தீர்மானிக்க வேண்டும்.

*தனியார் சந்தை தொடர்பான அனுமதிப்பத்திரம்*

27. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு தனியார் சந்தையும் தவிசாளரிடம் இருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் நடத்திச் செல்லப்பட முடியாது.

28. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்தப்படுகின்ற அனைத்து தனியார் சந்தைகளும் இத்துணைவிதியில் குறிப்பிடப்படுகின்ற விதிமுறைகளுக்கு இணங்காதபட்சத்தில் அவற்றுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது.

*அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப் பித்தல்*

29. வாசகம் 27 இன் கீழ் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் அனைவரும் இத்துணைவிதியின் கீழ்க் காணப்படும் உப ஆவணத்துக்கு ஏற்ப அதற்கான விண்ணப்பத்தை தவிசாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

30. நகர சபை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பம் தொடர்பில் அறவிடப்படவேண்டிய கட்டணம் சபைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனை மூலம் தீர்மானிப்பது சட்டபூர்வமானதாக வேண்டும்.

31. 27 ஆவது வாசகத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இத்துணைவிதியின் கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு ஏற்ப முன்னரே இரத்துச் செய்யப்படாவிட்டால் குறித்த அனுமதிப்பத்திரம் அவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாகும்.

32. (1) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கு அறவிடப்படவேண்டிய கட்டணம் அடிப்படைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு சபையினால் தீர்மானிக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற கட்டணமாக அமைதல் வேண்டும். அனுமதிப் பத்திரத்துக் கான கட்டணம்

(2) அனுமதிப்பத்திரமொன்று வழங்குவதற்காக இடத்தை பரிசோதனை செய்வதற்காக சபையினால் தீர்மானித்து அறவிடப்படும் கட்டணம் சட்டபூர்வமானதாக அமைதல் வேண்டும்.

33. இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு அமைய வளாகம் காணப்படுகின்றதா என்பதை பரிசோதனை செய்வதற்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அதிகாரி வளாகத்தினுள் நுழைதல் மற்றும் தேவையான மாதிரிகளை சேகரித்தல் என்பன சட்டபூர்மானதாகும். சோதனை செய்யும் அதிகாரம்

34. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொண்ட வளாகம் ஒன்று இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளை மீறுதல் அல்லது அவற்றுக்கு மாறாக நடவடிக்கைகள் அமையும் பட்சத்தில் இத்துணைவிதிக்கு இணங்க முப்பது நாட்களுக்கு மேற்படாமல் காலத்தைக் காண்பிக்கும் அறிவித்தல் ஒன்றை தவிசாளரால் அனுமதிப்பத்திரம் பெற்றவரிடம் கையளிக்க வேண்டும். அனுமதிப் பத்திர நிபந்தனைகளை மீறுதல்

(2) இவ்வசனத்தின் கீழ் அறிவித்தல் ஒன்று அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதிகளுக்கு இணங்க செயற்படுவதற்காக மேலதிக காலத்தை வழங்குமாறு நியாயமான காரணங்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் கோரிக்கை மேற்கொள்ளப்படும் போது அதன் பேரில் தவிசாளர் மேலதிக காலத்தை வழங்கலாம். அவ்வாறு வழங்கப்படும் காலம் முதல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக அதிக பட்சம் பதினான்கு நாட்களுக்கு உட்பட்டதாக அமைந்திருக்க வேண்டும்.

35. மேலே 34 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் அல்லது மேலதிகமாக வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றவர் அறிவித்தலுக்கு ஏற்ப செயற்படத் தவறும் பட்சத்தில் உரிய அனுமதிப்பத்திரத்தை தவிசாளர் இரத்துச் செய்ய வேண்டும்.

36. இத்துணைவிதியில் எந்தவொரு விதிமுறையையும் மீறிச் செயற்படுவது அல்லது இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்பட வேண்டிய அனுமதிப்பத்திரத்தைப் பெறாமல் ஒரு தனியார் சந்தையை நடாத்துவது குற்றமாவதோடு அக்குற்றம் தொடர்பில் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்னர் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 255 உப வாசகம் 153(2) இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். தண்டனை

37. இத்துணைவிதியின் சொற்கள் தொடர்பில் விளக்கம் அவசியமாயின்; பொருள் கோடல்

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையாகும்,

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையின் சமகாலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் அல்லது அப்பதவி நிலையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு நபரைக் குறிக்கின்றது.

"அதிகாரமளிக்கப்பட் உத்தியோகத்தர்" என்பது நகர சபையின் தவிசாளரிடம் இருந்து எழுத்து மூலமாக எவரேனும் ஒரு அதிகாரியைக் குறிக்கின்றது.

"மாசு" என்பது உணவு அல்லது உணவுப்பொருட்களில் மாசுப் பொருட்கள் நுழைதல் அல்லது ஏற்படுதலைக் குறிக்கின்றது.

"சுத்தம்" என்பது உணவுச் சங்கிலியின் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் உணவின் பாதுகாப்பு மற்றும் பொருத்தத்தை உறுதிப்படுத்த அனைத்து தரங்கள் மற்றும் நடைமுறைகளைக் குறிக்கின்றது.

38. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள வடிவம் மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழிகள் இடையான ஒவ்வாமை

**உப ஆவணம்**

........................ **ஆண்டுக்கான விற்பனை அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்.**

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. தனிப்பட்ட முகவரி :
03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
04. தொலைபேசி இலக்கம் :
05. சந்தை நடத்திச் செல்லப்படும் இடத்தின் முகவரி :
06. தொடங்கிய ஆண்டு :
07. வியாபாரத் தலத்தின் முகவரி :
08. கிராம சேவையாளர் பிரிவு :
09. ஆதனவரி இலக்கம் :

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின்படி நடாத்தப்படும் தொழில், வர்த்தகத்துக்கு .......................... ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான தற்போதைய சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

திகதி :

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

அலுவகப் பயன்பாட்டுக்கு

வருமான ஆய்வாளர்,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி :

.........................................
செயலாளர்

---

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை.

திகதி : ...........................................
வருமான ஆய்வாளர்

சுகாதார வைத்திய அதிகாரி,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி :

.................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணைவிதி மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கையிடுகின்றேன்.

திகதி :

.................................
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

---

செயலாளர்,

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் உரிய இடத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை

(பரிந்துரைக்கவில்லை எனின் அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக).

திகதி :

.................................
சுகாதார வைத்திய அதிகாரி

EOG 01 - 0195/ 7

---

**நகர சபையில் பராமரிக்கப்படுகின்ற குளியல் இடங்கள் தொடர்பான துணைவிதி**

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பராமரிக்கப்படும் பொதுக் குளியல் இடங்களை ஒழுங்குபடுத்தும் முறை மற்றும் கட்டுப்பாட்டுக்காக இயற்றப்பட்டதாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் பொதுக் குளியல் இடங்கள் தொடர்பான துணைவ- ிதி என அழைக்கப்படும். குறுகிய பெயர்

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 157(9) ஆவது உப வாசகம் என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

4. நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) அமைந்துள்ள பொது மக்கள் குளிப்பதற்கான பொதுக் குளியல் இடங்கள் இருக்கும் அல்லது பராமரிக்கப்படுகின்ற நதி ஒன்று, கால்வாய் தொடர்புடைய பொதுக் குளியல் இடங்கள், கிணறு, நீர்த்தடாகங்கள் இத்துணைவிதியின் செயற்பாட்டுக்கு ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும்.

5. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நதியொன்று, கால்வாயொன்று, நீரோடையொன்றுக்கு ஏற்ப பொதுக் குளியல் நிலையங்கள் உள்ளபோது அவ்வனைத்து பொதுக் குளியல் இடங்கள் தொடர்பாகவும், பொதுக் குளியல் இடங்களை நடாத்திச் செல்லல்

(1) அவ்விடம் பொதுக் குளியல் இடம் என்ற சொற்கள் கொண்ட அறிவிப்புப் பலகையுடன் பராமரிக்கப்பட வேண்டும்.

(2) பொதுக் குளியல் இடங்களாகப் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படக்கூடிய பகுதி அத்துடன் பாதுகாப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றிய பொதுக் குளியல் இடத்தை இலகுவாகப் பயன்படுத்தும் விதத்தில் அறிவித்தல்கள் காண்பிக்கப்பட வேண்டும்.

(3) குளிப்பதற்காக தண்ணீருக்குள் வருவதற்காக தேவையான இடங்களில் படிக்கட்டுக்கள் கட்டப்பட்டு இருக்க வேண்டியதோடு அமை சீமெந்து மூலம் வழுக்காத வகையில் அமைக்கப்பட வேண்டும்.

(4) முடியுமான போதெல்லாம் ஆண்கள் மற்றும் பெண்கள் தனித்தனியாக தண்ணீருக்குள் இறங்குவதற்கான நுழைவாயில்கள் காணப்பட வேண்டும்.

(5) உரிய இடம் அமைந்துள்ள நதியில், கால்வாயில், நீரோடையில் அல்லது ஏரியில் பாதுகாகக்கப்பட்ட எந்த மரத்துக்கும் இயற்கையான இடத்துக்கும் அவ்விடத்தின் பராமரிப்பு காரணமாக ஆபத்து எவையும் ஏற்படக் கூடாது.

(6) சாதாரணமாக குளியல் இடம் பயன்படுத்தப்படுவது காலை 06.00 மணி முதல் பின்நேரம் 07.00 மணி வரையானதாகக் காணப்பட வேண்டியதோடு இரவு வேளைகளில் அவ்விடத்தில் மின் ஒளி வழங்கப்பட்டால் மாத்திரமே இரவில் நிலையம் பயன்படுத்தப்பட வேண்டும்.

(7) ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உடை மாற்றும் இடங்கள் தனித்தனியாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(8) இடத்தைச் சூழ எந்த வகையிலும் மதுபானப் பாவனை தடை செய்யப்பட வேண்டியதோடு அது பற்றிய அறிவித்தல்கள் பிரசித்தமாகக் காணும் வகையில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

6. இடத்தின் பயனர்களுக்கு மேலதிக சேவைகளை நகர சபையினால் வழங்கி பராமரிக்க முடியுமானதோடு அவ்வாறு வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளுக்காக நகர சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படு அறவிடப்படுகின்ற கட்டணம் சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும். *கட்டணம் நிர்ணயித்தல்*

7. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுக் குளியல் கிணறு அல்லது பொதுக் குளியல் தடாகமாக இருக்கும் போது, அத்தகைய அனைத்து பொதுக் குளியல் கிணறு, தடாகங்கள் தொடர்பிலும், *பொதுக் கிணறு அல்லது தடாகமாக இருக்கும் போது*

(1) பொதுக் குளியல் இடங்கள் என்ற சொற்களைக் கொண்ட விளம்பரப் பலகையின் கீழ் அவை பராமரிக்கப்பட வேண்டும்.

(2) கிணறு அல்லது தடாகத்தைச் சூழ தரைமட்டத்தில் இருந்து குறைந்த பட்சம் 0.609 மீட்டர் உயரமான ஒரு பாதுகாப்புச் சுவர் காணப்பட வேண்டியதோடு தரைமட்டத்தில் இருந்து கீழே அதே ஆழத்துக்கு கிணறு அல்லது தடாகத்தைச் சூழ நிலையாக சீமெந்து அல்லது கருங்கல் கொண்டு பாதுகாப்பாக அமைக்கப்பட வேண்டும்.

(3) முடிந்த போதெல்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக பொதுக் குளியல் இடம் பராமரிக்கப்பட வேண்டியதோடு ஆண்களும் பெண்களும் ஆடை மாற்றத் தனித்தனி இடங்கள் காணப்பட வேண்டும்.

(4) குளிக்கப் பயன்படுத்தப்படும் நீர் மீண்டும் கிணறு அல்லது தடாகத்துக்குள் கசிந்தோடாமல் தடுக்கும் வகையில் அவை எளிதில் வெளியேறுவதற்குரியவாறு வடிகாண்கள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(5) குளிப்பதற்காக தண்ணீரைப் பயன்படுத்த தேவையான வாளி மற்றும் கயிறு காணப்பட வேண்டியதோடு வாளி துருப்பிடிக்காத வகையில் வர்ணம் பூசப்பட்டிருக்க வேண்டும்.

8. மேலே 5 ஆவது மற்றும் 7 ஆவது வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்கும் வகையில் குளிக்கும் இடங்களை பராமரிப்பதற்கு நகர சபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காகவும் அது தொடர்பில் தவிசாளருக்கு தேவையான அறிவுரைகளை வழங்குவதற்காகவும் பொதுக் குளியல் இடங்களைச் சுற்றியுள்ள குடியிருப்பாளர்களின் பிரதிநிதிகள் நிலையில் அமைந்த குழுக்களை அனைத்து பொதுக் குளியல் இடங்களுக்கும் தவிசாளர் நியமிப்பது சட்டபூர்வமானதாகும். குழு நியமனம்

9. (1) மேலே வாசகம் 8 இன் கீழ் இயங்கும் குழுக்களின் செயற்பாடுகள் பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்.

(அ) பொதுக் குளியல் இடத்தைப் பயன்படுத்துபவர்கள் இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு இணங்க நடக்கவில்லை என அவதானிக்கப்படும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அவை பற்றி தவிசாளருக்கு அறிவித்தல்.

(ஆ) பொது மக்கள் நலனுக்காக உரிய இடம் தொடர்பில் காணப்படும் தேவைகள் எவை எனக் கண்டறிய தவிசாளருக்கு அறிவுரை மற்றும் அறிக்கை வழங்குதல். குழுவின் செயற்பாடுகள்

(இ) பொதுமக்கள் சுகாதார நலனுக்காக குளியல் தடாகம் மற்றும் கிணறு போன்றன சுத்தம் செய்யப்பட வேண்டி எழுகின்ற சந்தர்ப்பங்களில் உழைப்பின் பங்களிப்புடன் தொடர்புடைய பணிகளை நிறைவேற்றுதல்.

(ஈ) நீர் ஆதாரங்கள் மற்றும் அதனைச் சூழவுள்ள தாவர முறைமைகளையும் பாதுகாக்க முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் அது தொடர்பில் தவிசாளருக்கு அறிவுரை வழங்குதல்.

(2) (I) வது உப வாசகத்தில் உள்ள செயற்பாடுகளுக்காக நியமிக்கப்படும் குழு சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒன்று கூட வேண்டியதோடு கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தவிசாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

10. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுக் குளியல் நிலையத்தை ஒழுங்குமுறையாக நடாத்துவதற்கு தேவையான அனைத்து படிமுறைகளையும் மேற்கொள்வது நகர சபைக்குரிய செயலாகும்.

11. (1) இலங்கை முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழ் ஏதேனும் தொற்று நோய் நிலைக்குரிய காரணங்கள் காணப்படும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரையின் பேரில் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எந்தவொரு பொதுக் குளியல் இடத்தையும் பயன்படுத்துவதை தவிசாளர் தடை செய்வது சட்டபூர்வமானதாக அமைய வேண்டும். தொற்றுநோய் நிலை அறிவிக்கப்பட்ட நிலையில் பயன்பாட்டைத் தடை செய்தல்

(2) அத்தகைய விதி பொதுக் குளியல் நிலையத்தில் பிரசித்தமாக காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

12. தவிசாளர் இத்துணைவிதியின் 11 வது வாசகத்தின் கீழ் பயன்பாடு தடைசெய்யப்பட்ட பொதுக் குளியல் இடத்தில் அத்தகைய தடை செய்யப்பட்ட கால எல்லைக்குள் எந்தவொரு நபரும் குளிப்பது அல்லது வேறு எந்தவொரு செயற்பாட்டுக்கும் குளியல் இடத்தைப் பயன்படுத்துவது கூடாது.

13. (1) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சுவாசம் அல்லது தொடுகை மூலம் தொற்று நோய் பரவுவதற்கு காரணமான விடயங்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அதுபற்றி சுகாதார வைத்திய அதிகாரி வழங்கும் அறிவுரைகளைக் கவனத்திற்கொண்டு பொதுக் குளியல் இடத்தில் குளிக்கும் நபரொருவர் அல்லது அதனைப் பயன்படுத்துபவர் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உள்ள விதிகள் தவிசாளரால் அறிவிக்கப்பட வேண்டும்.

(2) மேலே துணை வாசகம் (1) இன் கீழ் உள்ள அனைத்து விதிகளும் பொதுக் குளியல் இடத்தில் பிரசித்தமாகக் காணும் வகையில் ஒட்டப்பட வேண்டியதோடு பொதுக் குளியல் இடத்தைப் பயன்படுத்தும் அனைவரும் அவ்விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

14. ஏதேனும் தொற்று நோயினால் அவதிப்படுகின்ற அல்லது ஒரு தொற்று நோய்க்குப் பின் தனிமைப்படுத்தல் கால எல்லைக்குள் வாழுகின்ற அல்லது அத்தகைய நோய் நிலை தொடர்பில் சந்தேகிக்கப்பட்டு தனிமைப்படுத்தல் கால எல்லைக்குள் வாழுகின்ற எவரும் பொதுக் குளியல் இடத்தை பயன்படுத்தக் கூடாது.

கழிவுகளை அகற்றல்

15. பொதுக் குளியல் இடத்தில்,

(அ) உருவாகும் கழிவுகள் அகற்றப்படுவது தவிசாளரால் பரிந்துரைக்கப்பட்ட விதத்தில் அமைய வேண்டியதோடு எந்த ஒரு கழிவும் வெளிப்புறச் சூழலுக்கு வெளியீடு செய்யப்படக் கூடாது.

(ஆ) எவரேனும் ஒருவர் அணிந்துள்ள முகக்கவசம் அல்லது கையுறைகள் போன்றனவற்றின் அகற்றலுக்காக அதற்கென குறித்தொதுக்கப்பட்ட இடத்தில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட வேண்டியதோடு அவ்வாறான கழிவுகள் அத்தகைய குப்பைத்தொட்டிகளிலேயே அகற்றப்பட வேண்டும்.

(இ) சேகரிக்கப்படும் கழிவுகள் நகர சபையினால் செயற்படுத்தப்படும் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் படி அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

16. பொதுக் குளியல் இடம் ஒன்றில் இருந்து ஒரு போதும் குடிநீர் எடுக்கப்படக் கூடாது.

17. பொதுக் குளியல் இடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலப் பகுதியில் நகர சபை மூலம் வழங்கப்பட்ட கழிப்பறைகள் மற்றும் கழிவறைகள் இருந்தாலேயன்றி, அவற்றைத் தவிர ஒரு பொதுக் குளியல் இடத்தைச் சூழ எவரும் சிறுநீர் கழிக்கவே மலம் கழிக்கவோ கூடாது.

18. பொதுக் குளியல் இடமாகப் பராமரிக்கப்படும் இடத்தில் வாகனங்கள் கழுவுதல், இயந்திரங்கள் கழுவுதல், விவசாய இரசாயனங்கள் தெளிக்கும் கருவிகளைக் கழுவுதல் போன்றவை மேற்கொள்ளப்படக்கூடாது.

விலங்குகளைக் குளிப்பாட்டுதல் மற்றும் விலங்குகள் நுழைவது தடை என்பது

19. பொதுக் குளியல் இடமாக ஒதுக்கப்பட்ட இடமொன்றில் அல்லது அதன் அண்மையில் எந்த விலங்கையும் குளிப்பாட்டுவதோ அல்லது கழுவுவதோ அல்லது அத்தகைய இடத்துக்குள் விலங்கொன்றை நுழைவிப்பதோ கூடாது.

20. பொதுக் குளியல் இடத்துக்கு அருகில் வீணாக எவரும் அங்கும் இங்கும் நடமாடக் கூடாது.

21. ஏதேனும் பொதுக் குளியல் இடம் இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க உள்ளதா என்பதை தவிசாளரால் அதிகாரமளிக்கப்படும் அதிகாரியால் நிரந்தரமாக பரிசோதிக்க வேண்டும்.

22. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக பொதுக் குளியல் இடத்தில் செயற்படுவது அல்லது அதன் விதிமுறைகளை மீறுவது குற்றமாவதோடு அக்குற்றம் சரியான அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் அக்குற்றம் தொடர்பாக 255 ஆவது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153(2) ஆவது உப வாசகத்தின் கீழ் குறிப்பிடப்படும் அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். தண்டனை

23. சொற்கள் தொடர்பில் அர்த்தம் தேவைப்பட்டாலன்றி, பொருள் கோடல்

“நகர சபை” என்பது சீதாவகபுர நகர சபையாகும்.

“தவிசாளர்” என்பது சீதாவகபுர நகர சபையின் சமகாலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் அல்லது அப்பதவி நிலையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு நபரைக் குறிக்கின்றது

“சுகாதார வைத்திய அதிகாரி” என்பது நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அவ்வாறான பதவியை வகிக்கும் நபராகும்

“அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்” என்பது தற்கால தவிசாளரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியாவார்.

25. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஒவ்வாமையெதுவுமிருப்பின் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழிகள் இடையான ஒவ்வாமை

EOG 01 - 0195/ 8

---

## மரக்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் இடங்கள் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் மரக்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் இடங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்துவதற்காகவும் மேற்பார்வை செய்தல், பரிசோதித்தல் மற்றும் கட்டுப்படுத்துதலுக்காக இயற்றப்பட்டதாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் மரக்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் இடங்கள் தொடர்பான துணைவிதி என அழைக்கப்படும். குறுகிய பெயர்

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபையானது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) என்பவற்றின் கீழ் அதிகாரம் கொண்டதாகக் காணப்படுன்றது.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) எந்த ஒரு நபரும் இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடம் இருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இல்லாமல் மரக்கறிகள், பழங்கள் விற்பனை செய்யும் நிலையமொன்றையோ அல்லது அவ்விற்பனைக்கான களஞ்சிய நிலையம் ஒன்றையோ நடத்திச் செல்லலாகாது.

அனுமதிப் பத்திரமொன்றுக் காக விண்ணப் பித்தல்

5. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றுக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் இத்துணைவிதியின் உப ஆவணத்தில் காணப்படும் விண்ணப்பப் படிவத்துக்கு ஏற்ப அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

6. மேலுள்ள வாசகத்தின் கீழ் அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் பொழுது அதற்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து குறித்த விண்ணப்பத்தை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதன் மூலம் அல்லது சபையினால் அனுமதிக்கப்பட்ட அளவில் மின்னஞ்சல் மூலமாக அனுப்புவதன் மூலம் தவிசாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அனுமதிப் பத்திரமொன் றுக்கான நிபந்தனைகள்

7. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களும் இதன் பின்னர் குறிப்பிடப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து அவ்வாறான நபர்களுக்கு தவிசாளர் அனுமதிப்பத்திரம் வழங்கலாகாது.

(1) வளாகத்துடன் தொடர்புடைய அனைத்து நிரந்தரக் கட்டடங்களும் நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் அல்லது வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் என்பவற்றின் விதிமுறைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(2) பூச்சிகள் மற்றும் புகைகள் தங்குதல், உள்நுழைதலைத் தடுக்கும் வகையில் நிரந்தரமாகக் கட்டப்பட்டிருக்க வேண்டியதுடன் உயிரினங்கள் தங்கியிராதவகையிலான பொருட்களைக் கொண்டு கட்டடம் கட்டப்பட வேண்டும்.

(3) வளாகம் இலகுவில் சுத்தம் செய்யக் கூடியவாறும் வழியில் நீர் தேங்காதவாறும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) வளாகத்தின் உள்ளக வடிவமைப்பு மரக்கறி மற்றும் பழங்களை எப்போதும் பரிசோதிப்பதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) கழுவக்கூடிய மற்றும் நீர்உட்புகாததாகவும் நீரை உறிஞ்சாத பொருட்களினாலும் கட்டடம் மற்றும் சுவர்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) ஒவ்வொரு கட்டுமானங்களிலுமுள்ள பூச்சிகள் தங்குவதற்கான துளைகளில் இருந்து வளாகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

(7) மரக்கறிகள் மற்றும் பழங்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் மேற்பரப்புக்கள் எளிதில் தொற்றுநீக்கும் மற்றும் எதிர்த்தாக்கம் விளைவிக்காத பொருட்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

(8) மரக்கறிகள் மற்றும் பழங்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் மேற்பரப்புக்கள் தொற்றுநீக்கிகள் மற்றும் சலவைப் பொருட்களுக்கு எதிர்த்தாக்கம் விளைவிக்காதவனவாகக் காணப்பட வேண்டும்.

(9) வளாகத்தில் மரக்கறிகள் மற்றும் பழங்களை வைப்பதற்கும் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும், குளிர்சாதன வசதிகள் காணப்படுவதோடு அவை குறித்த வெப்பநிலையில் பேணப்பட வேண்டும்.

(10) மரக்கறிகள் மற்றும் பழங்களை விற்பனைக்காக வைக்கும்போது குளிர்சாதன வசதிகள் காணப்படுவதோடு அவை குறைந்த வெப்பநிலையில் பேணப்பட வேண்டும்.

(11) மரக்கறிகள் மற்றும் பழங்களை வைக்கும்போது அல்லது களஞ்சியப்படுத்தி வைக்கப்படுமிடத்தின் மேற்பகுதி கூரை அல்லது கொங்கிறீட் மேற்பரப்பினாலானதாக இருக்க வேண்டும்.

(12) காற்றோட்டம் நன்றாக இருக்கும் வகையில் குளிரூட்டப்பட்டு அல்லது ஜன்னல்களும் ஏனைய திறப்பான்களும் கொண்டமைந்தவையாக வளாகங்கள் இருக்க வேண்டும்.

(13) வளாகத்தின் உள்ளக பகுதிகள் இலகுவில் சுத்தப்படுத்துமுகமாக கட்டப்பட்டிருக்க வேண்டும்.

(14) வளாகத்திற்குத் தேவையான நீர் வளாகத்திற்குள் அல்லது வெளியே இருந்து வழங்கப்பட வேண்டும் மற்றும் தொடர்ச்சியான நீர் விநியோகத்திற்காக நீரை சேமிக்க வசதிகள் இருக்க வேண்டும்.

(15) வளாகத்தில் காய்கறிகள் மற்றும் பழங்களை கழுவுவதற்காக தனியான இடமொன்று இருக்க வேண்டியதுடன் வளாகத்தில் நீர் தேங்கி நிற்காத வகையில் கட்டப்பட வேண்டும்.

(16) வளாகத்தில் உள்ள வடிகான்கள் மற்றும் கழிவுநீர்கள் என்பன கழிவுநீர்க் குழிக்கு அல்லது உறிஞ்சும் குழிக்கு அனுப்பப்பட வேண்டியதுடன் அவ்வாறான குழிகள் நீர் ஆதாரத்தில் இருந்து குறைந்த பட்சம் 15.25 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(17) வளாகத்தினுள் பணிபுரியும் ஊழியர்கள் தொடர்பாக,

(அ) தங்கியிருந்து வேலை செய்பவர்களாகவிருந்தால், தங்குவதற்கு உரிய சுகாதார வசதிகளுடன் போதுமான அறைகள் காணப்பட வேண்டும்.

(ஆ) போதுமான கழிப்பறை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(18) வளாகத்தில் காய்கறிகள் மற்றும் பழங்களை வைப்பதற்கான அல்லது சேமித்து வைப்பதற்கான தளங்கள் தரையில் இருந்து குறைந்தது 28 செ.மீ உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

8. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் கோரி சமர்ப்பிக்கப்படும் உரிய விண்ணப்பப் படிவம் பெறப்பட்டு பதினான்கு நாட்களுக்குள் தவிசாளர் — அனுமதிப் பத்திரம் வழங்குதல்

(1) வாசகம் 7 இன் கீழ் உள்ள தகவல்களுக்கு இணங்கும் பொழுது விண்ணப்பதாரிக்கு வளாகத்துக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

(2) வாசகம் 7 இன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்கவில்லையாயின் காரணங்கள் குறிப்பிடப்பட்டு உரிய விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்பட வேண்டும்.

9. (1) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்காக அறவிடப்படும் கட்டணம் அடிப்படைச் சட்டத்தினால் குறிப்பிடப்படும் விதிகளுக்கு அமைவாக சபையினால் ஆண்டு தோறும் நிர்ணயிக்கப்பட்டு அறவிடப்படும் கட்டணமாக அமைந்திருக்க வேண்டும். — அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்

பரிசோதனைக் கான கட்டணம்

(2) அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பாக உரிய இடத்தினை பரிசோதனை செய்வதற்காக சபையினால் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு அறவிடப்படுவது சட்பூர்வமானதாக அமைய வேண்டும்.

செல்லுபடியாகும் காலம்

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப முன்னரே இரத்துச் செய்யப்படாதவிடத்து அனுமதிப்பத்திரம் உரிய ஆண்டின் டிசம்பர் முப்பத்தியோராம் திகதி வரை செல்லுபடியாகும்.

அனுமதிப் பத்திரமொன்று செல்லுபடி யாவதற்கான நிபந்தனைகள்

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

(1) இலங்கை முழுவதும் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்பாக தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தொற்று நோய் நிலை அறிவிக்கப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஏதேனும் தொற்றுநோய் நிலை ஏற்படுவதற்கான விடயங்கள் உள்ளது என திருப்தியடையும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் விதிகள் எவையுமிருப்பின் அவ் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் பராமரிக்கப்படல் வேண்டும்.

(2) வளாகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிமுறைகளின் கீழ் அதற்கேற்ப தொற்றுநோய் நிலை அறிவிக்கப்பட்டுள்ள எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கேற்ப சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுரைக்கேற்ப தவிசாளர் ஏற்படுத்தும் அனைத்து விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

(3) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒரு தொற்றுநோய் நிலை ஏற்படும் ஆபத்துள்ளது என சந்தேகத்தை ஏற்படுத்தும் விடயங்கள் காணப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேவைகளை எதிர்பார்த்து வளாகத்துக்குள் வருகை தரும் அனைத்து நபர்களுக்கும் ஏற்றவாறு வழங்கப்பட்ட சுகாதார அறிவுரைகளுக்கு ஏற்றவாறு வளாகத்துக்கு வருகை தரும் பட்சத்தில் மாத்திரமே அந்த வளாகத்தில் சேவை வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(4) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் நிலைக்கான ஏதேனும் விடயங்கள் காணப்படும் நிலையில் அல்லது அவ்வாறான ஆபத்து நிலவும் நிலையில் அதிலிருந்து பாதுகாப்புப் பெற பின்பற்றவேண்டியவை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியினால் அல்லது அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தவிசாளரால் பரிந்துரைக்கப்படும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வளாகத்தினுள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டியதோடு அவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன என அனுமதிப்பத்திரம் பெற்றவர் திருப்தி அடைய வேண்டும்.

(5) வளாகத்தினுள்ள உள்ள அனைத்து வடிகாண்களும் எளிதில் வடிந்தோடக்கூடிய வகையில் பராமரிக்கப்பட வேண்டியதுடன் ஏதாவது கழிவு நீர், கழிநீர்த் திரட்டுகள் போன்றன அங்கீகரிக்கப்பட்ட முறைகளின் படி கழிவுநீர்க் குழிகள், உறிஞ்சும் குழிகள் அல்லது மத்திய அகற்றல் பிரிவுக்கு அனுப்பப்பட வேண்டியதுடன் அவற்றினால் ஏற்படும் மாசுக்களைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

(6) வளாகத்தினுள் உள்ள எந்தவொரு வடிகாணும், கழிவுநீர்க் குழாய்களும் எந்த ஒரு வகையிலும் பொது வடிகாணுக்கு அல்லது வெளிப்புறப் பகுதிக்கு அனுப்பப்படக் கூடாது.

(7) வளாகத்தினுள் கழிவு நீரோட்டம் அல்லது கழிவு நீர் அகற்றல் போன்ற விடயங்களால் வெளிப்புறத்தில் எந்தவொரு துர்நாற்றமும் எழாதபடி பராமரிக்கப்பட வேண்டும்.

(8) விற்பனைக்காக அல்லது களஞ்சியப்படுத்தப்படும் காய்கறிகள் அல்லது பழங்களின் மேல் பொருத்தப்படும் மின் குமிழ்கள் பாதுகாப்பான நிலையில் இருக்க வேண்டியதுடன் அவை மூடப்பட்டிருக்க வேண்டும்.

(9) வளாகத்தினுள் சேரும் கழிவுகளை சபை செயற்படுத்தும் கழிவு முகாமைத்துவ முறைமையின் படி அத்துடன் அதற்கு பொருத்தமான எழுதப்பட்ட சட்டங்களின் படி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(10) வளாகத்தில் சேரும் கழிவுகளை அனுமதிப்பத்திரம் பெற்றவரே முகாமைத்துவம் செய்தால் அப்பிரதேசத்துக்கு பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தகவல் வழங்க வேண்டியதோடு அவர் வழங்கும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அது தொடர்பில் செயற்பட வேண்டும்.

(11) வளாகத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக எடையிடும் கருவிகளைப் பயன்படுத்தும்போது, அது நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(12) வளாகத்தில் பழம் சாப்பிடுவதை எளிதாக்க தயார்படுத்தல் அல்லது பழச்சாறுகளைத் தயாரித்தால், அவ்வாறு செய்யும் ஒவ்வொருவரும் கையுறைகள் மற்றும் தலைக்கவசங்களைப் பயன்படுத்தாமல் பழங்களைத் தயார் செய்தல் அல்லது பழச்சாறுகளைத் தயாரிப்பது போன்ற எந்தவொரு செயலிலும் ஈடுபடக் கூடாது.

(13) நுகர்வுக்காக பழங்களைத் தயார் செய்யும்போது, அதற்கான நீர், பனிக்கட்டி ஆகியன எப்போதும் குடிநீரிலிருந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

(14) நுகர்வோர் முன்னிலையில் அன்றி நுகர்வுக்கு பழங்களை முன்கூட்டியே தயார் செய்யக்கூடாது.

(15) காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனைக்கு வைக்கப்படும் போது, அவை கெட்டுப்போன காய்கறிகள், பழங்களுடன் கலக்காமல் இருக்க வேண்டும்.

(16) வளாகம் எல்லா நேரங்களிலும் சுத்தமான நிலையில் பேணப்பட வேண்டும் என்பதுடன் எந்தவொரு காரணத்திற்காகவும் வளாகத்தில் காய்கறிகள் அல்லது பழங்களை மாசுபடுத்தும் வகையில் எந்தவொரு செயற்பாடும் வளாகத்தில் மேற்கொள்ளப்படக்கூடாது.

(17) அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டம் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் தொற்று நோய் நிலை சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய தவிசாளரால் பிரகடணப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அல்லது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்று நோய் நிலையொன்று காணப்படுகின்றது என சந்தேகிக்க உறுதியான காரணிகள் காணப்படும் நிலையில் இவ் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக அத்தொற்று நோய் நிலையைக் கட்டுப்படுத்த சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் அல்லது தவிசாளரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப வளாகம் பராமரிக்கப்பட வேண்டும்.

(18) வளாகத்தினுள் குவியும் கழிவுகள் அகற்றப்பட முன்னர் தேக்கி வைத்திருக்கும் பொழுது அவை வளாகத்தினுள் பயன்படுத்தப்படும் ஏனைய பொருட்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் மற்றும் அவற்றின் மூலம் மரக்கறிகள் மற்றும் பழங்கள் மாசடைவதற்கான காரணிகள் உருவாகாத வகையிலும் பராமரிக்கப்பட வேண்டும்.

(19) வளாகத்தில் எந்தவொரு வகையிலும் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகள் வளர்க்கப்படலாகாது.

(20) வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தொடர்பில் சுகாதாரக் கண்காணிப்பு முறைமை ஒன்று அமைக்கப்பட்டு அவர்களுக்கு அவசியமான சுகாதார அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறை ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(21) வளாகத்தினுள் காசாளராகப் பணிபுரியும் நபர்கள் எப்போதும் தமது கைகளை தொற்றுநீக்கி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

(22) எந்தவொரு தொற்றுநோய் நிலையின் பொழுதும் சமூகத்தில் கையுறைகள் மற்றும் முகக்கவசங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படும் நிலையில் வளாகத்துக்குள் வருகை தரும் எந்த நபரும் அகற்றும் முகக் கவசம் மற்றும் கையுறைகள் வளாகத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள மூடப்பட்ட வாளிகளில் அகற்றப்பட வேண்டியதோடு அவ்வாறு அகற்றப்படும் கழிவுகள் வேறு கழிவுகளுடன் கலக்காத வண்ணம் சபை அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தும் கழிவு முகாமைத்துவத் திட்டத்துக்கு ஏற்றவாறு அவ்வாறான கழிவுகள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

(23) எந்த ஒரு தொற்று நோயினாலும் அவதிப்படும் அல்லது அவ்வாறான நோய் இருப்பதாக சந்தேகிக்கப்படும் நிலைகளில் உள்ளவர்களை அல்லது அத்தகைய நோயின் காவிகளைக் கொண்டுள்ள நிலையில் உள்ளவர்களை அல்லது பாதிக்கப்பட்ட காயங்கள், தோல் நோய்த் தொற்றுக்கள் அல்லது பரவுகின்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ள எவரையும் வளாகத்தில் சேவைகளுக்கு பயன்படுத்தக்கூடாது.

(24) பரவுகின்ற நோய்நிலை அல்லது தொற்றுநோய் எனக் கருதக்கூடிய வகையில் காரணிகள் கொண்ட எவரையும் வளாகத்தினுள் எந்த பொழுதிலும் அனுமதிக்கக் கூடாது.

(25) வளாகத்தினுள் உள்ள ஊழியர் ஒருவருக்கு பரவுகின்ற அல்லது தொடுகையால் பரவுகின்ற அல்லது தோல் நோய் நிலை காணப்பட்டால், அது பற்றி அனுமதிப்பத்திரம் பெற்றவர் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்க வேண்டியதோடு அத்தகைய அறிவிப்பின் பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்படும் தனிமைப்படுத்தல் அறிவுரைகளுக்கு ஏற்ப வளாகத்தில் உள்ள அனைவரும் செயற்பட வேண்டும்.

களப் பரிசோதனை மற்றும் மாதிரிகளைப் பெறல்

12. இத்துணைவிதியில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப வளாகம் காணப்படுகின்றதா என்பதை பரிசோதிக்க தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்லது வேறொரு அதிகாரி வளாகத்தினுள் எந்தவொரு நியாயமான நேரத்தில் வளாகத்தினுள் நுழைவது மற்றும் தேவையான மாதிரிகளைச் சேகரிப்பது என்பன சட்டபூர்வமானவையாகும்.

13. அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் தொற்றுநோய் நிலை பரவலுக்கான காரணிகளைக் கருத்திற்கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைக்கமைய தவிசாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய வளாகத்தை பராமரிப்பது தொடர்பில் அனுமதிப்பத்திரம் பெற்றவர் உடன்படிக்கை ஒன்றை தவிசாளருடன் மேற்கொள்ள வேண்டியதுடன் தவிசாளர் அவ்வுடன்படிக்கையின் பிரதி ஒன்றை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்க வேண்டும்.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

14. (1) இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற வளாகம் இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் அல்லது அவற்றுக்கு முரண்பாடாக செயற்படும் சந்தர்ப்பங்களில் இத்துணைவிதிக்கு இணங்க முப்பது நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியைக் குறிப்பிட்டு தவிசாளர் உரிய அறிவித்தல் ஒன்றை அனுமதிப்பத்திரம் பெற்றவரிடம் கையளிக்க வேண்டும்.

(2) இவ்வசனத்தின் அடிப்படையில் ஒரு அறிவித்தல் அனுமதிப்பத்திரம் பெற்றவருக்கு வழங்கப்பட்ட நிலையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மேற்கொள்வதற்கு மேலதிக கால அவகாசம் வழங்குமாறு அனுமதிப்பத்திரம் பெற்றவர் நியாயமான காரணத்தைக் குறிப்பிட்டு கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பத்தில் தவிசாளர் மேலதிக கால அவகாசம் வழங்க முடியும். அவ்வாறு வழங்கப்படும் மேலதிகக் காலம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்துக்கு மேலதிகமாக பதினான்கு நாட்களுக்கு உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

15. மேலே வாசகம் 14 இல் குறிப்பிடப்பட்ட கால எல்லை அல்லது நீடிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றவர் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு ஏற்ப நடக்கத் தவறும் பட்சத்தில் உரிய அனுமதிப்பத்திரம் தவிசாளரால் இரத்துச் செய்யப்படும்.

தண்டனை

16. இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்படும் அனுமதிப்பத்திரம் இன்றி அல்லது இத்துணைவிதியின் கீழ்க்குறிப்பிடப்படும் விதிமுறைகளை மீறி வளாகமொன்றை நடத்துவது குற்றமாவதோடு அக்குற்றம் நீதவான் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் உப வாசகம் 153(2) இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், அவ்வாறு குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட பின்னர் அதனை மேலும் மீறுவது மற்றும் மீறல் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் போது தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் வழங்கிய அறிவித்தலின் பின்னரும் தொடரும் மீறலின் ஒவ்வொரு நாட்களுக்கும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் உப வாசகம் 153(2) இன் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

17. இத்துணைவிதியின் கீழ் பயன்படுத்தப்படும் சொற்கள் தொடர்பான பொருள்கோடல் அவசியமாயின் இத்துணைவிதியில், பொருள் கோடல்

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையாகும்,

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையின் தற்காலதத்தில் தவிசாளர் பதவி வகிக்கும் அல்லது அப்பதவியின் கடமைகளை நிறைவேற்றும் நபராகும்,

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அவ்வாறான பதவியை வகிக்கும் நபராகும்,

"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் பணிபுரியும் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்ற பதவியை வகிக்கும் நபராகும்,

"அனுமதிப்பத்திரம் பெற்றவர்" என்பது இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற ஒரு நிறுவனம் அல்லது ஒரு நபராகும்,

"அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பது தற்காலத்தில் சீதாவகபுர நகர சபையின் தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகும்,

"மாசடைதல்" என்பது உணவுப்பொருட்களில் ஏதாவது மாசாக்கும் பதாரத்தம் உள்நுழைவது அல்லது ஏற்படுவதாகும்,

"கிருமி நாசினி" என்பது உணவின் பாதுகாப்பு அல்லது பொருத்தப்பாட்டை குறைக்காமல் சூழலில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை பௌதீக அல்லது இரசாயன முறைகளின் மூலம் குறைப்பது.

"நியாயமான நேரம்" என்பது அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட வேலை இடம் பெறும் எந்த நேரமும்.

"அடிப்படைச் சட்டம்" என்பது நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தைக் குறிக்கின்றது.

18. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் ஏற்படின், இதன் சிங்கள வடிவம் முதன்மையாகக் கருதப்படும். மொழிகள் இடையான ஒவ்வாமை

## உப ஆவணம்

## ......................... ஆண்டுக்கான மரக்கறிகள் /பழங்கள் விற்பனை நிலையம் ஒன்றினை நடாத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம்

01. விண்ணப்பதாரியின் பெயர் :

02. தனிப்பட்ட முகவரி :

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

04. தொலைபேசி இலக்கம் :

05. விற்பனை நிலையத்தின் பெயர் :

06. வியாபார தலத்தின் முகவரி :

07. கிராம அலுவலர் பிரிவு :

08. ஆதனவரி இலக்கம் :

09. வியாபாரப் பெயர் பதிவுசெய்யப் பட்டிருப்பின் அதன் பதிவு இலக்கம் :

10. விற்பனை நிலையத்தின் முகாமையாளர் அல்லது பிரதிநிதியின்,

I. பெயர் மற்றும் தனிப்பட்ட முகவரி

II. தேசிய அடையாள அட்டை இலக்கம்

III. கையடக்க தொலைபேசி இலக்கம் : நிலையான தொலைபேசி இலக்கம் :

11. வியாபாரம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட திட்டத்தின் இலக்கம் மற்றும் அதன் திகதி (திட்டத்தின் நிழற்பிரதியை இணைக்கவும்)

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்கூறப்பட்ட வியாபாரம் நடாத்தப்படும் இடத்திற்கு ............................ ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தைக் கோருகின்றேன்.

திகதி :-

....................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

அலுவகப் பயன்பாட்டுக்கு

வருமான ஆய்வாளர்,
பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:-

................................
செயலாளர்

---

செயலாளர்,
அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை

திகதி:-

....................................
வருமான ஆய்வாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி:-

................................
செயலாளர்

---

சுகாதார வைத்திய அதிகாரி,

துணைவிதி மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்து அறிக்கையிடுகின்றேன்.

திகதி:-

................................
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்

செயலாளர்,

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் உரிய இடத்துக்கு அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை
(பரிந்துரைக்கவில்லை எனின் அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக).

திகதி:- ................................
சுகாதார வைத்திய அதிகாரி

EOG 01 - 0195/ 9

---

## பொதுச்சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை முகாமைத்துவம் செய்வது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதி

1. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுச்சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை முகாமைத்துவம் செய்வதற்காக மற்றும் கட்டுப்படுத்துவதற்காக இயற்றப்பட்ட துணை விதியாகும்.

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையில் பொதுச்சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான துணைவிதி என அழைக்கப்படுகின்றது. குறுகிய பெயர்

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 153 ஆவது பிரிவு அத்துடன் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 157(9) என்பவற்றின் கீழ் நகர சபை அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது.

4. சீதாவகபுர நகர சபையின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர்) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) செயற்படுத்தப்படுகின்ற பொதுச்சுகாதார வசதிகளை உரிய முறையில் மற்றும் பொருத்தமாக வகையில் பேணுவதற்கு தேவையான அனைத்து வழிமுறைகள் பற்றியும் தவிசாளர் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கேட்டறிந்து அவற்றை செயற்படுத்த வேண்டும்.

5. சபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பனவற்றை மேற்கொள்வதில் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் என்போர் சபையின் அதிகாரிகளாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சபையின் அதிகாரிகளாக கருதப்பட வேண்டும்.

அதிகாரங்களை ஒப்படைத்தல்

6. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுமக்களின் சுகாதாரத்துடன் தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு எழுத்தில் உள்ள சட்டத்தின் கீழ் தவிசாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் உரிய எழுத்தில் உள்ள சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தவிசாளர் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களிடம் ஒப்படைக்கலாம்.

சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார் வைக்கு உட்படுத்தப் படல்

7. அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தினுள் செயற்படும் பின்வரும் தொடர்புடைய பொதுச்சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளின் முகாமைத்துவம் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(1) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள்

(2) தாய் மற்றும் சேய் சுகாதார சிகிச்சை நிலையம்

(3) பொதுக் கழிப்பறை மற்றும் சிறுநீர் அகற்றல் வசதிகள்

(4) பொதுச் சந்தைச் சேவைகள்

(5) மடுவங்களின் பராமரிப்பு

விதிமுறை உருவாக்கம்

8. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்திற்கு மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப் பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் எந்தவொரு நோய்த்தொற்று நிலையும் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்திற்கேற்றவாறு அறிவிக்கப்பட்டுள்ள நிலை அல்லது அக்கட்டளைச்சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடிய வேறு எந்தவொரு விதிமுறையும் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துக்கு ஏற்றவாறு செயற்படும் சந்தர்ப்பத்தில் சபையினால் பேணப்படுகின்ற பொதுச் சேவைகளைப் பராமரிப்பது தொடர்பான அனைத்து விதிகளும் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளின் பிரகாரம் தவிசாளரால் செயற்படுத்தப்பட வேண்டும்.

மாதாந்த அறிக்கை

9. சபையினால் வழங்கப்படும் பொதுச் சுகாதார வசதிகளை முறைசார் வகையில் பராமரிப்பதற்கு அடுத்த மாதம் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிந்துரைகள் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்று மற்றும் கடந்த மாதம் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுச்சுகாதாரத்துடன் தொடர்புடைய பொதுச்சுகாதார வசதிகளை முகாமைத்துவம் செய்வதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றும் சுகாதார வைத்திய அதிகாரியினால் ஒவ்வொரு மாதமும் சபைக்கு மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10. எழுதப்பட்ட சட்டத்தால் வழங்கப்பட்ட பொதுச்சுகாதாரம் பற்றி அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சபையினால் அதிகாரம் செலுத்துவதில் அதற்குரிய சுகாதாரப்பாதுகாப்பு வசதிகளைக் கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பனவற்றுக்கு ஏற்றவாறு அனைத்துப் படிமுறைகள் தொடர்பிலும் சுகாதார வைத்திய அதிகாரி தனது பரிந்துரையை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

11. ஏதேனும் நோய்த்தொற்று நிலை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படுகின்றது எனத் திருப்தியடைய போதுமான விடயங்கள் காணப்படும் நிலையில் அல்லது தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகளின் கீழ் தொடர்புடைய நோய் நிலை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துக்கு பொருத்தமானதாக அமையும் நிலையில் அவற்றுக்கு ஏற்றவாறு அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் செயற்படுத்தப்பட வேண்டிய சுகாதாரப்பாதுகாப்பு படிமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை தவிசாளர் சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெற்று தவிசாளர் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

12. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் தொடர்புடைய ஒரு நோய்த்தொற்று நிலை அல்லது ஏதாவது தொற்றுநோய் நிலையாகக் கருத்திற்கொள்ளக் கூடிய ஒரு நோய் நிலை அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பரவும் நிலைக்குரிய விடயங்கள் ஏற்பட்டுள்ள பொழுது அல்லது அத்தகைய தொற்று நோய் ஏற்படுவதை தடுப்பதற்காக சேகரிக்கப்படவேண்டிய தகவல்கள் மற்றும் தரவுகள் தன்னிடம் அல்லது தான் குறிப்பாக அதிகாரமளிக்கும் ஒரு அதிகாரியிடம் வழங்கப்பட வேண்டும் என சுகாதார வைத்திய அதிகாரி எந்த ஒரு நபருக்கும் பரிந்துரை செய்வது சட்டபூர்வமானதாகும். தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

13. மேலே 12 ஆவது வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரை ஒன்றின் பொழுது அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் உரிய காலத்துக்குள் நியமிக்கப்பட்டவருக்கு உரிய முறையில் வழங்குவது பணிக்கப்பட்டவரின் கடமையாகும்.

14. மேலே 12 ஆவது வாசகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிப்புரை ஒன்றுக்கு ஏற்ப பணிப்புரை பெற்ற ஒருவர் மேலே குறிப்பிடப்பட்ட 12 ஆவது வாசகத்துக்கு ஏற்ப செயற்படவில்லையாயின் அது குற்றமாகுவதோடு அக்குற்றம் தொடர்பில் குறித்த நபர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டால் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அத்தியாயத்தின் 153 (2) ஆவது உப பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும். தண்டனை

15. இத்துணைவிதியின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை செயற்படுத்துவதில் பொருத்தமான ஏற்பாட்டை சபையின் பிரதான அலுவலகத்தில் மற்றும் அனைத்து துணை அலுவலகங்களிலும் பேணுவது தவிசாளரின் கடமையாகும்.

16. இத்துணைவிதியின் சொற்கள் தொடர்பில் விளக்கம் அவசியம் எனில், இத்துணைவிதியில் -

"சபை" என்பது சீதாவகபுர நகர சபையைக் குறிக்கின்றது

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையின் தவிசாளரை அல்லது அப்பதவியின் கடமைகளை நிறைவேற்றுபவரை குறிக்கின்றது

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது அந்நகர சபைப் பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரி பதவியை வகிக்கும் நபரைக் குறிக்கின்றது.

"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் உரிய சேவையில் ஈடுபடுகின்ற நகர சபை அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்டுள்ள பொதுச் சுகாதார பதவிநிலையினைக் கொண்டிருப்பவர்களாகும்.

"நபர்" என்பது குறிப்பிட்ட ஒரு நபரை அல்லது நபர் ஒருவரின் பெயரில் காணப்படும் எந்த ஒரு நிறுவனத்தையும் தொடர்பு கொள்ளும் போது நிறுனவத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக அல்லது முகாமையாளராக செயற்படும் ஒருவர் அல்லது அந்நிறுவனத்துக்காக செயற்படும் எவரையும் குறிப்பதாகும்.

17. இத்துணை விதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஒவ்வாமையெதுவுமிருப்பின் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

EOG 01 - 0195/ 10

## சீதாவகபுர நகர சபையின் அங்காடி வியாபாரிகள் தொடர்பான துணைவிதி

1. இத்துணைவிதி சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சுற்றித்திரிந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அங்காடி வியாபாரிகளை மேற்பார்வை செய்வது உள்ளிட்ட அதற்குரிய துணை விடயங்களைத் திட்டமிடுவதற்காக இயற்றப்பட்ட துணை விதியாகும்.

குறுகிய பெயர்

2. இத்துணைவிதியானது சீதாவகபுர நகர சபையின் அங்காடி வியாபாரிகள் பற்றிய துணைவிதி என அழைக்கப்படும்.

3. இத்துணைவிதியை இயற்றுவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 153 ஆவது வாசகம் மற்றும் அதனுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய உப வாசகம் 157(9) இன் கீழ் நகர சபை அதிகாரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளல்.

4. சீதாவகபுர நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் (இதன் பின்னர் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசம் என அழைக்கப்படும்) சுற்றித்திரிந்து பொருட்கள் அல்லது உணவு உட்பட எந்தவொரு பொருளையும் விற்கும் நபர் அதனை மேற்கொள்வதற்காக இத்துணைவிதியின் கீழ் தவிசாளரிடம் இருந்து அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்தல்.

5. (1) மேலே வாசகம் 4 இன் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்யும் அனைவரும் நகர சபையில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) இத்துணைவிதியின் கீழ் நகர சபையிலிருந்து அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவத்தை பெறும் போது அதற்காக அறவிடப்படும் கட்டணம் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும்.

அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள்.

6. அங்காடி வியாபாரிகளாக இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும் எவரும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாவிட்டால் தவிசாளர் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை வழங்கக் கூடாது.

(1) அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுபவர் அல்லது ஈடுபடுபவர்களின் அடையாளம் ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(2) வியாபாரத்தில் ஈடுபடுவதற்காக துவிச்சக்கர வண்டியொன்று, முச்சக்கர வண்டியொன்று வண்டில் ஒன்று அல்லது மோட்டார் வாகனமொன்று பயன்படுத்தப்பட்டால், அது தனக்காக அவ்வாறான செயலுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது அல்லது தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் வழங்கப்பட வேண்டும்.

(3) அங்காடி வியாபாரத்தின் பொழுது ஒலி பெருக்கிகள் பயன்படுத்தப்படுமாயின், அது தொடர்பாக அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிலையில் சம்பந்தப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரசபையிடம் இருந்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(4) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அங்காடி வியாபாரத்தில் ஈடுபட எதிர்பார்த்துள்ள இடங்கள் பற்றிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(5) அங்காடி வியாபாரத்தில் சமைத்த உணவுகள் விற்கப்படின் அது தொடர்பில் உணவுக் கையாள்கையில் ஈடுபடும் அனைவரும் பொருத்தமான சுகாதார நிலையில் உள்ளனர் என பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி இத்துணைவிதியின் இணை ஆவணத்தின் வடிவத்தில் அமைந்த தகவிணக்கச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும்.

7. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் அனுமதிப்பத்திரம் கோரப்படும் காலத்தின் விகிதத்துக்கு ஏற்ப அறவிடப்படவேண்டியதோடு அத்தகைய கட்டணங்கள் ஆலோசனை ஒப்புதல் மூலம் சபையினால் நிர்ணயிக்கப்பட்டு அறிவிக்கப்படும் கட்டணங்களாக அமைந்திருக்க வேண்டும். அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம்

8. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிக பட்ச செல்லுபடிக் காலம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைய வேண்டியதோடு, தொடர்புடைய அனுமதிப்பத்திரங்கள் குறிப்பிட்ட ஆண்டில் விண்ணப்பிக்கப்பட்ட காலப்பகுதிக்கு வழங்கப்படலாம்.

9. ஒவ்வொரு அங்காடி வியாபாரியும் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் போது உரிய அனுமதிப் பத்திரத்தை தன்னிடம் வைத்திருக்க வேண்டும்.

10. இத்துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்று இத்துணைவிதியின் விதிகளுக்கு ஏற்ப இரத்துச் செய்யப்பட்டால் அன்றி வழங்கப்பட்ட கால எல்லை வரை மாத்திரம் செல்லுபடியாகும்.

11. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப தமது வியாபாரத்தை நடத்த வேண்டும். அனுமதிப்பத்திரம் தொடர்பான நிபந்தனைகள்

(1) அங்காடி வியாபாரம் அல்லது விளம்பரம் காரணமாக பொது மக்களுக்கு சப்தம் அல்லது வளி மாசடைதல் ஏற்படக் கூடாது.

(2) (i) அங்காடி வியாபாரம் காரணமாக உருவாகும் கழிவுகள் எவையும் சுற்றியுள்ள சூழலில் வெளியிடப்படக்கூடாததோடு, அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நகர சபை செயற்படுத்தும் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் படி அனைத்துக் கழிவுகளும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

(ii) அனுமதிப்பத்திரம் பெற்றவரே உருவாகும் கழிவுகளை முகாமைத்துவம் செய்தால் அது சம்பந்தமான அறிக்கை ஒன்றை பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சமர்ப்பித்து உரிய ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

(3) இலங்கை முழுவதும் அல்லது அதன் பகுதியொன்றில் அல்லது அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் ஏதேனும் தொற்றுநோய் நிலையை ஏற்படுத்தும் விடயங்கள் காணப்படுகின்றது என அல்லது அது அவ்வாறே இடம்பெறும் என்ற ஆபத்து உள்ள சந்தர்ப்பத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவரது அறிவுரைக்கமைய தவிசாளர் செயற்படுத்தும் அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளுக்கு ஏற்ப தொடர்புடைய வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) இத்துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை அங்காடி வியாபாரத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தன்னிடம் வைத்திருக்க வேண்டியதோடு தவிசாளர், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் கோருகின்ற எந்தச் சந்தர்ப்பத்திலும் பரிசோதனைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

(5) அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அல்லது இலங்கை முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதியில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப அல்லது ஏதேனும் ஒரு தொற்று நோய் அல்லது பரவும் நோய் பரவுவதற்கு காரணங்கள் காணப்படுகின்ற நிலையில் அது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி வழங்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப அனுமதிப்பத்திரம் பெற்றவர் செயற்பட வேண்டியதோடு தனது ஊழியர்களும் அவ்வாறு நடந்துகொள்கின்றனர் என அனுமதிப்பத்திரம் பெற்றவர் திருப்தியடைய வேண்டும்.

(6) அங்காடி வியாபாரத்தின் கீழ் சமைத்த உணவு விற்பனை செய்யப்படுமாயின்,

(i) உணவை விற்பனை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன எந்தவொரு நச்சுப் பொருள், நாற்றம் அல்லது சுவைகளையும் வெளியிடாத பொருட்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய உபகரணங்கள், கருவிகள் துருப்பிடிக்காத பொருட்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டியதோடு அவற்றை தொடர்ச்சியாக சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் தொற்றுநீக்கிகளுக்கு தாக்குப் பிடிக்கும் வகையிலான பொருட்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ii) சுத்தத்துக்கு ஏற்படும் ஆபத்துக்களைத் தடுப்பதற்காக எளிதில் சுத்தம் செய்யும் வகையில் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தி சுத்தம் செய்யக்கூடிய வகையில் வடிவமைத்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

(iii) குளிரூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் அதற்கேற்ப களஞ்சியப்படுத்தல் மற்றும் வெப்பநிலை அளவிடும் உபகரணங்கள் அல்லது வெப்பநிலையைப் பதிவு செய்யும் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

(iv) வியாபாரத்தின் பொழுது சேகரிக்கப்படும் கழிவுகளை சேகரிக்க மூடப்பட்ட குப்பைத் தொட்டிகளை வைத்திருக்க வேண்டும். இருப்பினும், எவரேனுமொருவர் முகக் கவசங்கள், கையுறைகள் போன்றவற்றை அகற்றும் போது அவை அனைத்தையும் தனித்தனியாக ஏனைய கழிவுகளுடன் கலக்காத வகையில் அகற்றும் வகையில் மூடப்பட்ட குப்பைத்தொட்டிகளில் சேகரிக்க வேண்டும்.

(v) பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பன நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(vi) விற்பனையின் பொழுது பொதி செய்யப்பட்ட உணவுகள் மாசுபடுவதைத் தடுக்கும் வகையில் மற்றும் பூச்சிக் கொல்லிகள் உணவுடன் கலக்காத வகையில் வடிவமைத்து பராமரிக்கப்பட வேண்டும்.

(vii) நுகர்வோருக்கு உணவு பரிமாறும் வேளை உணவைப் பரிமாற பயன்படுத்துபவை அச்சந்தர்ப்பத்தில் மீண்டும் பயன்படுத்தாக ஒன்றிலிருந்து தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(viii) விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் எந்த வகையிலும் மாசடைதல் கூடாது.

(ix) பணத்தைப் பயன்படுத்திக்கொண்டு உணவைக் கையாளக் கூடாததோடு பணக் கொடுக்கல் வாங்கல்களுக்காக ஒரு தனி நபர் பணிக்கமர்த்தப்பட வேண்டும்.

(x) உணவைப் பிடிப்பதற்காக உலோகத்தில் அமைந்த கைபிடிகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

(7) அங்காடி வியாபாரம் பயணிகளுக்கு அல்லது வாகனப் போக்குவரத்துக்கு எந்தவித இடையூறையும் ஏற்படுத்தாத வகையில் அமைந்திருக்க வேண்டியதோடு,

(8) அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் பகுதிகளில் மாத்திரம் வியாபாரத்தில் ஈடுபடவேண்டியதோடு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட கால எல்லைக்கு அப்பால் எந்த வகையிலும் வியாபாரத்தில் ஈடுபடக் கூடாது.

(9) எந்த வகையிலும் பரவுகின்ற நோயினால் அவதிப்படுகின்ற ஒருவர் அல்லது பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது அத்தகைய நபர் ஒருவரைப் பராமரித்தவர் வியாபாரத்தில் அல்லது வியாபாரம் தொடர்பான உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடக் கூடாததோடு தேவையான சந்தர்ப்பங்களில் பயன்பாட்டுக்காக தொற்று நீக்கியினை வைத்திருக்க வேண்டும்.

(10) கசாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு விலங்கினது இறைச்சியும் அங்காடி வியாபாரம் மூலம் விற்பனை செய்யப்படலாகாது.

(11) எந்த ஒரு அங்காடி வியாபாரியும் நீண்ட காலத்துக்கு ஒரே இடத்தில் வியாபாரம் செய்யக்கூடாது.

12. இத்துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பினும் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அல்லது அதன் ஒரு பகுதியில் அல்லது ஒரு வீதியில் பரவும் நோயொன்று அல்லது தொற்றுநோயொன்று பரவும் நிலை அல்லது பரவக்கூடிய காரணங்கள் கொண்ட அபாயநிலை உள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி வழங்கும் அறிவுரைக்கேற்ப தவிசாளர் தீர்மானிக்கும் போது தவிசாளரால்,

(i) வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் செயற்படுவதை நிரந்தரமாகத் தடை செய்ய முடியும்.

(ii) வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் வியாபாரம் செய்யக்கூடிய பிரதேசங்களை மட்டுப்படுத்த முடியும்.

(iii) அனுமதிப் பத்திரத்தின் கீழ் செயற்படுவதைத் தற்காலிகமாகத் தடை செய்ய முடியும்.

13. அங்காடி வியாபாரிகள் விற்பனை செய்யும் உணவின், ஒரு பொருளின், அல்லது ஒரு பண்டத்தின் மாதிரியை தவிசாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அதற்குரிய விலையைக் கொடுத்து வாங்குவது சட்டபூர்வமானதாகுவதோடு எந்த ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றவரும் அதனை மறுக்கவோ அல்லது தடை செய்யவோ கூடாது. மாதிரிகளைப் பெற்றுக் கொள்வது.

14. இத்துணைவிதியின் விதிமுறைகளுக்கு முரணாக அல்லது மீறி எவரேனும் வியாபாரத்தில் ஈடுபட்டால் அல்லது இத்துணைவிதிக்கு இணங்க வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் புறக்கணிக்கப்பட்டால், இத்துணைவிதியின் 3 ஆவது பிரிவின் கீழ் தவிசாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தவிசாளர் இரத்துச் செய்வது சட்டபூர்வமானது.

15. இத்துணைவிதியின் கீழ்ப் பெறப்படவேண்டிய அனுமதிப்பத்திரம் பெறாமல் அங்காடி வியாபாரத்தில் ஈடுபடுவது மற்றும் செல்லுபடியான அனுமதிப்பத்திரம் இன்றி அங்காடி வியாபாரத்தின் ஈடுபடுவது குற்றமாவதோடு அக்குற்றம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட பின்னர் 255 ஆவது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153(2) ஆவது உப வாசகத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும். மீறுதல் தொடர்பான தண்டனை.

16. இத்துணைவிதியின் சொற்கள் தொடர்பில் விளக்கம் தேவைப்படுத்தப்பட்டாலன்றி இத்துணைவிதியில், பொருள் கோடல்.

"நகர சபை என்பது" என்பது சீதாவகபுர நகர சபையாகும்.

"தவிசாளர்" என்பது சீதாவகபுர நகர சபையின் சமகாலத்தில் தவிசாளர் பதவியை வகிக்கும் நபர் அல்லது அப்பதவி நிலையின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் ஒரு நபரைக் குறிக்கின்றது,

"சுகாதார வைத்திய அதிகாரி" என்பது நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்துடன் தொடர்புடைய சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவில் அவ்வாறான பதவியை வகிக்கும் நபராகும்

"பொதுச் சுகாதாரப் பரிசோதகர்" என்பது நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் பணிபுரியும் அல்லது சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்ற பதவியை வகிக்கும் நபராகும்.

"மாசடைதல்" என்பது உணவுப்பொருட்களில் ஏதாவது மாசாக்கும் பதாரத்தம் உள்நுழைவது அல்லது ஏற்படுவதாகும்.

"உணவுச் சுத்தம்" என்பது உணவுத் தயாரிப்பு செயன்முறையில் அதன் பாதுகாப்பு மற்றும் நுகர்வுக்கான தரம் என்பவற்றை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நிலைகள், படிமுறைகள் மற்றும் நடைமுறைகள் என்பதாகும்.

"அங்காடி வியாபாரம்" என்பது தன்னால் அல்லது ஒரு விலங்கின் உதவியுடன் அல்லது மோட்டார் வாகனத்தில் அல்லது வண்டில் ஒன்றில் அல்லது துவிச்சக்கர வண்டி ஒன்றில் அல்லது முச்சக்கர வண்டி ஒன்றில் பொருட்கள், உணவு அல்லது வேறு ஏதேனும் பண்டங்களை எடுத்துச் செல்லும் வியாபாரமாகும்.

"மோட்டார் வாகனம் என்பது" மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பொருளைக் குறிக்கின்றது.

17. இத்துணைவிதியின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்கள் இடையே ஒவ்வாமைகள் காணப்படும் சந்தர்ப்பங்களில் சிங்கள வடிவம் மேலோங்கி நிற்றல் வேண்டும். மொழிகள் இடையான ஒவ்வாமை.

## முதலாவது அட்டவணை

### .......................... ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்.

01. விண்ணப்பதாரியின் பெயர் :
02. தனிப்பட்ட முகவரி :
03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
04. தொலைபேசி இலக்கம் :
05. வர்த்தக வியாபாரத்தின் தன்மை :
06. கிராம அலுவலர் பிரிவு :

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி நடத்தப்படும் தொழில், வர்த்தகத்துக்கு ........................................ ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான தற்போதைய சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

திகதி :

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

அலுவகப் பயன்பாட்டுக்கு

வருமான ஆய்வாளர்,

பின்புறத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான உங்களின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை விரைவில் எனக்கு அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திகதி :

................................
செயலாளர்

---

செயலாளர்,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை

திகதி :

.......................................
வருமான ஆய்வாளர்

---

தவிசாளர்,
..................... பிரதேச சபை,

அனுமதிப்பத்திரம் வழங்க பரிந்துரை செய்கிறேன் /பரிந்துரை செய்யவில்லை

திகதி :

................................
செயலாளர்

அனுமதிப்பத்திரம் வழங்க அனுமதிக்கின்றேனர் /அனுமதிக்கவில்லை

திகதி :

...............................
தவிசாளர்,
.................. பிரதேச சபை

**இரண்டாம் அட்டவணை**

நகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அங்காடி வியாபாரிகளுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவச் சான்றிதழ்

........................... பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி................................ ஆகிய நான், தேசிய அடையாள அட்டை இலக்கம் ......................... கொண்ட திரு./செல்வி................... என்பவர் உரிய ஆய்வுகூடப் பரிசோதனைக்குப் பின்னர் உடலியல் ரீதியாகவும் பரிசோதிக்கப்பட்டதோடு அவர் / அவள் உணவுகளின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அற்றவர் என்பதையும் எதிர்கால அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரு பரவும் நோய் எந்த விதமான நோயினாலும் பாதிக்கப்பட்டவர் அல்ல எனவும் அவருக்கு தோல்த்தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட புண்கள் அல்லது வயிற்றுப் போக்கு எனும் நோய் நிலைகள் இல்லை எனவும் நான் சான்றளிக்கின்றேன்.

திகதி :-

..................................
சுகாதார வைத்திய அதிகாரி
(உத்தியோகபூர்வ முத்திரை)

EOG 01 - 0195/ 11